
உ

சிவமயம்

ஸ்ரீ மங்களாம்பிகை சமேத வாஞ்சீஸ்வரர் துணை

சைவசமய விளக்கம்



ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் ஆதீனம்

துலாவூர்

...றக்குடி வழி Pin. 630 206

உ

சிவமயம்

பதிப்புரை

உலகிலுள்ள சமயங்கள் அனைத்திலும் சைவசமயம் மேலானது, பழமையானது. சிவபெருமானால் ஸ்தாபிக்கப்பெற்றது, சைவசமயம். சைவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றுப் பூஜிக்கப் பெறுபவர் சிவபெருமான். ஆகையால் சிவத்திற்கும் சைவத்திற்கும் பேதமில்லை என்று ஆகமங்கள் கூறுகின்றன.

மேலும், *சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை* என்றும் *சைவசமயமே சமயம்* என்றும் ஆன்றோர் வாக்கினாலும், நன்கு உணரலாம். இப்படி எல்லாப்பெருமைகளும் பொருந்திய சமயத்திற் பிறந்தவர்கள் சிவாகமங்களில் விதிக்கப் பெற்றபடியும், சைவசமய நூல்களில் விதிக்கப்பெற்றபடியும் நாம், நம் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வது அவசியமாகும்.

நான் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் இருக்கும்போது சுவாமிகளிடம் சிவதீட்சை பெற்றுக்கொண்டேன். அப்போது நீ இதை **ஜெபம் செய்துகொண்டுவா** என்றும் நீ **நல்லா வருவாய்** என்றும் சொன்னார்கள். அதன்படி குருவருளால் நான் நல்ல நிலைக்கு வந்துள்ளேன். துலாவூரிலுள்ள நகரத்தார் பெண்கள் குருசாமிகளிடம் உபதேசப் பதிவெண் 1859, நாள் 6-5-98 சைவசமயதீட்சை பெற்றுக்கொண்டேன்; அநுட்டான முறைகளை நன்றாகப் பழகிக்கொண்டேன். சிவமூலமந்திர ஜெபத்தை கணக்கின்றிச் செய்து மன ஆறுதலையும்; அமைதியையும்; நிம்மதியையும் பெற்றுள்ளேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வாக்கிற்கிணங்க இதைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டுமென்று என் குருநாதரிடம் கேட்டேன்; அவர்களும் கூட்டங்களிற் பேசுவதற்காகத் தயார்செய்த குறிப்புகளை தேடிஎடுத்துக் கொடுத்து **சைவசமய விளக்கம்** என்று பெயர் வைக்கலாம் என்றார்கள்.

சைவ சமய விளக்கம் என்ற இந்த நூலை 8-10-2000 எனது குருநாதர் அவர்களின் 59 ஆவது ஆண்டு தொடக்க விழா மலராக வெளியிடப் பெறுவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை 14-10-2000 மஹாகுருபூஜையன்று வெளியிடப்பெறுகிறது. பிழை திருத்தம் செய்து, தலைப்புகளை வரிசைப்படுத்திக் கொடுத்து உதவிய ப. மாசிலாமணித்தேசிகர் இளையகுமாரர் குருநாதன் M.A., M.Ed., தமிழாசிரியர் (ஓய்வு) அவர்களுக்கும், ஆறுமுகம் தேசிகர் அவர்கள் மகன் **பாலசுப்பிரமணியன்** B.Lit., அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய முனைவர். கு. **சுந்தரமூர்த்தி** அவர்களுக்கும் இப்புத்தகத்தை நல்ல முறையில் பதுப்பித்துக் கொடுத்த காரைக்குடி ஸ்ரீ மாரி பிரிண்டர்ஸ் உரிமையாளர் **SP. வைரவன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
ஸ்ரீ. இரா. வ. சிவக்குமார்
K.V. நகர், செக்காலைக் கோட்டை.

நாள் : 31-8-2000
இடம் : காரைக்குடி

உ

திருச்சிற்றம்பலம்

பேராசிரியர், முனைவர் கு. சுந்தரமூர்த்தி MA., Phd.,
அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம்: மயிலாடுதுறை

அணிந்துரை

ஞானநூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமில்லாப் பொருள்தனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை

என்னும் ஞானநூல் கூறுகின்றன. இச்சீரிய வழிபாட்டை இடையறாது செய்துவரும் ஞானநிலையங்களே திருமடங்களாகும்.

தமிழகச் சைவாதீனங்கள் பதினெட்டில் ஒன்று நாம் அருள்மிகு நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் ஆதீனப் பெருமடமாகும். இத்திருமடத்தில் 29-ஆவது குருமஹா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள்; சீலத்திரு நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். இவர்கள் சீரிய தவ ஒழுக்கமும், மேதக்க சீலமும் உடையவர்கள். நகரத்தார் இனத்தவர்களுக்கு சிவதீட்சை வழங்கி அருளுபதேசம் செய்துவரும் கடப்பாடுடையவர்கள்.

இத்தகைய மேலான சீலத்தால் நம்சைவ சமுதாயத்தைப் பற்றிய பல அரிய செய்திகளைத் தொகுத்து அனைவருக்கும் விளங்குமாறு இச்சிய நூலை வழங்கியுள்ளார்கள். இவ்வரிய நூலில் காணும் செய்திகள் இந்து சமயம், சைவ சமயம், கடவுளின் தன்மை, பிராமண நூல்கள், முக்கியதத்துவக் கொள்கை, சைவசமய ஆசாரியர்கள், சந்தான ஆசாரியர்கள், சமய நுழைவுக்கிரியை, சிவதீட்சையின் பெருமை, தீட்சைகளும் அவற்றின்மார்க்கங்களும், சிவமூலமந்திரச் சிறப்பு, சமயச்சின்னங்கள், குருவின் பெருமை, சீடர்களின்கடமை, மனிதப்பிறவியின் மாண்பு, கடவுள், ஆன்மாக்கள், கடவுள் வழிபாடு, இருவினை, சைவன் யார்?, பிராமணர் யார்?, நகரத்தார் யார்?, குலம் காத்தல், குருசங்கமசேவை, தத்துவங்களின் பெயர்கள், எப்போது எதை எப்படிச் செய்யவேண்டும், கடவுள்யார்?, சரீர இலக்கணம், சரீரத்திரையம், கடவுளும் உயிர்களும், முப்பொருள் உண்மை, பதியியல், பசுவியல், பாசவியல், வேதாகமவியல், தோத்திர சாத்திரவியல், சைவ பேதவியல், திருநீறு, உருத்திராக்ஷம், ஸ்ரீபஞ்சாச்சரம், சிவலிங்கவியல், நித்தியகருமவியல் என்பவாம்

பொதுவாக அனைவருக்கும் சிறப்பாக நகரத்தார் பெண்பாலர்களுக்கும் சிவதீட்சை வழங்கிவரும் தகவால் மேற்கண்ட அரிய செய்திகள் பலவும் நுண்மையும், ஒண்மையும் உடையனவாய்த் திகழ்கின்றன. இவ்வரிய நூலை வழங்கியிருக்கும் குருமூர்த்திகளுக்குத் தமிழ்ச்சைவ உலகம் என்றும் நன்றிக் கடப்பாடுடையதாகும்.

கதிவாழ்க் வேதநல் ஆகமம் வாழ்கநற் கண்மணிஉன்
பதிவாழ்க சைவம் திருநீறும் கண்டியும் வாழ்க அருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்க நற்கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த தேசிகனே

திருச்சிற்றம்பலம்

குரு முதல்வர் சற்குரு ஸ்ரீ




ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகசுவாமிகள்

கி. பி. 913-943

துலாவூர்-ஆதீனம்

தற்போதுள்ள சுவாமிகள்



29-ஆவது குருமஹாசந்நிதானம்

கயிலைமணி சிவத்திரு

ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய

ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

மடாதிபதி - துலாவூர் மடம்

சிவமயம்

சைவசமய விளக்கம்

உ

சிவமயம்

சைவ சமய விளக்கம்

1. இந்து சமயம்

இந்திய நாட்டின் சமயமாததால் இந்து சமயம் என்றும், சிந்து நதிக்கரையில் வாழ்ந்த ஆரியர்கள் இவர்களை இந்துக்கள் என்றும் அழைத்தனர். பிறஉயிரின் துன்பம் கண்டு வருந்துவோன் இந்து என்றும், **இலங்கும் உயிரின் உடல் அனைத்தும் ஈசன் கோயில்** எனக்கண்டு எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும், என்பதை அடிப்படையாக் கொண்ட மதமே இந்து சமயமாம். இந்திய நாட்டிலுள்ள வேத வழிப்பட்ட சமயங்களைக் குறிக்கத் தற்போது இந்துசமயம் என்ற சொல் கையாளப்பட்டுவருகிறது.

ஒரு நாட்டின் பெயரையோ, ஒரு ஆற்றின் பெயரையோ கொண்டு விளங்குவது இந்து சமயமெனில், தெய்வீக சமயமாகிய இந்து சமயத்திற்கு அப்பெயர் எள்ளளவும் பொருந்தாது. இந்து சமயமென்பதற்கு அன்புச்சமயமென்று பொருள். இது மற்ற சமயங்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியது. இந்துசமயம் என்ற சொல்லால் சைவம்-வைணவம்-சுமார்த்தம் மத்துவம் இன்னும் சில மதங்களையும் சேர்த்துப் பொதுவாகச் சொல்லப்பெறுகிறது. இந்து சமயத்திற்கென வழிகாட்டிகள் சிலர்தோன்றி நமது நாட்டின் **புராதன சமயமான சைவ சமயம்** இன்னதுஎனத் தெரியாதவாறு பலவகைப் பிரச்சாரங்களால் குழப்புகின்றனர், இந்து சமயப் பிரச்சாரத்தில் சைவசமயம் இன்னதென்று புலப்படுவதில்லை. சிவன்கோவில்களில் மட்டும் மதக்கலப்படத்தையும் ஆக்கிரமிப்பையும் உண்டுபண்ணுகிறது.

வெளிநாட்டில் தோன்றி இந்திய நாட்டிற்கு வந்து குடியேறிய இஸ்லாமிய மதமும், கிறித்தவ மதமும் நம் நாட்டு இந்து சமய மக்களின் அறியாமையையும், வறுமையையும் பயன் படுத்திக் கொண்டு தங்கள் தங்கள் சமயங்களை வளர்க்க முயற்சி செய்து வருகின்றனர். இந்துக்கள் தங்கள் சமயங்களில் உள்ள வெறுப்பினாலோ, பிற சமயங்களில் உள்ள கவர்ச்சியினாலோ மதம் மாறவில்லை. பொருளாதாரம், பெண், வேலை வாய்ப்பு, பிற வசதிகளைத் தேடி மதம் மாறுகின்றனர். இந்த நிலையை நீடிக்க விட்டால் நாட்டிற்கே ஆபத்து வந்து சேரும். குடும்பக் கட்டுப்பாடும் இந்து சமயத்தவர் வளர்ச்சியை பாதிக்கச்செய்யும். இந்துக்கள் தமது மதத்தையும் ஜாதியையும் குலப்பெருமையையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவசியம். இந்துக்களின் சமய நெறியினை வகுத்துரைக்கும் நூல் வேதம் எனப்படும். வேதவழிபாட்டு சமயத்தை வைதீக சமயம் என்போம். வேதத்தில் சூரியன், அக்கினி, வாயு, வருணன், முதலிய பல தெய்வங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சிவபரம்பொருளே முதன்மையும், தலைமையும் உடையது என்பதை விளக்கியுள்ளார்கள்.

சிவபெருமானை வழிபடும் சைவ சமயமே மிகப்பழமையானது என்பதை ஹரப்பா, மொகஞ்சதாரோ, போன்ற இடங்களில் காணக்கிடைத்த அகழ்வாய்வுப் பொருள்களாலும், வேத, ஆகம, புராண இதிகாசங்களாலும் நன்கு தெளியலாம். மேலும் திருக்கயிலாயம், கேதாரம், அமர்நாத், போன்ற இடங்களில் சிவலிங்கமே உள்ளது. சக்தியை தனித்து பிரித்து வழிபாடு செய்தது பிற்கால நிலை. சக்தியை இணைத்து வழிபட்டது முற்கால நிலை. திருமுறை ஆசிரியர்கள் கணபதியையும், முருகனையும், அம்பாளையும் துதிக்கும்போது, சிவபெருமானோடு இணைத்தே துதித்து வழிபாடு செய்தமையை அவர்கள் அருளிய பதிகங்களே சான்று பகர்கின்றன.

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான் -என்று அப்பர்அடிகள் அருளியுள்ளார்கள்.

சிவத்தை வழிபடும் **சைவம்**, சக்தியை வழிபடும் **சாக்தம்**, கணபதியை வழிபடும் **காணாபத்தியம்**, முருகனை வழிபடும் **கௌமாரம்**, திருமாலை வழிபடும் **வைணவம்**, பிரம்மாவை வழிபடும் **பிராமணம்**, இது பிற்கால நிலை இவை அனைத்தும் சைவத்தின் உட்பிரிவுகளே என்பதும் வரலாற்றாய்வால் உணரலாம். எந்தச்சமயத்திலிருந்தும், எந்தக்கடவுளை வழிபட்டாலும், அது சிவபரம்பொருளையே அடையும் என்பது சைவக் கருத்தாகும். உதாரணமாக எந்த ஆற்றில் ஓடும் நீரும் முடிவில் கடலையே சென்று அடைவது போல, எல்லாச் சமயங்களும் ஒரு பரம்பொருளையே அறிவிக்கின்றன, என்பது வேதவாக்கியம். அதனால்தான் அருணந்தி சிவமும்,

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர் -என்று அருளியுள்ளார்கள்.

2. சைவ சமயம்

உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் சைவசமயம் மேலானது. சைவசமயத்தின் தாயகமான ஒழுக்கம் கொலை புலை நீக்கி எல்லா உயிர்களிடத்தும் அன்பு வைத்து வாழ்தலாகும். இனி நமது ஒப்பற்ற சைவ சமயத்தின் மாண்பையும், அது நமக்களிக்கும் சிறப்பையும் பார்ப்போம்.

இன்றைய மக்கள் பின்பற்றிவருகிற சமயங்கள் பலவற்றிலும் மிகவும் தொன்மையானது, பரந்த நோக்குடையது, தனியொரு மனிதரால் தோற்றுவிக்கப்பெறாதது, இதுவாகும் இதுவாகாது என்னும் பிணக்கில்லாதது, எல்லாச் சமயத்தாருடைய கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்வது, பிற சமயத்தவரும் இன்றைய விஞ்ஞானிகளும் கண்டுகொள்ளாத சில அரிய, பெரிய உண்மைகளையும், தத்துவங்களையும் கொண்டு, எம்மதத்தவரையும் நாளடைவில் அவற்றைக் காணுமாறு செய்து, ஒப்புக்கொள்ளச் செய்யும் தன்மையுடையது. சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்ற வேத சிவாகமங்களையும் சைவ சமய அருளாளர்களால் அருளிச் செய்யப் பெற்ற 12 திருமுறைகளையும், 14 சாத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு நிலைபெற்றது, சைவ சமயம்.

எல்லாச் சமயத்தாருடைய கருத்துக்களையும் வரவேற்று. அவற்றின் உண்மைகள் சைவசமயத்தின் ஒருபகுதியே என்பதைச் சுட்டிக் காட்டி அவற்றை ஒப்புக்கொண்டு, அவற்றில் சொல்லப்பெறாத அரிய பெரிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

ஆனால் சைவசமயத்திலோ யார் எந்தச்சமயத்தைச் சார்ந்திருந்தாலும், எந்த தெய்வத்தை அல்லது எந்தக் குருநாதரைக் கொண்டிருந்தாலும், அருவம், அருவுருவும், உருவமாகிய மூன்றில் எதை என்ன விதமாக வழிபட்டாலும் அம் மூன்றில் எதை எவ்விதம் பாவித்தாலும், எல்லோருக்கும் பலன் உண்டு என்றும் அந்தப் பலனைக் கொடுக்கிற தெய்வம் மற்ற தெய்வங்களைப் போல் பிறப்பு இறப்பு இல்லாததும், வேதனைப்படாததும், மேல்வினை செய்யாததுமான பரம்பொருள் ஒன்றே என்றும், அதுவே அவரவர்களுக்குரிய பலனைக் கொடுத்தருளும் என்கிறது.

சைவ சமயச் சிறப்பு

யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர், மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படும், இறக்கும், பிறக்கும், மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவையில்லாதான் அறிந்து, அருள் செய்வான் அன்றே

–சிவஞானசித்தியார் 115

இதிலிருந்து பிறமதத்தவர்களுடைய வழிபாட்டு முறைகள் எல்லாம் நமக்கு உடன்பாடுடையன என்றும், பிறசமயங்களை மதிப்பதுடன் தன் மேம்பாட்டை அது உணரச்செய்கிறது. அவரவர் தெய்வத்தையே வழிபடலாம், எல்லாச் சமயங்களும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன எனச்சொல்லுகிறது. புதிதாக எந்த ஒரு தெய்வத்தையும் உண்டாக்கி வழிபட்டாலும் அந்த வடிவத்தில், அவர் விரும்பியபடி வருபவர் சிவபெருமானே எனச் சைவ சமயம் கூறுகிறது. பிற சமயத்தவரை வலிந்து இழுக்காதது, சைவசமய மாத்திரமேயாம். மற்ற சமயத்தவர்கள் ஏனைய சமயத்தவர்களைத் தங்கள் சமயத்திற்கு இழுப்பதே தமது பெரிய முயற்சியாகக் கொள்பவர்கள்.

பிறசமயங்கள் 24 தத்துவங்களோடு நிற்க, சைவ சமயம் 36 தத்துவங்களைக் கொண்டு விளங்குகிறது. தனியாக விருப்பம்போல் வழிபாடு செய்யும் சுதந்திரமுண்டு சிவாகமத்தில் விதிக்கப்பெற்றபடி தக்க ஞானாசாரியரை அடைந்து, சைவ சமய தீட்சையைப் பெற்று சைவ சமயத்தைச் சார்ந்தவராகி வாழவேண்டுவதும், இன்றியமையாததாகும். சைவசமய நெறியில் பிறப்பு வேற்றுமை இல்லை, ஆண், பெண் வேற்றுமை இல்லை, இவர் தேவர், அவர் தேவர் என்ற மயக்கமில்லை, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று திருமந்திரம் (2104) கூறுகிறது.

சைவத்தின் மேன்மை

எல்லா ஆன்மாக்களும் மோட்சத்தை பெறும் என்று சொல்வது சைவசமயம் மாத்திரமேயாம். மற்றசமயத்தவர்கள் தங்கள் தங்கள் சமயத்தவர்களே மோட்சத்தை அடைவார்கள் என்றும், வேறு சமயத்தவர்கள் நித்திய நரகத்தை அடைவார்கள் என்றும், தங்கள் சமயமே கடவுளால் ஆக்கப்பெற்றது என்றும், மற்ற சமயங்கள் கெட்ட சமயங்கள் என்றும் பொருந்தாப் பொய்யுரைகள் சாற்றுகின்றனர்.

ஆன்மாக்கள் ஆணவமென்னும் நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் என்றும், அவைசெய்யும் பிழைகள் யாவும் அந்த நோயினால் வருவனவென்றும், ஆன்மாக்கள் இயல்பாகவே நல்லவை என்றும், கடவுள் அந்நோயைத் தீர்க்கும் வைத்தியநாதர் என்றும், அவர் ஆன்மாக்களுக்கு ஊட்டும் இன்பதுன்பம், அந்நோயைத் தீர்க்கும் மருந்துகள் என்றும் சொல்வது சைவ சமயமேயாகும். மற்ற சமயங்கள் மனிதர்கள் இயல்பாகவே கெட்டவர்கள் என்றும், கடவுள் அவர்கள் செய்யும் குற்றத்துக்காக தண்டிக்கும் நீதிபதி என்றும் கூறும்.

கடவுள் ஒருவர் உண்டு என்பதற்குப் பிரமாணமும், கடவுள் இலக்கணமும், உயிர்கள் பல உண்டு என்பதற்குப் பிரமாணமும் உயிர்களது இலக்கணமும், உயிர்களுக்கு பாசம் அனாதியாகவே உண்டு என்பதற்குப் பிரமாணமும், அதன் இலக்கணமும், அவை ஞானத்தை உணரும் முறையும் ஆன்ம சுத்தியும், பாச நீக்கமும் ஏற்படுவதற்குச் செய்யவேண்டிய சாதனைகளின் விளக்கமும், சிவப்பேறு பெறும் முறையும், அப்பேறு பெற்ற சீவன் முத்தர்களின் தன்மையையும் கூறுகின்ற தனித்தமிழ் நூல், தமிழகத்தில் திருவெண்ணை நல்லூரில் சைவவேளாள மரபில் வாழ்ந்து வந்த மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பெற்ற சிவஞான போதமாகும்.

சைவ வாழ்க்கை

நாம் விரும்பியது கிடைத்தால் மனத்திலே இன்பம் உண்டாகிறது. நாம் சர்க்கரைப் பொங்கல் சாப்பிட விரும்பும்போது அது கிடைத்தால் இன்புறுகிறோம். மதுவருந்த விரும்புகிறவன் அதைக் குடிக்கும்போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நமக்குக் கிடைக்காவிட்டாலும், நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பிவிட்டானாயில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றான்.

இப்படியின்றி நாம்விரும்பிய ஒன்று கிடைக்காவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. எனக்கோ என்னைச் சேர்ந்தவர்க்கோ, என்னுடைய பொருள்களுக்கோ, இடர் வந்தால் துக்கம் உண்டாகிறது. யாராவது இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகிறது. ஏதாயினும் இடர் வரப்போகிறது என்று தெரிந்தால் பயமுண்டாகிறது(அச்சம்). சைவ வாழ்க்கையிலே துன்பத்திற்கோ, துக்கத்திற்கோ, கோபத்திற்கோ இடமில்லை. நான் விரும்பிய பொருள் கிடைக்காவிடின் துன்பமில்லை, எனது கப்பல் கவிழ்ந்து போனாலும் துக்கமில்லை, என் குழந்தை இறந்து போமென்று அஞ்சுவதில்லை, என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும், கண்டித்தலுமேயன்றி கோபித்தலில்லை. நம் சைவசமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கிறோம், இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் *சிவபெருமான்* ஆதலால் அவருக்கு *வைத்தியநாதன்* என்று பெயர்.

நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு, ஆனாலும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்கமாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு. ஆனால் வைத்தியநாதராகிய சிவபெருமான் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடைக்காவிடின், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமறபோனதைப்பற்றி நாம் மகிழ்ச்சி அடையவேண்டும். நோயாளி விரும்பாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்.

வேப்பஎண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான். பெரிய கொப்பளத்தைக் கத்தியினாலே கீறி, வேதனையை நீக்குகிறான். அதுபோல சிவபெருமானாகிய வைத்தியநாதர் நாம் விரும்ப மாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய நோயையும், மனவேதனைப் படச்செய்தாலும் நம்மைப் பீடித்திருக்கும் ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழவைத்தற்கேயாம். ஆதலால் நம் முயற்சிகளைக் கடந்து நாம் வெறுப்பவைகள் நம்மை வந்து அடைந்தாலும், நாம் மனவேதனைப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காக கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றிக் கவலைப்படாமலிருத்தல் நலம். எனது கப்பல் கவிழ்ந்தாலும், குழந்தை இறந்து போனாலும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. **எல்லாம் அவன் செயலே. அவர் செய்வதெல்லாம் நன்மையே** என்ற நம்பிக்கையுடன் உறுதியாக இருந்தால் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம்.

துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை என்னுடைய கப்பல் கவிழ்ந்தாலும், தேடிய பொருள் நட்டத்தில் தீர்ந்தாலும் எனக்கு யாராவது கெடுதல் செய்ய வரும்போதும், கோபம் கொள்ளாமல் அவனைத் தடுத்தாலும், குழந்தையானது கொடிய நோய்வாய்ப்பட்டாலும் அஞ்சுவதின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்துபோனால் பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணமே என்பதை கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்கள் அல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

சைவ ஒழுக்கங்கள்

சைவ ஒழுக்கங்களுள் இன்றியமையாதது திருநீறு அணிதல். அதை அணியும் போது *சிவ சிவ* என்று சொல்லுதலும், அப்போது சிவபெருமானை நினைத்தலும் அவசியமானவை.

சைவ குடும்பத்தில் பிறந்தவர் என்றால் சைவசமய தீட்சையைப் பெறுவதும், தீட்சைக்கேற்ற நெறிமுறைகளை கடைப்பிடித்து வருதல். திருவைந்தெழுந்தை ஆறுதலாகவும், அமைதியாகவும், அன்போடும், ஒவ்வொருநாளும் தவறாமல் ஓதுதல், மேலும் தேவாரம், திருவாசகம் ஓதுதல்.

விநாயகர், சுப்பிரமண்யர், வைரவர், வீரபத்ரர், சக்தி, நடராஜர் ஆகிய உருவத்திருமேனிகளுள் ஒன்றிலே விஷேடப் பற்று வைத்து நாள்தோறும் தியானித்துத் தோத்திரம் சொல்லி வணங்குதல். மாதா, பிதா, குரு, உயிருக்கு உயிரான சிவபரம்பொருள். இவர்கள் எல்லாம் வணங்குதற்குரியர், சிவனடியார்களது திருநாட்களைக் கொண்டாடி அவர்களுடைய சரித்திரங்களைப் படித்துச் சொல்லி அல்லது கேட்டு அவர்களையும் வழிபடல்.

சைவசமய முறைப்படி நாள்தோறும் அல்லது வாரந்தோறும் சிவதரிசனம் செய்யவேண்டும். எப்போதும் அப்படி நடக்க முடியாதவர்கள் வாரத்திற்கு ஒருமுறையாவது, பட்சத்திற்கு ஒருமுறையாவது, மாதத்திற்கு ஒருமுறையாவது முறைப்படி தவறாது சிவதரிசனம் செய்ய வேண்டும். இப்படி நடத்தல் விரதநாட்களிற் பொருந்தும். மாசிமாதத்தில் வரும் சிவராத்திரி விரதம் சைவர்கள் யாவரும் அநுஷ்டிக்க வேண்டியது.

ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துபவர் மாணாக்கர்களது அறிவுக்குத்தக்கபடி ஒன்றுக்கொன்று மேற்பட்ட பல வகுப்புகளை வைத்திருப்பது போல கடவுள் ஆன்மாக்களது நிலைக்குத்தக்கதாக ஒன்றுக்குகொன்று மேற்பட்டதாக பல சமயங்களை ஆக்கினார். என்று சொல்வது சைவசமயம் மாத்திரமேயாகும். *அறுவகைநெறிகளும் பிறவுமாக்கிய இறைவி* என்றார் கச்சியப்பசிவம்.

அறுவகை நெறி என்பது அறுவகைச் சமயம். இவை நான்கு வகைக்குள் அடங்கும். அவைகள் புறப்புறச் சமயங்கள், புறச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்கள், என்பன. கீழ்வகுப்பு, நடுநிலை வகுப்பு உயர்நிலை வகுப்பு, மேல்நிலை வகுப்பு என்று சொன்னால் எளிதில் புரிந்து கொள்ளலாம். இவற்றிற்கெல்லாம் மேம்பட்டது சைவசமயம். எந்தச்சமயத்தவரும் தமது கடவுளை வழிபடும்போது அவ்வழிபாட்டை கடவுள் ஏற்று அருள் செய்வாரென்று சொல்லுவது சைவசமயம் மாத்திரமே.

மோட்சம் அடைதற்குச் சாதனமாகச் சைவ சமய அநுட்டானத்தைப் படிப்படியாக நிறைப்படுத்தியுள்ளது சைவசமயம் மாத்திரமே. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு முறைகளை உணர்த்துவது சைவசமயம்.

எல்லாவிதமான தீவினைகளையும் விலக்குவது சைவசமயம் மாத்திரமேயாம். கள்ளுண்ணல், புலாலுண்ணல், கொலை, ஆகிய மூன்றையும் விலக்குவது சைவசமயத்தின் சிறப்பு. மேலும் பிற சமயத்தவரை வலிந்து இழுக்காதது சைவசமயம் மாத்திரமேயாம். மற்றைய சமயத்தவர்கள் பிற சமயத்தவரை தங்கள் சமயத்துக்கு இழுப்பதே தமது முயற்சியாகக் கொள்வார்கள்.

தோத்திர நெறியைக் கூறியருளிய சமயாசாரியர்கள் ஒவ்வொரு இடத்திலும் வாழும் மக்களை நாடிச்சென்று, பதியுண்மையை அறிவுறுத்தி நல் வழிப்படுத்தினார்கள். சாத்திர நெறியைக் கூறியருளிய சந்தானசாரியர்கள் இருந்த இடத்திலிருந்து பக்குவிகளாய் தம்மை நாடி வந்தோர்க்கு உண்மைப் பொருள்களை உபதேசம் செய்தருளினார்கள்.

கடவுள் துணை கொண்டு செய்யும் எந்தக் காரியமும் வெற்றிகரமாக மங்களகரமாக முடியுமென்று நம்புகிறோம். இந்த நினைப்பு ஒன்றே நம்மை உலகத்திலே தன்னம்பிக்கையோடு வாழச்செய்கிறது.

உடல் பெற்ற பயன் எது? சிவபெருமானை வணங்குதல், கண்ணால் தரிசித்தல், வாயால் அவன்புகழைப் பாடுதல், கால்களால் வலம் வருதல். இக்காரியங்கள் இலேசான காரியங்கள் அல்லவா? இதற்குச் சிரமம் உண்டா? இவைகளைச் செய்தால் வரும் பெரும்பயன் தான் திருவருள். ஞானாசாரியனே நமக்குச் சிவதீட்சை செய்வித்து, சிவபெருமான் திருவருளை வாரிவழங்கி ஆட்கொள்கிறான். ஆகவே குருவருளும் உயிர்களுக்கு உற்ற துணையாகிறது. திருவருளும், குருவருளும் நம்மை சிவானந்தக் கடலில் திளைக்கச் செய்கின்றன.

சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளிகாட்டு மந்தக்கருத்தை விட்டுப்
பொய் வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.

3. கடவுளின் தன்மை

கடவுள் என்றும் உள்ளவர் = அவருக்கு பிறப்பு இறப்பு இல்லை.

அவர் எங்கும் நிறைந்தவர் = அவர் இல்லாத இடமே இல்லை

அவர் எல்லாம் அறிபவர் = அவர் அறியாதது ஒன்றுமில்லை

அவர் எல்லாம் வல்லவர் = அவரால் இயலாத காரியம் ஒன்றும் இல்லை

அருடைய அறிவு இயற்கை அறிவு = ஒருவர் அறிவிக்க அறிபவர் அல்லர்

அவர் வரம்பிலின்பர் = அளவிடப்படாத ஆனந்தமுடையவர்

அவர் தம்வயமுடையவர் = பிறர் வயமுடையவர் அல்லர்

அவர் மலமாசற்றவர் = இயல்பாகவே பாசங்களில் நீங்கியவர்

அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் = அவருக்குச் சமமானவரோ, மேலானவரோ இல்லாதவர்

அவர் பேரருள் உடையவர் = ஆன்மாக்களிடத்திலுள்ள கைமாறில்லாத, அளவுகடந்த திருவருளே மேனியாக உடையவர்.

கடவுள் எல்லாவற்றையும் கடந்திருப்பவர், எல்லாவற்றிலும் கலந்திருப்பவர், எல்லா உடலிலும் உள்ளத்திலும் உயிருக்குஉயிராக இருப்பவர் இத்துணைச் சிறப்புடைய கடவுளைச் சைவசமயம் சிவபெருமான் என்று கூறுகிறது.

4. வழிபடும் கடவுள்

தூய உடம்பினாராகவும், ஒளி உடம்பினராகவும், கண்களுக்குப்புலப்படாதவராகவும் உள்ள சிவபெருமான் மும்மூர்த்திகளில் (பிரம்மா, விட்டுணு, உருத்திரன்) ஒருவராகிய உருத்திரன் அல்லர். மும்மூர்த்திகளுக்கும் தலைவர் மற்றையதெய்வங்கள் அவருக்கு அடியவராயுள்ள ஆன்மாக்களே. உலக முழுவதும் சிவலிங்க வழிபாடு உள்ளன.

5. பிரமாண நூல்கள்

சைவர்களாகிய நமக்கு மனிதர்கள் அமைத்துக்கொடுத்த விதிமுறைகள் ஒன்றுமில்லை. நமது கிரியை முறைகளனைத்தும் கருணைக் கடலாகிய சிவபெருமான் நம் மீது கொண்ட இரக்கத்தாலும் பிறப் பிறப்புத்துன்பங்களிருந்தும் நம்மை விடுவிக்கக் கருதியும் அருளித்தந்தவை.

சிவபெருமான் அருளிச்செய்தவை வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம் வேதம் உலகமக்கள் பொருட்டுப் பொதுநூலாகவும், சிவாகமம் அவர்களுள் சத்தினிப்பதம் பெற்ற பக்குவிகள் பொருட்டு சிறப்பு நூலாகவும் அருளித்தந்தவை.

வேதம் **கன்ம காண்டம்,** ஞான **காண்டம்** என இருவகைப்படும். சிவாகமம் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு வகைப்படும். இதில் புறச் செயல் முறைகளை வரம்பு படுத்திக் கூறும் சரியா பாதமும், அதனையடுத்து புற அகச்செயல்முறைகளை வரம்புபடுத்திக் கூறும் கிரியாபாதமும், அதனையடுத்து அகச்செயல் முறைகளை வரம்பு

படுத்திக்கூறும் யோகபாதமும், அதனையடுத்து முப்பொருள் உண்மையைக்கூறும் ஞானபாதமும் அமைந்திருக்கும். இவையாவும் வடமொழி நூல்கள். தமிழில் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும், சிவபுராணங்களும் இவற்றின் விரிந்த நூல்களாம்.

கிரியா காண்டப் பிரமாண நூல்கள் சிவாகமங்களுள் பத்ததிகளும், தத்துவக்கொள்கைக்குப் பிரமாண நூல்கள் சிவாகமஞான பாதப்பகுதிகள், தமிழில் முதல்நூல் சிவஞானபோதம், வழிநூல் சிவஞான சித்தியார், அதைச்சார்ந்த சித்தாந்த சாத்திர நூல்களும் ஆகும்.

6. முக்கியத் தத்துவக்கொள்கை

இறை (பதி) உயிர் (பசு = ஆன்மா) உலக மூலமாகிய மாயை (பாசம்) இம்மூன்றையும் தொடர்புபடுத்தி நிற்பது இறையருள் (அருட்சத்தி)

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதி யினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே

-திருமந்திரம் 115

7. சைவ சமய ஆசாரியர்கள்

திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக நாயனார் என நால்வர். இவர்கள் சமயகுரவர்கள் என்று சொல்லப் பெறுவார்கள்.

சமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வண்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத்தாள் போற்றி

திருஞானசம்பந்தர் அருளியது 1,2,3, திருமுறைகள், திருநாவுக்கரசர் அருளியது 4,5,6, திருமுறைகள், சுந்தரமூர்த்தி அருளியது 7-ம் திருமுறை, இம்மூவர் அருளியதும் **தேவாரம்** ஆகும். மாணிக்கவாசகர் அருளியது திருவாசகம், திருக்கோவையார். இவ்விரண்டும் 8-ம் திருமுறை.

8. சந்தான ஆசாரியர்கள்

மெய்கண்டதேவ நாயனார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என நால்வர். இவர்கள் சந்தானகுரவர்களென்று சொல்லப்பெறுவர்.

சந்தான குரவர் துதி

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க்கு அருள்புரிந்த அருள்நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறை ஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லை நகர் உமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி

மெய்க்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதம், அருணந்தி சிவம் அருளிச்செய்தது சிவஞானாசித்தியார், இருபா இருபது என இரண்டுமாம். மாறைஞானசம்பந்த சிவம் நூல் ஒன்றும் செய்யவில்லை. உமாபதி சிவம், சிவப்பிரகாசம், உண்மை நெறிவிளக்கம், நெஞ்சுவிடு தூது, வினா வெண்பா, திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப் பஃறொடை, கொடிக்கவி ஆக எட்டும், மற்றும் சிலவும், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம் ஆக 14.

9. சமய நுழைவுக் கிரியை

குருநாதர் தமது சீடர்களைப் பிறவிப்பிணியிலிருந்து விடுவித்து, சிவபெருமான் திருவருள் நெறியில் செலுத்துவதற்காகக் கடவுள் உண்மையை அறிவித்து, அவர் திருவடியை அடையப் பக்குவம் உண்டாவதற்காகச் செய்யப்பெறும் சிவமூலமந்திர உபதேசங்களே சிவதீட்சைகள் எனப்பெறும்.

சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை என தீட்சைகள் மூன்று வகைப்படும். இவற்றுள் முதன் முதலாகப் பெறவேண்டியது சைவ *சமய தீட்சை* யாகும். இது மற்ற தீட்சைகளுக்கு அடிப்படையானதும், எளிமையானதுமாகும். இதைச் சைவசமய நுழைவுக்கிரியை என்றும், இது ஆன்மீக வழியில் செல்வதற்கு நுழைவாயில் போன்றது என்றும், தம்மைச் சைவ சமயத்தைச் சார்ந்தவனாகப் பதிவு செய்து கொள்ளுதல் என்றும், இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய புண்ணியங்களைச் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பதென்றும், நாள் வழிபாடு தொடங்கும் நிகழ்ச்சி என்றும், சைவசமய ஆசார அநுட்டானங்களைச் செய்யுந்தகுதியை பிறப்பிப்பது என்றும் போற்றப்பெறும்.

சைவக் குடும்பத்தில் பிறந்தும், சைவ சமய தீட்சையைக் கூடப் பெறாதவர்கள், அச்சமயத்தவராகக் கருதப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் அசுத்தமானவர்கள் என்றும், அவர்கள் எவ்விதச் சைவ சமய சடங்கும் செய்யவோ, செய்துகொள்ளவோ அருகதையற்றவர்கள் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. ஆகையால் சிவதீட்சைகளைப் பெறுவது மிகவும் அவசியமாகிறது. **தீட்சை இல்லையேல் மோட்சமில்லை** என்கிறது சிவாகமம்.

10. சிவதீட்சையின் பெருமை

மனிதனை மனிதனாக்குவது கல்வி. அதுபோல மனிதனை சைவனாக்குவது **சைவசமய தீட்சை.** இத்தீட்சையைப் பெற்றவர்கள் இதிலுள்ளபடி சைவசமய அநுட்டான முறைகளை நன்றாக பழகிக்கொண்டு ஆயுள் பரியந்தம் வழுவாது நின்று செய்து வருவதோடு, புண்ணியங்களுக்குரிய இயம நியமங்களையும் கடைப்பிடித்து வரவேண்டும். இவர்கள் ஆகம விதிப்படி திருமணம், மணி (சாந்தி) விழா முத்து (சதாபிஷேக) விழா, முதலியவைகளைச் செய்து கொள்ளவும் **சரியை நெறி** யைப் பின்பற்றி, குரு, லிங்க சங்கம, வழிபாடு செய்யவும், மடம் கோவில், திருப்பணிகள் செய்யவும், மகா கும்பாபிஷேகம் செய்விக்கவும் ஆண்கள் தமது பெற்றோர்களுக்கு பூர்வ, அபர, கிரியை, திதி, அமாவாசை தர்ப்பணம் முதலிய காரியங்களைத் தானே கர்த்தாவாகயிருந்து செய்வதற்கும் தீட்சை பெற்றவரே அதிகாரம் பெற்றவராவார்.

11. தீட்சைகளும் அவற்றின் மார்க்கங்களும்

முன்னைப் புண்ணியப் பேற்றால் சைவகுடும்பத்தில் பிறக்கும் பேறு பெற்றவர்கள், நான் சைவன் என்று சொல்லிக்கொள்வதில் யாதொன்றும் பயனில்லை. சைவசமயத்தில் கூறப்பெற்றுள்ள வேத, சிவாகம முறைப்படி சமய, விஷேட, நிர்வாண தீட்சைகளை முறையாகப்பெற்று, சரியை, கிரியை யோகங்களாகிய நற்றவங்களைச் செய்து, அவற்றால் வரும் மெய்யுணர்வாகிய சிவஞானம் கைவரப்பெற்று, சிவத்துடன் இரண்டறக் கலப்பதாகிய முத்தியைப் பெறலாகுமென ஞானநூல்களினால் உணரப் பெறும் உண்மை முடிவுகளாம்.

சைவ **சமய தீட்சை** யைப்பெற்றவர்கள் **சரியை** நெறியில் கூறிய செயல்களைச் செய்வதுடன், சிவாலயத்திற்கும், சிவனடியார்களுக்கும், தீட்சை செய்வித்த குருவாகிய ஆசாரியருக்கும் தொண்டு செய்தல், விநாயகர், வேலவர் முதலிய **உருவத்திருமேனிகளுள்** ஒன்றிற் பற்றுவைத்து பூஜை செய்தல், தலைவன் - தொண்டன் (ஆண்டான் அடிமை) ஆகிய **தாசமார்க்கம்** திருநாவுக்கரசுநாயனார் நெறி.

விஷேட தீட்சையைப் பெற்றவர்கள் **கிரியை** நெறியில் கூறிய செயல்களைச் செய்வதுடன், சிவலிங்கத்தை அகத்தும், புறத்தும் **அருவுருவத்திருமேனி** யாகிய சதாசிவம் (இதில் ஆவுடையார்-சக்தி இலிங்கம்-சிவம்) சிவபூஜை செய்வது. தந்தை-மகன் ஆகிய சத்புத்ரமார்க்கம் திருஞான சம்பந்தநாயனார் நெறி.

நிர்வாண தீட்சை பெற்றவர்கள் **யோக நெறியில்** கூறிய பிராணாயாமப் பயிற்சியினாலே மனத்தை விடயங்களின் வழியே போகாவண்ணம் நிறுத்திச் சிவத்தை **அருவத்திருமேனியாகத் தியானித்து** தியானிப்போனாகிய தானும் தியானமுந் தோன்றாது தியானப்பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப்பெறுதல் நட்புமார்க்கம் **நண்பனும் நண்பனும்** ஆகிய **சக மார்க்கம்** சுந்தரமூர்த்தி நாயனார் நெறி.

ஆசாரியர் அபிடேகம் பெற்றவர்கள் **ஞானநெறியில்** நின்று பதி பசு பாச உண்மைகளை கூறும் சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய ஞான நூல்களை கற்றல், கேட்டல், சித்தித்தல், தெளிதல், நிட்டைகூடல், பிறருக்கும் உபதேசித்தல், ஆசாரியமூர்த்திகளாக இருந்து சிவாகமங்களில் கூறிய **தீட்சை, பிரதிஷ்டை** முதலான சகல காரியங்களையும் செய்யும் அதிகாரியாவார். **தலைவன் - தலைவி** இயைபு அல்லது **குரு-சீடர்** இயைபு ஆகிய சன்மார்க்கம் மாணிக்கவாசகநாயனார் நெறி.

சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கும் வீடு (மோட்சம்) பேறு அடைவதற்குரிய மார்க்கங்களாம், இவைகள் ஒன்றுக்கொன்று நற்காரணமாயிருந்து உதவுவதுடன், தனித்தனியே பயன் தருகிற தகுதியும் உடையன. இம்முறைகளில் இறைவணக்கத்தை, இயல்புக்கும்-முயற்சிக்கும்-தகுதிக்கும்-ஏற்பச் செய்து வீடு, பேறு அடைய வழி காட்டுகிறது.

இறைவன் சரியையாளர்களுக்குத் திருஉருவங்களில் மறைந்து நின்றும், கிரியையாளர்களுக்கும், யோகிகளுக்கும் பூஜிக்கும்போது மாத்திரம் தோன்றியும், ஞானிகளுக்கு அன்பே தாமாய் எப்போதும் விளங்கித் தோன்றியும் அருள் புரிகின்றார்.

மோட்சம் அடைவதற்குச் சாதனமாகச் சமய அநுட்டானத்தைப் படிப்படியாக முறைப்படுத்தியுள்ளது சைவசமயம் மாத்திரமேயாம். இம்மார்க்கங்கள் அரும்பு, மலர், காய், கனி போல் ஒன்றுக்கொன்று மேம்பாடுடையனவாய் இருப்பன.

சாதனைகளின் பயன்கள்

சரியையினால் (சாலோகம்) சிவலோகத்தில் வாழும் நலத்தையும், கிரியையினால் (சாமீபம்) சிவபெருமானுக்கு அருகில் வாழும் பேற்றையும், யோகத்தினால் (சாரூப்யம்) சிவபெருமானது உருவத்தைப்பெறும் சிறப்பையும் நல்கும். ஞானத்தினால் வரும் (சாயுஜ்யமுத்தி) ஈண்டுவாராநெறியாகிய பேரின்பத்தை வழங்கும். சாலோக, சாமீப, சாரூபமாகிய மூன்றும் நிலையில்லாததால் **பதமுத்தி** என்றும் சாயுஜ்யம் நிலை உடையதால் **பர முத்தி** என்றும் சொல்லப்பெறும். பரமுத்தியைவிட ஆன்மாக்கள் அடைவதற்கு வேறொன்றுமில்லை.

12. சிவ மூலமந்திரச் சிறப்பு

ஓம் என்பது பிரணவ மந்திரம், இது மற்ற மந்திரங்களுக்கெல்லாம் முதலிலே சேர்த்து உச்சரிக்கப் பெறவேண்டிய பிரதான மந்திரமாகும்.

நகாராதி பஞ்சாட்சரம் என்றால் **ந** என்ற எழுத்தை முதலாக உடைய ஐந்து எழுத்துக் கொண்ட சிவமூல மந்திரமாகும். இம் மந்திரத்தை சைவசமய குரவர்கள் சிறப்பாகப் பாடியுள்ளார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பஞ்சாத்கரத் திருப்பதிகத்தில் ***துஞ்சலும் துஞ்சிலில்லாத*** எனத் தொடங்கி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் **அஞ்செழுத்துமே** எனப் பொதுவாகக் கூறியுள்ளார்கள். அது இன்னதுதான் என்பதை நமச்சிவாயத் திருப்பதிகத்தில் ***காதலாகிக் கசிந்து*** எனத் தொடங்கி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்

நமச்சிவாயவே! என சிறப்பாக் கூறியுள்ளார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் *சொற்றுணை வேதியன்* எனத் தொடங்கி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் **நமச்சிவாயவே** எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய நமச்சிவாய திருப்பதிகத்தில் *மற்றுப் பற்றெனத்* தொடங்கி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் **நமச்சிவாயவே** எனவும் பாடியுள்ளார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தில் *நமச்சிவாய வாழ்க!* எனத் தொடங்குகிறார்கள். திருச்சதகம் 62-ம் பாடலில் **போற்றி ஓம் நமச்சிவாய** என வெளிப்படையாக் கூறியள்ளார்கள். சிறப்பு மிக்க இம்மந்திரத்தைக் குரு மூலமாகக் கேட்டறிந்து அவர் தமது வலக்காதில் உபதேசித்தபடி தினந்தோறும் தவறாது ஜெபம் செய்து வந்தால், மனம் அடங்கி, சிவப்பேறு பெற்று வாழும் நமது ஆன்மா.

திருஐந்தெழுத்து விளக்கம் **ந** என்பது திரோதானசக்தி இதில் மாயையும் கன்மமும் அடங்கும். **ம** என்பதில் ஆணவமலம் மட்டும் அடங்கும். **சி** என்பதில் சிவமும், **வ** என்பதில் அருட்சக்தியும், **ய** என்பதில் ஆன்மாவும் அடங்கும்.

13. சமயச் சின்னங்கள்

திருநீறு, உருத்திராக்கம் இவற்றை அணிந்திருப்பது சிவபெருமான் திருவருட் பேற்றிற்கு அறிகுறியாகும். திருநீற்றின் சிறப்பை, திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய திருவாலவாய்த் திருப்பதிகத்தில் *மந்திரமாவது நீறு* எனத் தொடங்கிச் சிறப்பாகக் கூறியுள்ளார்கள்.

14. குருவின் பெருமை

தெள்ளினும் நல்லகுரு வினைக் கொள்ளுக;
உள்ள பொருள் உடல் ஆவியுடன் ஈக
எள்ளத்தனையும் இடை விடாதே நின்று
தெள்ளின் அறியச் சிவபதம் தானே (1693) திருமந்திரம்

சைவப்பத்ததிகளின் விதிமுறைகள் சிவாகம அடிப்படையில் அமைந்ததாதலின், அதனைச் செய்து வைக்கும், ஆசாரியரும் அச்சிவாகம அடிப்படையில் அமைந்த சமயம் விசேடம், நிர்வாணம் ஆகிய தீட்சைகளையும் ஆசாரிய அபிடேத்தையும் பெற்றவராய் சைவ அநுட்டானம், ஆன்மார்த்த சிவபூஜை முதலியவற்றில் வழுவாது நிற்பவராய், திருமணமாகி மனைவியுடன் வாழ்பவராயிருத்தல் வேண்டும்.

இத்தகைய தகுதியுடைய ஆசாரியர்களது ஒவ்வொரு சொல்லும் மந்திரமாக நின்று பயன் தருவன வென்று ஞான நூல்கள் கூறுகின்றன. பிரம்மச்சாரியாகவோ மனைவியை இழந்தவராகவோ, துறவியாகவோ இருப்பவர்கள் பரார்த்தங்களில் ஆசாரியராக இருத்தற்கு அருகரல்லர் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆன்மார்த்தம், பரார்த்தம், ஆகிய சிவபூஜைகளைச் செய்யும் சிவாசாரியர்களையும், சைவாசாரியர்களையும், சைவாதீனகர்த்தர்களையும் நிலைக் களமாகக்கொண்டு சிவபெருமான் செய்தருளும் சிவதீட்சைப்பேறு ஒன்றே பாச நீக்கம் செய்து சிவப்பேற்றை வழங்குவதாகும். வேறு எந்த முயற்சியாலும் இந்த நற்பேற்றைப் பெறமுடியாது, எனவே தக்ககுரு மிக்க அவசியம்.

குருநாதரையும் சிவபக்தர்களையும் மனிதர்கள் எனக்கருதாது சிவபெருமானாகவே கருதி வழிபடவேண்டும்.குருவுக்குத் தம்மாலியன்ற தட்சிணை வைத்து வணங்கித் தீட்சை பெற்றுக் கொள்ளவேண்டும். ஆண்டுதோறும் நடைபெறும் நமது ஆதீன குரு முதல்வர் மஹா குருபூஜை விழாவுக்கு வந்து குரு தரிசனம் செய்து பாதகாணிக்கை வைத்து வணங்கித் திருநீறு பிரசாதமும், ஆசிக்கவசமும் பெற்றுக் கொண்டு மீண்டும் விழுந்து வணங்க வேண்டும்.

- உயிருக்குயிரான இறைவனே குருவடிவில் எழுந்தருளுகிறான்.
- இறைவன் உருவொடு வரும்பொழுது ஞானகுரு ஆகிறார்.
- குருவடிவில் வந்து கருவழி மாற்றுவான்.
- குருட்டினை நீக்கிடும் குருவின் திருவருள்
- திருவடி தீக்ஷை செய்து நுண்ணிய உணர்வுண்டாக்கி விரைந்து பிறப்பு நீங்குமாறு காட்டுபவர் குரு
- இறைவனுக்குச் செய்யும் தீங்கையும் இல்லாமல் செய்வார் குரு ஆனால் குருவிற்கு இன்னல் செய்தவர் மன்னிக்கப்பட மாட்டார் - ஞானி
- ஐந்து புலன்களில் அகப்பட்டு உழலும் இன்னுயிரை, ஞானம் தந்து உணர்த்துபவர் குரு.

15. சீடர்களின் கடமை

தக்க குருநாதரிடம் சென்று கல்வியும், ஒழுக்கமும் உள்ள எனக்கு, **சமய தீட்சை செய்து அருள வேண்டும்** என்று குருநாதரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். அவரும் சமய தீட்சைக்கு உரிய சிவ மூலமந்திரத்தை உபதேசம் செய்து வைத்து உன்னால் முடிந்தவரை தொடர்ந்து ஜெபம்செய்து வா என்பார் அதற்குச் சீடர் **இன்று முதல் சைவ சமய ஆசார அநுட்டானங்களை என்னால் முடிந்தவரை தவறாமல் கடைப்பிடித்து** வருவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும். சீடர்களின் பக்குவ நிலையறிந்து குருநாதர் விஷேடதீட்சை, நிர்வாணதீட்சை, ஆசாரிய அபிடேகம் ஆகியவற்றை அவராகவே அருளுவார். **குருவருளின்றித் திருவருளின்றாம்** என்று அருள் நூல்கள் கூறுகின்றன. குரு சிவதீட்சை செய்து சீடர்களின் மலசக்தியைக் கெடுத்துச் சிவசக்தியை நம்மில் பதியவைக்கிறார் அவ்வாறு பதிந்த சிவசக்தியை மேன் மேலும் வளர்த்துப் பூரணமாக்கிக் கொள்வதே சைவாநுட்டானச் செயலாகும். தீட்சை பெற்றவர்கள் தமக்கு விதிக்கப்பெற்ற சிவமூல மந்திரத்தையும், பஞ்சபிரம்ம, அங்கமந்திரங்களையும், ஓதும் உரிமை உடையவர்களாவார்கள்.

அநுட்டானமோ சிவமூல மந்திர ஜெபமோ செய்யவில்லை என்றால் தமக்கும் பயனில்லை, உபதேசித்த குருவுக்கும் புண்ணியமில்லை. சீடர்கள் தீட்சைக்கு ஏற்ற நெறிமுறைகளில் வழுவாது நின்று அதன் பயனாகிய இம்மையில் நல்வாழ்வையும், மறுமையில் முத்திபேற்றையும் பெறுவார்கள். அவரவர் செய்யும் அநுட்டானம், ஜெபம், தவங்களைப் பொறுத்தே அவரவர்களுக்குச் சிவ புண்ணியம் கிடைக்கப்பெறுவதால் அன்புடனும், ஆர்வத்துடனும், செய்துவரவேண்டியது சீடர்களின் கடமையாகும். சீடர்கள் நித்திய கருமம், அவசிய கருமம், செய்வதைப் போலவே அநுட்டானத்தையும், ஜெபத்தையும் தவறாமல் செய்து வரவேண்டும். இவ்வழிபாட்டினால் சிவபுண்ணியம் பெருகி அப்புண்ணியத்தினாலே முத்தி சித்திக்கும்.

16. மனிதப் பிறவியின் மாண்பு

உயிர்களை ஆன்மாக்கள் என்று சொல்லப்பெறும். ஆன்மாக்கள் நல்வினை, தீவினை என்னும் இருவினைக்கும் ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும் 84 லட்சத்து யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்து உழலும். இதில் அரிதரிது மானுடராய் பிறத்தல் அரிது என்றும், மனிதப்பிறப்பை அடைவது கடலைக் கையால் நீந்திக் கரை சேருவது போன்றது என்றும், ஆன்றோர் அருளுவர். முன்பிறப்புக்களில் செய்த புண்ணிய மிகுதியால் கிடைத்திருக்கிற மனிதப்பிறப்பைப் பயனற்றதாக ஆக்கிவிடக் கூடாது. இப்பிறவி நமக்குக் கொடுக்கப்பட்டதேயன்றி நாம் விரும்பி எடுத்துக்கொண்டதன்று. **வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி** என்பார் அப்பரடிகள்.

இறைவனைப் பற்றிச் சிந்திக்கும் வாய்ப்பு மனிதப்பிறப்புக்கே உண்டு. தேவர்களும் இம்மண்ணுலகில் வந்தே இறைவனைப் பூவும் நீரும் கொண்டு அர்ச்சித்தே வீடு பெறுவார்கள்.

மானுடப்பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன் பணிக்காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ

-சிவஞானசித்தியார்

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம் பெறுதற்கரிய பேரிழந் தாரே

-திருமந்திரம்

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே

என்று அப்பரடிகள் மனமுருகிப் பாடுகிறார்கள். வாய் வாழ்த்த, நெஞ்சு நினைக்க, தலை தாழ்த்த ஆக மும்மைக் காரணங்களாலும் இறைவனை வழிபடவேண்டும் என்கிறார்.

17- கடவுள்

இந்த பூமியையும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார்தான் சொல்ல வல்லார். அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பே வடிவமாக உடையவர்.

அன்புசி வம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே

என்று திருமூலர் தெரிவிக்கிறார். ஆதலால் அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும் பெற்றோர்கள் தம்குழந்தைக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றை அக்குழந்தை கேளாமலிருக்கையிலே கொடுத்து விடுகிறார்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறியமாட்டார்கள். அவற்றைக் குழந்தை தம்பெற்றோர்களுக்குச் சொல்லிய பின்பு அவர்கள் கொடுக்கிறார்கள்.

கடவுள் எல்லாம் அறிபவர் ஆதலால் நமக்கு வேண்டியவற்றையும் அவர் தாமாகவே தருவார். நாம் அவரை ஒன்றும் கேட்கவேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலும், நினைத்தலும், பூசித்தலுமே நாம் செய்யவேண்டியவை. இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதை விட்டு விலக வேண்டி வரும். அப்போது நமது தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றத்தாரும் நண்பர்களும் நம்மை விட்டு பிரிந்துவிடுவார்கள். நமது உரிமைப் பொருட்களும் உடமைப் பொருட்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்தும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்து கொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப்பொருள். ஆதலால் நம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும் போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்பொழுதும் கடவுளிடத்திலேயே இருத்தல் வேண்டும், கடவுளை நம்பினோர் கரைசேர்வர்.

18- ஆன்மாக்கள்

ஆன்மாக்கள் என்றும் உள்ளவை. அவற்றின் அறிவை ஆணவம் என்ற ஒருபொருள் இயல்பாகவே மறைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆணவ மலமறைப்பை நீக்கி நிறைவான மெய்யறிவெனப்படும் சிவஞானத்தைக் கொடுத்தற்காகவே கடவுள் ஆன்மாக்களுக்கு உடம்புகளைக் கொடுத்தருளுகிறார். இந்த உடம்புகள் புழுஉடம்பு முதல் மனிதஉடம்பு வரை பலவகைப்படும்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் –என்கிறார் மாணிக்கவாசகநாயனார்.

ஒரு ஆன்மாவுக்குக் கிடைக்கும் உடம்பானது அது அப்போது அனுபவிக்க வேண்டிய வினைகளுக்கத் தக்கதாய் இருக்கும். வினைப்பயனை அனுபவித்தால் ஆணவ மறைப்புக் குறையும். ஆதலால் ஒரு ஆன்மா எந்தப்பிறவியை எடுத்தாலும், அந்தப்பிறவியிலே அதனுடைய ஆணவமல மறைப்பு சற்றே குறையும், மெய்யறிவு சற்றே வளரும். ஆகவே ஆன்மாக்களாகிய நம்முடைய பிரதானமான செயல் இந்த ஆணவமல மறைப்பை நீக்கிச் சிவஞானத்தைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தலேயாம். சிவஞானத்துக்கு கடவுளுடைய திருவடிகள் என்றும் பெயர், இதனாலேதான், கடவுளுடைய திருவடிகளை அடைதலே நாம்பிறவி எடுப்பதன் பயன் என்று ஆன்றோர் அருளுவர்.

உயிர்கள் அனைத்தும் (உய்திகருதி) அத்திருவடியை அடைதற்காகவே யாத்திரை செய்கின்றன. நமது நகரத்தார்கள் பழனிக்குப் பாதயாத்திரையாகச் செல்பவர்கள், காலையிலும், மாலையிலும் இயன்ற அளவு நடப்பார்கள். நடுப்பகலிலும், இரவிலும் ஒரு இடத்தில் தங்கியிருந்து, சமைத்துச் சாப்பிட்டு ஓய்வாய் இருக்கும்போதும், **வேல் வேல்** என்பார்கள். அவர்கள் என்ன தொழில் செய்தாலும் அவர்களுடைய மனம் இடையறாது பழனியை அடைதலே குறிக்கோளாக இருக்கும். அதுபோல கடவுளுடைய திருவடிகளை அடைவதற்கு யாத்திரை செய்பவர்களாகிய நாம் அந்த யாத்திரையையே முழுநோக்கமாகவும், உண்ணுதலையும், உறங்குதலையும் அதற்குத்துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

பாதயாத்ரீகர்கள் கூட்டம் கூட்டமாகப் போதல் வழக்கம். ஒவ்வொரு கூட்டத்திலும் ஆண்களும், பெண்களும், பெரியவரும், சிறியவரும், கற்றவரும், கல்லாதவரும், செல்வரும், வறியவரும் உள்ளனர். ஆயினும் யாவரும் ஆண்டவனுடைய அடியவர்கள் என்ற கொள்கையை உடையவராய் அன்பும் அருளும் நிறைந்தவராய் யாத்திரை செய்வர். இவர்கள் ஒருவரோடொருவர் நீதியாயும் அன்பாயும் வாழுதல் வேண்டும்.

19. கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே நாம் பிறவி எடுத்தோம் ஆதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கிய கடமையாகும். உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்கு கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுவதற்கு கடவுள் வழிபாடு வேண்டப்படும். உடம்பும், மனமும் ஆன்மாவின் கருவிகள் , உடம்பு வேலை செய்வதற்கும், மனம் ஆராய்வதற்கும் கருவியாய்யுள்ளவை. கருவிகளைக்காட்டிலும் கருவிகளையுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. எனவே உடம்பை நயப்படுத்துதற்கு வேண்டிய உணவினும், மனத்தை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியினும், மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் அன்மாவுக்குக் கருவியாயிருத்தல் இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினார் பயனில்லை என்கிறார் திருவள்ளுவ நாயனார்.

கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஆர் எனின்.

கடவுள் வழிபாட்டிற்கு காலை குளித்துத் தோய்த்து, உலர்ந்த தூய ஆடைகளை உடுத்திக் கொண்டு, நெற்றியிலே திருநீறு பூசிக்கொண்டு கோவிலுக்குச் சென்று, சுவாமி தரிசனம் செய்துவருவார்கள். அப்போது தேவாரம், திருவாசகம், விநாயகர் அகவல், கந்தரனுபூதி, திருவாசகத்திலுள்ள சிவபுராணம், ஆகிய அருட்பாக்களைப் பாடுக. கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும், மாலையுமாம். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், பெருமாள், சக்தி, சிவம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பக்தி சிரத்தையுடன் வணங்கி, அவற்றின் மந்திரங்களையும், காயத்திரிகளையும் ஜெபம் செய்வார்கள். சிலர் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். இன்னுஞ்சிலர் சைவ சமய தீட்சை பெற்று அநுட்டானஞ் செய்து சிவமூலமந்திரத்தை (திருஐந்தெழுத்தை) காலையும் மாலையும் ஓதுவார்கள். சிவன்கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வார்கள். நாம் கடவுளை தரிசிக்கும்போதும், பூஜிக்கும்போதும், **எங்கும் நிறைந்துள்ள இறைவனே! அடியேனுடைய வழிபாட்டிற்காக இங்கு எழுந்தருளியிருக்கும், இப்பெருங்கருணையை நான் எவ்வாறுதான் துதிப்பேன்! உன்னுடைய திருமுன்னிலையில் நின்று உன்னுடைய கருணையைப் பருகும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே பெரும் புண்ணியமாகும்!** என்று மகிழவேண்டும்.

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்போ தும்மறந் துய்வனோ -- தேவாரம்

இறைவழிபாட்டிற்கு தமிழ் வேதமாகிய தேவாரம் திருவாசகங்களைச் சொல்லித் துதிப்பதே சிறந்தது. கடவுள் வழிபாடு இவ்வளவோடு நில்லாமல் நமது பிறசெயல்களிலும் கலந்திருக்கிறது. நித்திரை விட்டெழும்போது *சிவ சிவ* என்று சொல்லி எழுந்திருக்கிறோம். பிறகு கைவாய் கழுவி சுத்திசெய்து *சிவ சிவ* என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். குளிக்கும்போது கடவுளை சிந்திக்கிறோம். சாப்பிடும்போது கடவுளுக்கு நிவேதித்துச் சாப்பிடுகிறோம். சாப்பாடு முடித்தவுடனே *சிவ சிவ* என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். என்ன செயல் செய்தாலும் சிவபெருமானைத் தோத்திரித்துச் செய்கிறோம். கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக்கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களேனும் தோன்றும்போது சிவ சிந்தனை செய்தால் அச்சிந்தனை தீயனவற்றைக் கருக்கி மீளவிடமால் அழித்துவிடும். இது மனத்தை தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்கு தகுதிவாய்ந்த இடமாக்கும். *உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்* என்றும், *நினைப்பவர் மனம் கோயிலாக்கொண்டவர்* என்றும், *சிந்தையதென்ன சிவனென்ன வேறில்லை* என்றும் திருமுறைகள் கூறுகின்றன. நாம் எதை அதிகமாகச் சிந்திக்கின்றோமோ அதனிடத்தில் நமக்கு உறுதியான பற்று உண்டாகிறது. படிப்பிலே அதிமான அக்கறை உள்ளவருடைய மனம் படிப்பிலேயன்றி

வேறொன்றிலும் செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவர் சங்கீத வித்துவானாவதும், விவசாயத்தில் கவனம் செலுத்வோர் அதிகமகசூல் பெறுவதும் போலவே கடவுளிடத்திலே சிந்தைனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள் மயமாகின்றான்.

சிந்தையதென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந்தோ -2853

20. இரு வினை

கடவுள் சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தந்தை ஆதலால் மற்றைய உயிர்கள் யாவும் நமக்குச் சகோதரர்கள், நமது அன்புக்கும், ஆதரவுக்கும், உரிமை உடையவர்கள் நாம் இதை நினைத்துப் பார்ப்பதே இல்லை. சிலரை வெறுத்து ஒதுக்குகின்றோம் சிலரைப் பகைக்கிறோம்; சில உயிர்களுக்குத் துன்பம் செய்கிறோம்; இப்படித் தவறாக நாம் நடப்பதற்குக் காரணம் நமது ஆசைகள். ஆசைகள் உண்டாவதற்குக் காரணமாக உள்ளது நம்மை மயக்கிக் கொண்டிருப்பதாகிய ஆணவம் இதை மூல மலம் என்றும் செம்பினில் களிப்பு போன்றது என்றும் சொல்லப்பெறும்.

நாம் நமது ஆசைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டோமானாலும், மற்றைய உயிர்களைச் சகோதரர்களாகப் பாவித்தோமானாலும், சுலபமாகக் கைகூடும். நமக்குப் பொருள்களிலே ஆசை உண்டு. இந்த ஆசைக்கு எல்லையாய் இருக்கவேண்டியது நாம் நல்ல வழியில் சம்பாதிக்கும் பொருளேயாம். அந்த எல்லை கடந்து பிற பொருளில் இந்த ஆசை செல்லுதல் தகாது. ஆசையானது எல்லையைக் கடக்கும்போது, நாம் செய்யும் செயல் தீவினையாகும். தீவினை செய்பவர்களுக்கு கடவுள் இப்பிறவியிலேனும், இதற்கடுத்த பிறவியிலேனும், துன்பமான வாழ்க்கையைக் கொடுத்தருளுவார். இப்பிறவியிலே குருடாய்ச், செவிடாய், நொண்டியாய், உறுப்புக் கூடியும், குறைந்தும் பிறக்கிறவர்களும், பிறந்த பின்பு வறுமையாலும், நோயாலும், அறிவின்மையாலும் வருந்துகிறவர்களும் முற்பிறவியிலே தீவினை செய்தவர்களாம். இப்படிப்பட்டவர்கள் வருந்துவதைக் காணும்போது நமக்குப் பயமாக இருக்கிறது. எனவே நாம் தீவினை செய்யப் பயப்படுகிறோம்.

ஆசைகள் எல்லையைக் கடக்கவிடாமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கப் பழகிக் கொள்ளவேண்டும். இப்பழக்கத்தை நாம் மேற்கொண்டால் நமது மனம் தீய வழியில் செல்ல மாட்டாது. இப்பழக்கத்தைச் சிறுவயதிலேயே மேற்கொள்ளுதல் எளிது, பெற்றோர்கள் குழந்தையிடம் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே, இப்படி நட என்று சொல்லிக் கொடுப்பார்கள். சிறுவயதிலேயே சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி, கிடைத்ததைக் கொண்டு மனத்திருப்தி அடைதல், பொறுமை, இவற்றைப் பழக்கிக் கொண்டால், இறக்கும்வரை நிலைத்திருக்கும்.

நீதியும், தரும சிந்தனையும், பிறஉயிர்களிடத்தில் இரக்கமும், நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்ற எண்ணமும் உறுதியாக ஏற்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும். அப்படி அடங்கி நின்றால் நாம் தீவினைகளைச் செய்யமாட்டோம். மேலும் இதை வளர்த்துக்கொள்ள நல்லவர்களுடைய சரித்திரங்களைப் படித்தல், நீதி நூல்களைப் படித்தல், கேட்டல், சிந்தித்தல், தாய் தந்தை ஆசிரியர் முதலியோருக்குப் பணிந்து நடத்தலும், அவர்களின் அன்பை விரும்பி ஏற்றலும், தீவினை செய்யாதிருத்தற்குத் துணை செய்பவைகளாம். எங்கும் நிறைந்திருப்பவரும், எல்லாம் அறிபவரும், நமது நெஞ்சிலே எப்போதும் வீற்றிருப்பவருமாகிய சிவபெருமானை வணங்கிப் பணிந்து நடத்தலே, தீவினைகளிலிருந்து நீங்குவதற்குச் சிறந்த சாதனமாம்.

இந்த உலகமும், நமது உடம்பும், மற்ற பொருள்களும் மாயையினால் தோன்றியவை. ஆகையால் இந்த மாயையையும் விட்டுவிட்டால்தான் நாம் கடவுளுடைய திருவடிகளை அடையலாம். ஆசைப்படும் பொருள்களெல்லாம் மாயையிலிருந்து தோன்றியவை. ஆகையால் இப்பொருள்களிலே ஆசை கொள்ளுதல் தவறாகும். அன்றியும் ஆன்மாவானது மாயையைக் காட்டிலும் பலகோடி மடங்கு மேலான பொருள்; ஆதலால் அது மாயைப் பொருளாகிய மண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, பெண்ணாசை, புலாலாசை, மதுவாசை இப்படிப் பல ஆசைகளுக்கு அடிமையாதல் தகாது. என்று கருதி அறிவுடைய பெரியோர்கள் ஆசைகளை அறுப்பார்கள்.

நல்வினையாவது: சமயதீட்சை பெறுவது கடவுள் வழிபாடும் இன்சொல்லும், வறியவர்களது பசி, நோய்களைத் தீர்த்தலும், பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்தலும், நற்போதனை செய்தலும், இதுபோன்றவைகளும் நல்வினை செய்பவர்பகளை கடவுள் அப்பிறவியிலும், அடுத்த பிறவியிலும் சுகமாக வாழவைப்பார். நாம் கடவுளிடத்திற் கொண்ட அன்பினாலும், மற்றைய உயிர்களிடத்திற் கொண்ட இரக்கத்தினாலும் உந்தப்பட்டு நாம் செய்யும் செயல்களெல்லாம் நல்வினையாம். அதனால் அவர்களுக்கு நல்வினையிலுள்ள பற்று மேலும் மேலும் வளர்ந்து ஓங்கும். ஆணவ மல மறைப்பு தேய்ந்து தேய்ந்து போகும். மெய்யறிவ் வளர்ந்து வளர்ந்து வரும். தீவினை செய்பவர்களுக்கு கடவுள் துன்பத்தை ஊட்டி அருள்வார், அத்துன்பத்தினாலே தீவினையில் வெறுப்பும், நல்வினையிலே விருப்பமும் உண்டாகும். அதனால் ஆணவ மல மறைப்பு குறையும், மெய்யறிவு வளரும் எனவே நல்வினை செய்து நலம் பெறுவோம்.

21. சைவன் யார்?

சைவ சமயமே சமயம் என்றும் **சைவத்தின் மேற்சமயம் வேறில்லை** என்றும் **மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்** என்றும் அருளாளர்களால் சிறப்பாகப் போற்றப்பெறுகிறது. **தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி** என்ற பரந்த நோக்குடையது, சைவ சமயம்.

உலகிலுள்ள சமயங்களனைத்திலும், சைவ சமயம் மேலானது! இக்காலத்தில், ஊனுண்ணல் ஒன்றை நீக்குவதே, சைவம் என்று கருதித் தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். பரம்பரைச் சைவக் குடும்பத்தில் பிறந்தாலும், கோத்திரத்தின் பெயர் சொல்லத் தெரிந்தாலும் எதையும் எச்சல் பண்ணாமல் சாப்பிடும் பழக்கம் உடையவரானாலும் விநாயகர், சுப்பிரமண்யர், அம்மன், ஐயனார், சமாது, சிவலிங்கம் முதலிய திருஉருவங்களைப் பரம்பரையாகப் பூஜை செய்து வந்தாலும், தமிழ் வேதமாகிய திருமுறைகளை முறையாக ஓதினாலும் போதாது. சைவசமய தீட்சையைப் பெற்றுச் சமய ஆசார அநுட்டானங்களைக் கடைப்பிடித்து வருபவர்களையன்றி, மற்ற எவரையும் சைவர்கள் என்று சைவ நூல்களும், சைவப் பாரம்பரியமும் ஏற்றுக்கொள்ளமாட்டா.

எமக்கு ஏழுவயதிருக்கும் அப்போது ஒருநாள் பல்விழுந்து விட்டது; எமது பெற்றோர்கள், *உனக்கு பல் விழுந்து விட்டது, நீ பெரியபையனாக வந்து விட்டாய் இனிமேல் பாத்திரங்களில் எச்சிலாக்கிச் சாப்பிடக்கூடாது எங்க மாதிரி அண்ணாக்கச் சாப்பிட* வேண்டும். என்று சொன்னார்கள். உடனே தண்ணீரை அண்ணாக்க குடித்துக் காண்பித்தோம், எமது பெரிய தாயாருக்குப் பெரும் மகிழ்ச்சி. வீட்டிலுள்ள எல்லோரும் கவனம் செலுத்தி எம்மை அண்ணாக்கச் சாப்பிடப் பழக்கிவிட்டார்கள். பிறகு ஒரே வாரத்தில் பாத்திரங்களிலும், இலைகளிலும் அண்ணாக்கவே சாப்பிட்டுக் காண்பித்து எல்லோரிடமும் பாராட்டுப் பெற்றோம். அதிலிருந்து பிறருடைய எச்சில் என்றால் அருவெறுப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகையால் நாமும் எதையும் எச்சிலாக்காமல் சாப்பிடுவதும், பிறருடைய எச்சில் பொருள்களைத் தொடுவதோ, சாப்பிட்ட இடத்தை மெழுகுமுன் மிதிப்பதோ கிடையாது. இப்படிப்பட்ட உயர்ந்த பழக்க வழக்கங்கள் சைவ சமயத்தினரிடம் மட்டுமே உண்டெனச் சான்றோர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். இப்போது நம் சைவ தேசிகர், குருக்கள் வீடுகளிலும் இப்பழக்கம் குறைந்து வருவது மிகவும் வருந்துவதற்குரியது. இக்கேட்டைத் திருவருள்தான் நீக்க வேண்டும். உனக்குச் சாப்பிடத் தெரியுமா? என்றும்; காக்காய் கடி என்றால் என்ன தெரியுமா? என்றும்; பறவைகள், விலங்குகள் போல் உண்ணாமல் அண்ணாக்கச் சாப்பிடும் பழக்கத்தை உணர்த்துவதற்காகவே நம் குடும்பத்துப் பெரியவர்கள் மிக நுட்பமாக் கேட்டிருக்கிறார்கள். என்று கருதுகிறோம்.

பிறப்பிறப்புத் துன்பம் நீங்குவதற்கு பிறவாமையைத் தேடிக்கொள்ள வேண்டும், பிறவாமையைப் பெறுவதற்கு என்றும் பிறப்பிறப்பில்லாத சிவபெருமானது திருவருளொன்றே துணை செய்யும். சிவபெருமானது திருவருள் அவரது திருவுள்ளப்படி கடைப்பிடிக்கும் நற்பேறு, மனிதராகப் பிறந்தவரனைவருக்கும் வாய்ப்பதில்லை. ***சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது*** என்கிறது சிவஞானசித்தியார். சைவ ஒழுக்கம் சிவதீட்சையாலன்றி முடிந்தமுடிவாகிய பயனைத் தரமாட்டாது. இவ்வுண்மையை உணர்ந்து முறையாகத் தீட்சையைப் பெற்றுப் பயன்பெறும் வாய்ப்பில் ஒழுகுபவர்கள் மிகச் சிலராகவே இருக்கிறார்கள். இவர்களைப்போல நாமும் வீடு பேறடைய முயற்சிப்போமாக!

உண்மைச் சைவர்கள்

சிவதீட்சைகளைப் பெற்றுச் சிவபெருமானை வழிபடுபவர்களே உண்மைச் சைவர்கள். அனாதிசைவராகிய சிவபெருமான் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் தமது ஐந்து திருமுகங்களாலும் ஆதியில் தீட்சை அருளிய கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர் ஆகிய ஐந்து முனிவர்களின் வழிவந்து, சமய, விசேட, நிர்வாண தீட்சைகளையும், ஆசாரிய அபிசேகத்தையும் பெற்று, ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய சிவபூஜைகளுக்கு அதிகாரமுள்ளவர் **ஆதி சைவர்** என்றும், இதில் பரார்த்த பூஜைக்கு அதிகாரமில்லாதவர் **சைவர்** என்றும், அந்தணர் குலத்தில் சிவதீட்சை பெற்றவர் **மகா சைவர்** என்றும், அரசகுலம், வணிகர் குலங்களில் சிவதீட்சை பெற்றவர்கள் **அநு சைவர்** என்றும், வேளாள குலத்தில் சிவதீட்சை பெற்றவர்கள் **அவாந்தர சைவர்** என்றும், சிவதீட்சை பெற்ற அநுலோமர் **பிரவர சைவர்** என்றும், சிவதீட்சை பெற்ற பிரதிலோமர் முதலியோர் **அந்திய சைவர்** என்றும், பெயர் பெறுவார்கள்.

உணவுச் சைவர்கள்

சைவ சமயத்தினரின் உலகியல் ஒழுக்கத்தில் தலை சிறந்தது புலாலுண்ணாமை. இதனை ஊன் நீக்கி உண்பவனை **சைவன்** என்றும், ஊனுடன் உண்பவனை **அசைவன்** என்றும் தொன்று தொட்டு உலகம் கூறுவதால் அறியலாம். உணவுச் சைவர்களில், உண்மைச் சைவர்கள் மட்டுமின்றி மற்றைச் சமயவாதிகளும், வேறுநாட்டவர்களும், சமயப்பகைவர்களும் கூட இருப்பார்கள், ஆகவே இவர்களைச் சைவர்களென்று சொல்லுவது எள்ளளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பிறவிச் சைவர்கள்

பிறப்பால் சைவர்களென்று தங்களைப் பெரிதுபடுத்திக் கொள்ளுகிறவர்களும் நம் நாட்டில் இருக்கிறார்கள். பிறப்பு மட்டும் ஒருவனுக்குப் பெருமை சிறுமையைக் கொடுப்பதில்லை என்பது அறிஞர்களால் ஒப்பமுடிந்தது. சமயதீட்சை கூடப் பெறாமல் சைவச் சாதியர் என்று பிதற்றுவோர் எப்படிச் சைவராவார்? சிவதீட்சை எதுவும் பெறாமல் தங்களைச் சைவர்கள் என்று தம்பட்டம் அடித்க்கொள்வது போலியாகவே முடியுமென்பதை எல்லோரும் உணர வேண்டும்.

பட்டங்களும் பதவிகளும்

பரம்பரைச் சைவக்குடும்பத்தில் பிறந்து சிவதீட்சைகளுள் முதலாவதாகிய சைவசமய தீட்சையைப் பெற்றவர்கள் **சைவத்திரு** என்னும் **திருஉருவப்பூஜகர்** பட்டத்தையும், இரண்டாவதாகிய விஷேட தீட்சை பெற்றவர்கள் **தேசிகர்** என்னும் **ஆன்மார்ந்த சிவபூஜகர்** பட்டத்தையும், மூன்றாவதாகிய நிர்வாண தீட்சையையும், கிரியா அபிஷேகத்தையும் பெற்றவர்கள் **குருக்கள்** என்னும் **லோகதருமணி** பட்டத்தையும், நிர்வாண தீட்சையையும், ஆசாரிய அபிஷேகத்தையும் பெற்றவர்கள் **ஆசாரியர்** என்னும் **சிவதருமணி** பட்டத்தையும், தீட்சா நாமத்தையும் குருநாதரால் வழங்கப் பெறுவார்கள். இந்தப் பட்டங்கள் அனைத்தும் சைவ சமயத்தில் அவரவர்களின்

தகுதியைக் குறிப்பதாக விளங்குகிறது. இந்த நுட்பமான விளக்கம் தெரியாதவர்கள், தேசிகர் மகன் தேசிகர் என்றும்; குருக்கள் மகன் குருக்கள் என்றும்; ஓதுவார் மகன் ஓதுவார் என்றும்; கவிராஜர் மகன் கவிராஜர் என்றும், தமக்கு தாமாகவே பட்டத்தைப் போட்டுக்கொள்கிறார்கள். இதைத் தம்பட்டம் என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறோம்.

சிலர், தொழிலைப் பொறுத்து ஓதுவார், பண்டாரத்தார், பூசாரி, கிராமக்கோவில் பூசாரி, தவசிபிள்ளை, கவிராயர், கார்காத்தார், கருணீகர், சைவ வேளாளர், சைவப்பிள்ளை, சைவச் செட்டியார், சைவ முதலியார், சைவ நயினார், கணக்கப்பிள்ளை, எனப் பெயர் பெறுவார்கள். சைவம் + பிள்ளை = சைவப்பிள்ளை சைவ என்பது **மாமிசம் உண்ணாதவர்கள்** என்பதைக் குறிக்கும். பிள்ளை என்பது சைவ சமய நெறிமுறைகளில் தலைப்படாதவர்கள், என்பதைக்குறிக்கும். 100 வயது ஆனாலும் இவர்கள் பிள்ளையே ஆவார்கள்.

கோத்திரம் : கோத்திரம் என்றால் அவரவர்களின் வம்சத்தில் முதன் முதலாகச் சிவதீட்சை பெற்றவர்களின் பெயரையோ தீட்சா நாமத்தையோ கொண்ட வம்சாவழியைக் குறிக்கும் என்று கருதுகிறோம். இதற்குக்காரணம் ஒருகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருமே பங்காளிகள் ஆதலால் ஒருவருக்கொருவர் ஆண்களை சுவிகாரம் கூட்டலாமே தவிர பெண் கொள்ளக் கொடுக்கச் சம்பந்தம் செய்து கொள்ளக் கூடாது என்ற நியதியும் இருப்பதால் அறிய முடிகிறது. திருப்புகலூரிலுள்ள வேளாகுறிச்சி ஆதீனமும், துலாவூர் ஆதீனமும் ஸ்ரீ வாஞ்சியத்தில் தோன்றியது. சத்திய ஞானி கோத்திரம், சைவ வேளாளர் குலம், குடும்ப மடம் (கிரகஸ்த ஆசிரமம்). சீடர்களுக்குச் சிவதீட்சை செய்விப்பதேயே கடமையாகக் கொண்ட ஆதீனங்கள்.

முடிவுரை

ஒருவர் ஆதிசைவ மரபில் வந்தராயினும், முறையாகச் சிவதீட்சையைப் பெறாதபொழுது அவர் சைவக்கிரியை எதனையும் செய்வதற்குரிய அதிகாரம் உடையவரல்லர் என்றால் மற்றையோர், சிவதீட்சை பெறாமல் தங்களைச் சைவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வது போலியாகவே முடியும், என்பதை எல்லோரும் உணரவேண்டும், மேலும் ஆதிசைவர் முதலிய யாராயிருந்தாலும் **சிவதீட்சை பெற்றே சைவக்கிரியைகளில் ஒழுகவேண்டும்** என்னும் நியதியிருப்பதாலும், சிவதீட்சை பெற்ற பிறகு, பெற்ற தீட்சைக் கேற்ப அநுட்டானம், ஜெபம், ஆன்மார்த்த பூஜை, அக்கினி காரியம் ஆகியவற்றை வழுவறச் செய்து வருபவரே தீட்சைப் பயனைப் பெறுவராதலாலும், தீட்சையோ, தீட்சைக்குரிய அநுட்டானமோ இல்லாதவரைச் **சைவரல்லர்**, சாதாரண மனிதர் என்று கொள்ளுதல்தான் முறையாகும்.

சிவனடியார்களுக்கு அமுதளித்த பலன்

ஆசாரியர், நிர்வாண தீட்சிதர், விஷேட தீட்சிதர், சமய தீட்சிதர் என்னும் நால்வருமே சிவனடியாராவார்கள். மற்றவகைகளில் எத்துணை சிறப்புடையவராயினும், சிவதீட்சை இல்லாதவரைச் சிவனடியார் என்று சைவ மரபு ஏற்றுக் கொள்ளாது. சிவனடியார்களை விதிப்படி பூசித்து திருவமுதுண்ணச்செய்வித்தல் **மாகேசுவர பூஜை** யாகும். நடமாடும் கோயில்களாகிய மாகேசுரார்கள் படமாடும் கோயிற் பரமனாகவே எண்ணப் பெறுவார்கள். மாகேசுவரர் என்றால் மகேசுவரனை வழிபடுவோர் என்று பொருள்.

வைதீகபிரமணர் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் =
சமய தீட்சிதர் ஒருவருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் சமமாகும்

வைதீக பிராமணர் 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் =
விஷேட தீட்சிதர் ஒருவருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் சமமாகும்

வைதீக பிரமணர் 1 லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் =
நிர்வாண தீட்சிதர் ஒருவருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் சமமாகும்

வைதீக பிரமணர் 10 லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் =
சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானம் வழங்கிய பலனும் சமமாகும்.

- பிரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் செய்யும் வேலை ஒருநாளும் கஷ்டமாக இருக்காது.
- எல்லாம் கடவுள் செயல் என்றிருந்தால் துன்பமில்லை, கவலையுமில்லை.
- ஒருநூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது சிறந்தது.
- நம்மிடமுள்ள குறைகளைப் போக்கிக் கொண்டு நிறைவுடன் வாழ்வோமாக
- எல்லா உயிர்களின் நலத்திலும் ஈடுபாடுள்ளவர் இறைவன்
- தூய சிந்தனை தோன்ற கடவுள் பக்தி வேண்டும்.
- யோகம் என்பது சித்த விருத்தியை அடக்குதல்
- மனிதன் என்றால் மனம் உடையவன், நினைப்பவன் என்று பொருள். நினைப்பது இறைவன் திருவடியேயாகும். திருவருளிருந்தாலன்றி அவன் திருவடியை நினைக்கும் பேறு மனிதனுக்குக் கிடைக்காது

- கடமையை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருந்து உழைத்து உயர்வோம்.
- சாத்வீக ஆகாரத்தை நன்றாக மென்று, அளவாக உண்போம்.
- நமது வருவாயில் குறைந்தது நூறில் ஒருபங்கு தான, தருமங்கள் செய்வோம்.
- எல்லா மதத்தினரிடமும், எல்லா சாதியினரிடமும் அன்புடன் பழகுவோம்.
- தீட்சை பெற்ற அனைவரும் அதற்குரிய கடமைகளைச் செய்துவரவேண்டியது அவசியம்.

22. பிராமணர் யார்?

ஜன்மநா ஜாயதே சூத்ர:

கர்மணா ஜயதே த்விஜ:

வேத பாடந்து விப்ராணாம்

ப்ரஹ்மஜ்ஞாநந்து ப்ராஹ்மண:

ஜன்மநா ஜாயதே சூத்ர: என்றால் குழந்தையாய்ப் பிறந்தவுடன் சூத்திரனாயிருக்கின்றான், கர்மணா ஜயதே த்விஜ: என்றால் உபநயன மென்னும் கர்மம் செய்வதனால் த்விஜ: இரண்டாவது ஜனனம் அடைந்தவனாகின்றான். வேத பாடந்து விப்பராணாம் என்றால் வேதங்களை வாசிப்பதனால் பூணூல் போட்டு கர்மம் செய்யும் பிராமணனாகின்றான். ப்ரஹ்மஜ் ஞானந்துப்ராஹ்மண: என்றால் பிரம்மஞானமடைந்தவன் பூணூலில்லாத பிராமணனாகின்றான்.

குழந்தை பிறந்ததிலிருந்து சூத்திரனாக இருக்கிறான், அவனுக்கு 8-ம் வயதில் உபநயனம் (உப என்றால் மேல் இருக்கப்பட்ட, நயனம் என்றால் கண் அதாவது மூன்றாவது கண்ணைத் திறப்பிப்பது உபநயனம்) என்றால் நெற்றிக்கண்ணைத் திறக்கச் செய்ததால் இரண்டாவது ஜன்மத்தை அடைந்தவனாகிறான். உபநயன காலத்தில் மூன்று இழைகளையுடைய பூணூலை (பூணும் நூல்=பூநூல்) மாத்திரம் இடது தோள் முதல் வலது இடுப்பு வரை அணிவிக்கப் பெறுகிறது. இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் இம் மூன்று நாடிகளும் இடது வலது நாசிகளிலும், புருவமத்தியிலிருந்து உசுவாச நிசுவாசங்களாய் ஆடிக்கொண்டிருக்கின்றன. இந்த மூன்று நாடிகளே யக்ஞோப வீதமென்று (பூணூலென்று) அறிக!

பிரம்மாவினுடைய முகங்களிற்தோன்றிய இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவர்கள் வைதீகப் பிராமணர்கள். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, வேளாளர் பஞ்சம ஜாதிகளாகிய ஐந்து ஜாதியர்களுள், அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்னும் நான்கு ஜாதியாரும் பூணூல் அணியலாம், சூத்திரர்கள் சரியான ஆசார அநுட்டானத்துடன் இராததனால் அவர்களுக்கு விவாக காலத்திலும் பிதுர்தர்ப்பணங்கள், உத்திரகிரியைகள் செய்யும் போது கழுத்தில் பூணூல் போடுகிறார்கள். இப்பூணூல் கர்மத்திற்கேயொழிய ஞானத்திற்கு இல்லை. ஒவ்வொரு விஷயமும் சுருதி, குரு, சுவானுபவமில்லா விடில் அவ்விஷயத்திலுள்ள ரகசியத்தைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை.

உலகத்தில் உள்ளவர்களெல்லோரும் மோட்சத்தை விரும்புகிறார்கள். அது எவ்வாறு சித்திக்கும்? ஆசாபாசங்களை எல்லாம் சுட்டு பஸ்மம் செய்தாலல்லவோ மோக்ஷமென்னும் பதவி உண்டாகும். மோட்சமென்னும் பதத்திற்குச் சரியான பொருள் வீடுதலை, விடுதலை என்றால் பந்த பாசத்திலிருந்து விடுபடுதல். பந்தபாசமென்றால் பெண்டு பிள்ளைகளின் மீதும், உறவினர்கள் நண்பர்கள்மீதும், தனம் தானியம், வீடு, நிலம், தோட்டம் துரவுகள் முதலானவைகளின் மீது வைத்திருக்கும் ஆசைகளே பந்தமென்று சொல்லப்பெறும். இவ்வாசைகளையெல்லாம் ஒழித்து விட்டால் ஆன்மாவைப்பிடித்துக் கொண்டிருந்த பந்தமென்னும் பிடிப்பு; விட்டு ஒழியும்.

அப்பந்தம் ஒழிந்து போவதே மோக்ஷம். ஆன்மாவைப் பற்றிக்கொண்டிருக்கும் முன்சொல்லிய பந்த பாசங்கள் எல்லாம் ஒழிந்து விட்டால் மறுபடியும் பிறவி உண்டாவதற்கு ஏதுவில்லை. பிறவிக்கு காரணம் முன்சொல்லிய ஆசாபாசங்களே வித்தாய் (விதையாய்) இருந்துகொண்டு எண்ணற்ற பிறப்புக்களை எடுக்கும்படி செய்கின்றன. எனவே மனதைக் கட்டுப்படுத்தித் திருப்தியுடன் வாழ பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும்.

சுமார்த்த சமயத்தவர்களின் கடவுள் சூரியனும் மும்மூர்த்திகளும் முக்கிய தெய்வங்களும், வேதத்தில் சொன்ன பல தெய்வங்களும். தோத்திரம்: வடமொழி வேதமந்திரங்கள். திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர், அருளிய தேவாரதிருவாசகங்களை ஓதுவதில்லை. சமய நுழைவுக்கிரியை: உபநயனம். கிரியாகாண்டப் பிரமாண நூல்: ஸ்மிருதிகளும், கல்பசூத்திரங்களும். தத்துவக்கொள்கைக்கு: வியாசர்பிர்ம சூத்திரமும். உப நிடதங்களும், கீதையும், சங்கர பாஷியமும். தத்துவக்கொள்கை: ஏகாத்மவாதம் உண்மையில் பரப்பிரம்மத்தைவிட வேறொன்றுமில்லை என்பது வருணாசிர தருமம்

காயத்திரி மந்திரம்

ஓம் பூர்ப்புவ ஸ்சுவஹ - தத் ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி-தியோ யோநமஹ ப்ரசோதயாத்!

இதன் பொருள்: பூர்ப் புவஸ்சுவஹ= பூமி, ஆகாயம், சுவர்க்கம் இம்மூன்றிலும் நிறைந்துள்ள; யஹ= எவர்; நஹ= நமது; தீயஹ=அறிவை; தத்=அப்படிப்பட்ட; தேவஸ்ய=ஒளிமிக்கவரான; ஸவிதுஹு= உலகைப் படைத்தவருடைய; வரேண்யம்=மிக உயர்ந்ததான; ப்ரகஹ= தேஜஸ்(ஒளியை) தீமஹி= தியானம் செய்கிறோம்.

ரிக் வேதத்தில் வரும் இந்த மந்திரத்தை யாவரும் சொல்லலாம். குருவிடம் இதை உச்சரிக்கும் முறையை உபதேசம் பெற்று நியமங்கள் எல்லாம் அனுசரித்து ஜெபம் செய்கிறபோது, இது நிறைய பயன்களைக் கொடுக்கும்.

23. நகரத்தார் யார்?

நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இரத்தின தன மகுட பூபால வைசியர்கள் என்று பெயர் பெற்று வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு பூவந்தி சோழராஜன் செய்த கொடுங்கோன்மையால்; ஆடவரும், பெண்டிரும் அவர்தம் பெண் குழந்தைகளும், மானத்தைக் காக்கும் பொருட்டு உயிர்த் தியாகம் செய்து கொண்டார்கள். அவர்களின் ஆண் குழந்தைகள் மட்டும் குருகுல வாசம் செய்து படித்து வந்தார்கள். இவர்கள் திருமணம் செய்து கொள்ள வைசிய குலத்தில் பெண்கள் இல்லாததால், கார்காத்த வெள்ளாளர்; சோழிய வெள்ளாளர்; காணியாள வெள்ளாளர் ஆகிய மூன்று வகை வெள்ளாளர் பெண்களை மணந்து இல்லறத்தினராகித் தீட்சை பெற்றுச் சிவதரும சீலர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

பிறகு பாண்டிய நாட்டிற்கு வந்ததும், கார்காத்த வெள்ளாளர் பெண்களை மணந்தவர்கள் *அரிவையூர் நகரத்தார்கள்* என்றும், இவர்களின் வழிபாட்டிற்குப் பிரான்மலையிலுள்ள சிவன் கோவிலும், சோழிய வெள்ளாளப்

பெண்களை மணந்தவர்கள் **நாட்டுக்கோட்டை நகரத்தாரர்கள்** என்றும், இவர்களின் வழிபாட்டிற்குப் பூங்கொன்றை நாட்டு வேலங்குடியிலுள்ள சிவன் கோவிலும், காணியாளர் வெள்ளாளர் பெண்களை மணந்தவர்கள் **சுந்தர நகரத்தாரர்கள்** என்றும். இவர்களின் வழிபாட்டிற்குச் சிவபுரிபட்டியிலுள்ள சிவன் கோவிலும், பாண்டிய மன்னரால் வழங்கப் பெற்றது. நகரத்தார்கள் இந்நாட்டிற்கு வரும்போது கூடவே அழைத்துவந்த குருநாதர் ஸ்ரீவாஞ்சியம் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளுக்கு குன்றக்குடியில் மடமும், சொத்துக்களும், ஐந்து கோவில் தேவஸ்தானங்களும் பாண்டிய மன்னரால் வழங்கப் பெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வேண்டுகோள் படி ஏழு வகைக்கும், இளையாற்றங்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி, வயிரவன்பட்டி, நேமம், சூரக்குடி, வேலங்குடி, மாத்தூர், இலுப்பக்குடி, என்னும் ஒன்பது ஊர்களிலும் சிவன் கோவில்களைப் புதிதாக ஏற்படுத்திக் கொடுத்து. அதற்கு வேண்டிய கிராமங்களும், பாண்டிய மன்னரால் வழங்கப்பெற்றது. அவைகளை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தனித்தனியே உரிமை பாராட்டி அவரவர்களுக்குரிய கோவில்களைச் சிறப்பாக இயக்கி வருகிறார்கள். கோவில்களின் பெயர்கள்தான், இவர்களின் கோத்திரப் பெயர்.

நாட்டுக்கோட்டை நகரத்தாரிலிருந்து பிரிந்து சென்றவர்கள்தான், உருதிக்கோட்டை வட்டகை நகரத்தார்களும்; முறையூர் வட்டகை நகரத்தார்களும்; இவர்கள் பழைய வழக்கப்படியே எல்லா முறைகளும் பழக்க வழக்கங்களும் இருக்கிறது. இவர்களின் ஆண்கள் பாதரக்குடி சுவாமிகளிடத்திலும்; பெண்கள் துலாவூர் ஆதீன சுவாமிகளிடத்திலும், சைவ சமய தீட்சை பெற்றுச் சைவ சமயியாகிச் சைவமும் தமிழும் தழைத் தோங்கச் செய்யும் நகரத்தார்கள்; **மரபு காக்கும் மாண்புடையோர்கள்.** மன்னவர் பின்னவராகத் திருக்கோவில் திருப்பணி செய்பவர்கள்.

கோத்திரத்தால் ஏழாய் கோவிலால் ஒன்பதாகி
தோத்திரத்தொடு கோவில் திருப்பணியும், குடமுழுக்கும்
பாத்தியமாய் நகரத்தார் அறப்பணிசெய் அன்பர்களின்
கோத்திரமே புகழுறைச்செய் குருதலமாம் துலாவூரே.

24. குலம் காத்தல்

நம்நாட்டில் காங்கிரஸ், ஜனதா, பாரதீய ஜனதா, தி.மு.க., அ.தி.மு.க. என்று பலகட்சிகள் இருக்கின்றன, ஒவ்வொரு கட்சிக்கும் தலைவர்களும், தொண்டர்களும் இருப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். அந்தந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த கட்சிக்கொள்கையை மதித்துப் போற்றிப் பின்பற்றி நடக்க வேண்டும். அவரே அந்தகட்சியைச் சேர்ந்த (தொண்டர்) வராவார்கள். அப்படியில்லாமல் கட்சிக்கும் கட்சிக்கொள்கைக்கும் விரோதமாக ஒருவர் நடந்தாலோ அல்லது செயற்பட்டாலோ அவரைக் கட்சித் தலைமையிடம் கண்டித்துத் திருத்திப்பார்க்கும்; திருந்தவில்லையாயின், அக்கட்சியை விட்டு நீக்கிவிடும், அதுதான்வழக்கம்; நடைமுறையும்கூட. இதை அறிந்த சட்டப்பேரவைச் சபாநாயகர் அவர் எந்த ஒரு கட்சியையும் சார்ந்தவரல்லர் என்று அறிவிப்பார்.

அதுபோல ஆதிசைவர், சைவர், வைணவர், சுமார்த்தர் போன்ற பல வகுப்புகளுக்கும் பிரம்மகுலம் என்பது பொதுச்சொல். அந்தந்த வகுப்பினர் அந்தந்த வகுப்புக் கொள்கையை மதித்துப் போற்றி பின்பற்றி நடக்க வேண்டும். அவரே அந்தக் (கட்சியைச்) குலத்தைச் சேர்ந்தவராவார். இவர்கள் சைவசமயக் கொள்கையுடையவர்கள். எனவே கொலை, புலாலுண்ணல், மதுவருந்துதல் போன்ற குற்றங்களை நீக்கி, இயமம், நியமம், ஒழுக்கம், ஆசாரம், சுத்தம், தீட்சை, பக்தி, கடவுள் நம்பிக்கை, கடவுள் வழிபாடு, முதலான தத்தம் வகுப்புக் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். தம்மைச் சார்ந்தவர்களையும் அவ்வாறே நல்வழியில் நடக்கச் செய்யவேண்டும்.

அப்படியில்லாமல் தத்தம் வகுப்புக்கும், கொள்கைக்கும் விரோதமாக ஒருவர் நடந்தாலோ அல்லது செயல்பட்டாலோ அவரைச் சேர்ந்த உற்றார் உறவினர்கள் கூடித் கண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும், அதுதான் முறையாகும். இதைத்தான் சாதிமுறை நியாயம் என்பார்கள். ஜாதிக்கும், மதத்திற்கும் தலைமையாகயிருக்கும் தத்தம் குலகுரு அவர்களை நல்வழிப்படுத்துவார்கள். அல்லது ஜாதிப் பிரஷ்டம் செய்வார்கள். அல்லது மன்னிப்பார்கள்.

25. குருசங்கம சேவை

குரு என்பவர்கள்; தீட்சாகுரு, வித்யாகுரு, போதககுரு மற்றும் பள்ளிக்கல்வி ஆசிரியர் ஆகியோரையும் குறிக்கும். குரு என்றால் ஆசாரியன் தேசிகன், பட்டாரகன் என்றும் பெருள். சங்கமம் என்பவர்கள் = நிர்வாண தீட்சை பெற்றவர், விசேடதீட்சை பெற்றவர்கள், சமய தீட்சை பெற்றவர்கள் ஆகியவர்கள் சிவபக்தர்கள் ஆவார்கள்.

குருவையும் = சிவபக்தரையும் மனிதர் எனக்கருதாது, சிவபெருமான் எனவே கருதி மனம் வாக்குக் காயம் என மூன்றினாலும் சிரத்தையோடு வழிபடல் வேண்டும். பிரதிட்டை செய்து பூசிக்கப்பெறும் சிவலிங்கத்தைச் சிலை என்று நினைத்து அவமதிப்பவரும், சிவதீட்சை பெற்று இயன்ற மட்டும் விதிப்படி அநுட்டிக்கும் சிவபத்தரை மனிதர் என்று நினைத்தேனும் அவருடைய பூர்வ சாதியை நினைந்தேனும் அவமதிப்பவரும் தப்பாது நரகத்தில் வீழ்வர்.

சிவபக்தர்கள் சிவபெருமானெனக் கருதப்படுவதற்கு காரணம், சிவபெருமான் வேறற அதிட்டித்து நிற்கப் பெருவனவாய்க் கண்டவுடனே சிவபெருமானை நினைப்பிப்பவனாய் உள்ள திருவேடங்களையுடைமையும் நாடோறும் ஸ்ரீ கண்ட நியாசம், பஞ்சபிர்ம ஷடங்க நியாசம் கலாநியாசங்கள் வாயிலாகச் செய்யும் சிவோகம் பாவனையும், பிரசாத யோகஞ்செய்தாலும் தம்மின் இரண்டற இயைந்த சிவத்தோடு கலந்து நிற்கும் தன்மையுமாம். சிவபத்தரைச் சிவமெனக்கண்டு வழிபடுதற்கு, வேடம், பாவனை, செயல், தன்மை, என்னும் இந்த நான்கனுள் ஒன்றேயமையும். மேலும் சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானம் செய்து விட்டுச் சிவலிங்கப் பெருமானிடத்தே அன்புடையவர்போல் ஒழுகுதல் வயிறு வளர்ப்பின் பொருட்டு, நடித்துக்காட்டும் நாடகமேயன்றி வேறில்லை.

வணங்குதற்குரிய விபரங்கள்: சமயதீட்சை பெற்றவர், சமயதீட்சிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும், விசேட தீட்சிதரையும், நிர்வாண தீட்சிதரையும், ஆசாரியரையும் வணங்குதற்குரியர். இதுபோல மற்ற தீட்சைகளுக்கும் கொள்க. ஆசாரிய அபிடேகம் பெற்றவர் ஆசாரிய அபிடேகம் பெற்றவர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்குரியர். சைவாதீனகுரு மஹாசந்நிதானம் சிறுவயதினராக இருப்பினும் ஆதீனகுரு முதல்வராகக் கருதி மூத்தவராக இருப்பவரும் அவரை வணங்க வேண்டும். இது ஆசாரிய பீடத்திற்கு கொடுக்கும் மரியாதை.

வருணம், ஆச்சிரமம் என்னும் இரண்டிலும் தம்மைவிடத் தாழ்ந்தவர் தீட்சை முதலியவற்றில் தம்மைவிட உயர்ந்தவராயின் அவரை அவமதிக்காமலும், புறவணக்கம் செய்யாமலும், மனத்தால் வணங்கவேண்டும். அவமதித்தவர் நரகத்தில் வீழ்வர். ஞானிகளாயின் வருணாசிரமங்களைக் கருதாமல் எல்லோரும் வணங்கவேண்டும். திருவேடமாத்திரமுடையவரைக் காணினும் அத்திருவேடத்தால் வசீகரிக்கப்பட்டு, அடியற்ற மரம் போல் வீழ்ந்து வணங்குவபர் அவ்வுண்மையை திருத்தொண்டர் (பெரிய) புராணத்தினாலே தெளியப்படும்.

தாம் பிறரை வணங்கும் வணக்கத்தை எப்படிக் கருதவேண்டுமெனில் *இவ்வணக்கம் இவருக்கன்று இவரிடத்து வேறற நிற்குஞ் சிவபெருமானுக்கேயாம்* என்று கருதவேண்டும். அப்படிக்கருதாதவர் அவ்வணக்கத் தாலாகிய பயனை இழப்பர். தம்மைப் பிறர் வணங்கும் வணக்கத்தை எப்படிக் கருதவேண்டுமெனில் *இவ்வணக்கம் நமக்கன்று நம்மிடத்து வேறற நிற்குஞ் சிவபெருமானுக்கேயாம்* என்று கருதி வாழ்த்த வேண்டும். அப்படிச் செய்யாதவர் சிவத்திரவியத்தைக் கவர்ந்தவராவர்.

குருவையும், சிவனடியாரையும் தரிசிக்க வெறுங்கையுடனே போகாது தம்மால் இயன்ற பதார்த்தத்தைக் கொண்டுபோய் அவர் சந்நிதியில் வைத்து அவரை வணங்கி எழுந்து, கும்பிட்டு, திருநீறு வாங்கித் தரித்துக் கொண்டு மீண்டும் வணங்கி எழுந்து கும்பிட்டு அவர் இரு என்றபின் இருத்தல் வேண்டும். குருவாயினும், சிவனடியாராயினும் தம்வீட்டிற்கு வந்தால் விரைந்து எழுந்து குவித்த கையோடு எதிர்கொண்டு இன்சொற்களைச் சொல்லி அழைத்துக் கொண்டு வந்து ஆசனத்திலிருந்து அவர் திருமுன்னே இயன்றது யாதாயினும் வைத்து அவர் திருவடிகளைப் பத்திரபுட்பங்களால் அருச்சித்து வணங்கி எழுந்து கும்பிட்டு அவர் இரு என்றபின் இருத்தல் வேண்டும். அவர் போகும் பொழுது அவருக்குப் பின்னே பதிநான்கடி போய் வழிவிடல் வேண்டும். இரவு நேரத்திலும் பயமுள்ள இடத்திலும் அவருக்கு முன்னே போகவேண்டும்.

குருவுக்கும், சிவனடியாருக்கும் நாம் செய்யலாகாத குற்றங்களாவன: கண்டவுடன் இருக்கையை விட்டெழாமை, அவர் எழும்போது உடனெழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல் படுத்துக்கொள்ளுதல், போர்த்திக்கொள்ளுதல், வெற்றிலை பாக்கு புசித்தல், பாதுகையோடு செல்லுதல், சிரித்தல், அவராலே தரப்படுவதை ஒருகையால் வாங்குதல், அவருக்குக் கொடுப்பதை ஒருகையால் கொடுத்தல், அவருக்குப் புறங்காட்டல், அவர் பேசும்போது பாராமுகம் செய்தல், அவர் கோபிக்கும்போது தாமும் கோபித்தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியவைகளைத் தாம் உபயோகித்தல், அவைகளைத் தம்காலினாலே தீண்டுதல், அவர் திருநாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி

சொல்லுதல், அவரை யாராயினும் நிந்திக்கும்பொழுது, காதுகளைப் பொத்திக்கொண்டு, அவ்விடத்தினின்று நீங்கிவிடாது கேட்டுக்கொண்டிருத்தல் முதலியவைகளாம்.

குரு முன்னும் சிவனடியார் முன்னும், வஸ்திரத்தை ஒதுக்கிச் சரீரத்தை சற்றே வளைத்து, வாய்புதைத்து நின்று அவரை **சுவாமி** என்பது முதலிய சொற்களினாலே உயர்த்தியும் தன்னை **அடியேன்** என்பது முதலிய சொற்களினாலே தாழ்த்தியும் மெல்ல விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

குருவையும், சிவனடியார்களையும் வணங்கலாகாத காலங்கலாவன: உண்டபின் அவர் படுத்துக்கிடக்கும் போதும், பத்திரபுட்பம் எடுக்கும்போதும், வெற்றிலை பாக்கு உண்ணும்போதும், குளித்தல், சந்தியாவந்தனம், பூஜை, ஹோமம், சிரார்த்தம், சாப்பிடல் முதலியன செய்யும்போதும் அவரை வணங்கலாகாது.

தீட்சாகுரு, திருமுகம் விடுத்தருளின் அதை ஒரு பீடத்தின்மீது எருந்தருளப் பண்ணி பத்திரபுட்பங்களால் அருச்சித்து, வணங்கி, இரண்டு கைகளாலும் எடுத்து, இரணடு கண்களிலும் ஒற்றிச் சிரசின் மேல் வைத்து, பின்பு திருக்காப்பு நீக்கிப் படித்தல் வேண்டும்.

சீடர்கள் விரும்பித்தரும் தட்சிணையைத் தாம் செய்த உதவிக்குக் கைமாறெனக் கருதி ஆசையால் வாங்கலாகாது. அவர்கள் உய்யுந்திறங்கருதிக் கருணையால் ஏற்றுக்கொள்ள வேண்டும். சீடர்கள் தங்கள் குருவுக்கு எத்துணைப் பொருள் கொடுப்பினும் தங்களை அவர்களுக்கு அடிமையாக ஒப்புவித்து விடுதல் ஒன்றையே அன்றி அப்பொருளைக் கைமாறெனக் கருதிவிடலாகாது.

தீட்சாகுரு, வித்யாகுரு, முதலாயினோர் சிவபதம் அடைந்த நாளை வருடந்தோறும், அவர் சிவபதமடைந்த மாத நட்சத்திரம், அல்லது திதியில் அவரைக் குறித்துக் குருபூசை செய்து கொண்டு வரவேண்டும். நமது துலாவூர் ஆதீனக் குருமுதல்வர் சற்குரு ஸ்ரீ நிரம்பஅழகிய தேசிகபரம ஆசாரிய சுவாமிகள், அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் அமரபட்சப் பிரதமை திதியில் குருபூசை சிறப்பாக நடைபெறுகிறது.

குருபூசை அவசியம் செய்யப்பட வேண்டியவர்கள் பல அற்புதங்களைச் செய்தும், தமிழ் வேதத்தைத் திருவாய் மலர்ந்தருளியும், சைவசமயத்தை தாபித்தருளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் முதலிய சமயக் குரவர்கள் நால்வர்க்கும், பசு, பதி, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் சைவ சித்தாந்த நூலுணர்ச்சியை வளர்த்தருளிய மெய்கண்ட தேவர் முதலிய சந்தான குரவர் நால்வர்க்கும் அறுபத்து மூன்று நாயன்மாருடைய மெய்யன்பையும், அவ்வன்புக்கு எளிவந்தருளிய சிவபெருமானுடைய பேரருளையும், அறிவித்து அவரிடத்தே அன்புருகச் செய்யும் பெரியபுராணத்தைத் திருவாய் மலர்ந்தருளிய சேக்கிழார் நாயனாருக்கும், தமிழ் வழங்கும் நிலமெங்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்திய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாருக்கும், இயன்ற மட்டும் குருபூசை செய்து குருவருளும் திருவருளும் பெறுவோமாக!

குருபூசைக்குத் தங்களால் இயன்ற பணமோ, பதார்த்தங்களோ இரண்டுமோ கொண்டுபோய்க் கொடுத்துத் தரிசனம் செய்தல் அதுவுமில்லாதவர்கள் காய்கறி திருத்துதல், மெழுகுதல், கூட்டுதல், கோலமிடல், போன்ற திருத்தொண்டுகளைச் செய்யலாம். குருபூசைக்கு அழைக்கப்பட்டும், அழைக்கப்படாதும் வந்த சிவபக்தர்களுக்கு திருவமுது செய்வித்தல் வேண்டும்.

26. தத்துவங்களின் பெயர்கள்

உண்ணிலைக் கருவிகள்

ஆன்ம தத்துவம்-24

1. பூதங்களாவன: பிருதுவி (மண்), அப்பு (தண்ணீர்), தேயு (நெருப்பு), வாயு (காற்று), ஆகாயம் (வெளி) ஆக 5
2. ஞானேந்திரியங்கள்: சுரோத்திரம் (செவி), துவக்கு (தோல்), சட்சு (கண்) சிருவை (நாக்கு) ஆக்கிராணம் (மூக்கு) ஆக 5
3. தன்மாத்திரைகள்: சத்தம் (ஓசை), ஸ்பரிசம் (ஊரு), உருபம் (ஒளி), ரசம் (சுசை) கந்தம் (நாற்றம்) ஆக 5
4. கன்மேந்திரியங்கள்: வாக்கு (வசனம்), பாதம் (கமனம்), பாணி (தனம்), பாயு (விசர்க்கம்), உபத்தம் (ஆனந்தம்) ஆக 5
5. அந்தக்கரணங்கள்: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக 4 இவற்றிற்கு ஆன்மதத்துவமென்றும், அசுத்ததத்துவமென்றும் போக்கிய காண்டமென்றும் பெயர்.

வித்தியா தத்துவங்கள் 7

அவை காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, ஆக 7

இவற்றிற்கு வித்தியா தத்துவமென்றும், சுத்தாசுத்த தத்துவமென்றும், பிரேரகாண்ட மென்றும் பெயர்.

சிவதத்துவங்கள்-5

அவை சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், ஆக 5 இவற்றிற்குச் சிவதத்துவமென்றும், சுத்ததத்துவமென்றும், பிரேர காண்டமென்றும் பெயர். இவை 36-ம் உண்ணிலைக் கருவிகள்.

புறநிலைக் கருவிகள் 60

பிருதுவியின்கூறு: மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை, ஆக 5.
அப்புவின்கூறு: ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை, ஆக 5.
தேயுவின் கூறு: ஆதாரம், நித்திரை, பயம் மைதுனம், சோம்பல் ஆக 5.
வாயுவின்கூறு: ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆக 5.
ஆகாயத்தின்கூறு: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் ஆக 5.
தசவாயுக்கள்: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆக10
தசநாடிகள்: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருஷன், குரு, சங்கினி ஆக 10.
வாசனாதிகள்: வசனம், கமனம், விசர்க்கம், ஆனந்தம் ஆக 5.
வாக்குகள்: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக 4.
குணங்கள்: சத்வம், ராஜசம், தாமசம் ஆக 3.
அகங்காரங்கள்: சைதன்யங்காரம், வைகரியகங்காரம், பூதாதியகங்காரம் ஆக 3.
ஆகத்தத்துவம் தொண்ணூற்றாறு.

ஆகின்ற தொண்ணூறோடாறும் பொது என்பர்
ஆகின்ற வாறா றருஞ் சைவர் தத்துவம்

திருமந்திரம்-2179

27. எப்போது, எதை, எப்படிச் செய்யவேண்டும்?

புண்யாவாசனம்

குழந்தை பிறந்த 11 வது நாள் சைவாள், பிராமணாள் முதலியோர்களுக்கும், 12வது நாள் க்ஷத்திரியர்களுக்கும், 16 வது நாள் வைசியர்களுக்கும், 21 வது நாள் வேளாளர்களுக்கும், புண்யாவாசனம் செய்ய வேண்டும். அன்றே குழந்தை பிறந்த ஆசௌசநீக்கத்திற்கு செய்வது உத்தாபனம், குழந்தைக்கு பெயர் சூட்டுதல் நாமகரணம். குழந்தைக்கு சந்திர சூர்யர்களையும், பெரியோர்களையும் தெரிசிப்பது உபநிஷ்கரமணம். குழந்தைக்கு மதுவர்க்கம் தொட்டுவைத்தல், அன்னப்ராசனம் (சோறூட்டுதல்). குழந்தை நன்றாக வளருவதற்குச் செய்வது பிண்டவர்த்தனம். இவையாவும் புண்யாவாசனத்துடனே செய்யப்பெறும்.

காதணி விழா

குழந்தை பிறந்து ஓராண்டு நிறைவில், இரண்டாம் ஆண்டு ஆரம்பதினமான தமிழ் மாதத்தில் வரும் அக்குழந்தை பிறந்த (ஜென்ம) நட்சத்திரத்தில் காலை குழந்தைக்கு தலைமயிர் களைவது, க்ஷெளரகர்மம். குளித்தபின் புதுஆடை உடுத்தி, தாய்மாமன் மடியில் வைத்துக் காதுகுத்தி, தங்கநகை அணிவித்து; பிறகு பெற்றோர் பிள்ளையோடு மணமேடையிலிருந்து, தம் குழந்தைக்குப் பாலாரிஷ்ட தோஷங்களும், கிரஹ பீடைகளும் மற்றும் என்ன தோஷம் ஏற்பட்டதோ, படுமோ அத்தோஷ பரிகாரத்தின் பொருட்டு நவக்கிஹ ஹோமமும், ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் அபிவிருத்தியாகும் பொருட்டு, மிருத்யுஞ்ஜய ஹோமமும் செய்ய வேண்டும்.

திருமணம்

படிப்பு முடித்து வேலை பார்க்கும்போது திருமணம் செய்ய வேண்டும் இதை விவாகம் என்று குறிப்பிட்டுள்ளது.

பிறகு வயது 59 முடிந்து 60 ஆரம்பமாகும் ஜென்ம நட்சத்திரத்தில் உக்ரரத சாந்தி, கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம் செய்யவேண்டும்.

வயது 60 முடிந்து 61 ஆரம்பத்தில் தாம் பிறந்த வருடம், மாதம், பிறந்த (ஜென்ம) நட்சத்திரம் வரும் தினத்தன்று சிவாகமோக்த ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி (மணி) விழா திருமணம் போல திருமாங்கல்யதாரணம், மிருத்யுஞ்ஜய ஹோமம், ஆயுஷ் ஹோமம், செய்யவேண்டும்.

வயது 80 ஆரம்பம் முதல் பூர்த்தி வரை செய்யலாம். சதாபிஷேகம் (முத்து) விழா இதுவும் முன்போலவே.

சைவர்களுக்குரிய பூர்வக்கிரியைகளை சிவத்திரு அகோர சிவாசாரியார் இயற்றிய சைவ ஷோடசப்பிரகாசிகை என்னும் நூலில் கூறி, அவற்றின் விதிகளை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

அவை 1. ருதுசங்கமனம், 2 கர்ப்பாதானம், 3 பும்சவனம், 4 சீமந்தம், 5. ஜாதகர்மம் 6 கர்ண வேதனமும், உத்தாபனமும், 7. நாம கரணம், 8. உபநிஷ்க்ரமணம், 9. அன்னப்ராசனம், 10. பிண்டவர்த்தனம், 11. சௌரகர்மம், 12. உபநயனம், 13. காண்டோபகரணம், 14. காண்டமோசனம். 15, சமாவர்த்தனம், 16. விவாஹம் என்பன.

பூப்படைந்த பெண்ணுக்கு மங்கள ஸ்நானம் செய்விப்பது ருதுசங்கமனம். திருமணமான பின்னர் மணமக்கள் மகப் பேற்றின் பொருட்டுக் கூடுவது

கர்ப்பாதானம், கருத்தரித்த பெண்ணுக்கு ஆண்மகப் பேறு அமையும் பொருட்டுச் செய்வது பும்சவனம், கருவில் வளரும் குழந்தை திருத்தமுறுதற் பொருட்டுச் செய்வது சீமந்தம், குழந்தை பிறந்த பிறகு நாபிக்கொடி அறுத்து, ஸ்நானம் செய்வித்தலும், தந்தை குழந்தையைப் பார்த்தலும், ஜாதகர்மம், குழந்தைக்குக் காது குத்தல் கர்ண வேதனமும், குழந்தை பிறந்த ஆசௌசநீக்கத்திற்குச் செய்வது உத்தாபனமும் ஆம். குழந்தைக்குப் பெயர் சூட்டல் நாம காரணம், குழந்தைக்குச் சந்திர சூரியர்களையும், பெரியோர்களையும் தெரிசிப்பது உபநிஷ்க்ரமணம். குழந்தைக்குச் சோறு ஊட்டுதல் அன்னப்ராசனம், குழந்தை நன்றாக வளருவதற்குச் செய்வது பிண்டவர்த்தனம், குழந்தைக்குத் தலை மயிர் களைவது க்ஷௌரகர்மம், குழந்தைக்குத் தீட்க்ஷை செய்வித்தல் உபநயனம், ஞானநூல் கற்கத் தொடங்குவது காண்டோபகரணம், அக்கல்வியை நிறைவு செய்வது காண்டமோசனம், பிரமசரிய விரதத்தை முடிப்பது சமாவர்த்தனம், இல்வாழ்க்கையை தொடங்குவது விவாஹம். இந்தப்பதினாறு கிரியைகளுக்கு மேற்பட்டு ஷஷ்டியப்த பூர்த்தி (அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா) சதாபிஷேகம் (எண்பதாம் ஆண்டு நிறைவு முத்து விழா) ஆகியனவும் உள்ளன.

28 கடவுள் யார்?

கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் என்று பொருள். கடவுள் உண்டென்றும் நம்புவது எப்படி என்றால் ஒருபொருள் உண்டென்று நம்புவதற்குப் பிரத்தியட்சப்பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என மூன்று அளவைகள் உள்ளன.

1. பிரத்தியட்சப் பிரமாணம்=நேரில் காண்பது; அனுமானப் பிரமாணம்=தெரியாத ஒன்றை வேறொன்றன் மூலமாக அறிவது; ஆகமப்பிரமாணம்=ஆகமநூல்களால் அறிவது. (நூலறிவு என்பது சுயானுபவ அறிவாகாது) ஆதலால் அதனை வேறு அறிவுகளினாலே விளங்கவைக்க வேண்டும். நேரில் காணுமறிவு சிறந்ததேயாயினும் அது கடவுள் சம்பந்தமாக எளிதில் பயன்படாது; ஆதலால் அனுமானப் பிரமாணமே, நமது ஐயத்தை நீக்கத்தக்க அளவையாகின்றது. மலை மீது தீ எரிந்து கொண்டிருக்கின்றது. அதனை நேரில் காண மிகவருந்தி உழைத்தால் மாத்திரம் இயலும், வருந்தி உழைக்க இயலாதவர்க்கு நேரில் காணவியலாது. தீயிலிருந்து கிளம்பிவரும் புகையைக் கண்ட எவனும் மலையில் தீ உண்டென்று உறுதியாக நம்புவான். அதுபோலக் கடவுளையும் காணுவது எளிதானதன்று; மிகவருந்தி உழைத்தால் இயலும். வருந்தி உழைக்க இயலாதவன் படைப்புப் பொருள்கள் அனைத்தையும் கண்டும், அவற்றுள் அடங்கிக் கிடக்கும் அற்புதங்களைக் கொண்டும் அவற்றை உண்டாக்கி இயக்க ஒரு தலைவன் உளனென உணர்தல் வேண்டும். அவரைத்தான் கடவுள் என்கிறோம்.

இயற்கை, காரணகாரியங்களோடியைந்தது. கடவுள் காரண காரியங்களுக்கு மேற்பட்டவர். மரத்திலிருந்து வித்தும், வித்திலிருந்து மரமும் உண்டாவது இயற்கை இவற்றுள் முதலில் உண்டானது வித்தா? மரமா? வித்தையோ, மரத்தையோ ஆதியில் உண்டாக்கிய ஆதிமூலப் பொருளொன்று இருந்துதானே தீரவேண்டும்? படைப்புப் பொருள்கள் அனைத்தும் தோன்றுவதற்குக் காரணமாக நின்று அவை இயற்கையாய் நடப்பனபோல் காட்டுவதே ஆண்டவனது அருட்செயலாகும்.

கண்ணால் காணமுடியாத கடவுளை உண்டென்று நம்புவதெப்படி என்று கேட்டால், பூமிக்கு அடியில் தண்ணீர் இருக்கிறது. பாலினுள் நெய் இருக்கிறது. பூமியைப் பார்த்தால் தண்ணீர் இருப்பதும், பாலைப்பார்த்தால் நெய் இருப்பதும், காணமுடிகிறதா? இல்லையே! அதனால் பூமியினுள் தண்ணீர் இருப்பதும், பாலினுள்

நெய் இருப்பதும், இல்லை என்று கூறமுடியுமா? முடியாது. பூமியைத் தோண்டினால் தண்ணீர் கிடைக்கும். அதுபோல நமது கண்ணுக்குக் காணமுடியாததும், பாலில் எங்கும் வியாபித்திருப்பதுமாகிய நெய்யைக் காண பாலைக் காய்ச்சி உறை ஊற்றித் தயிராக்கி; தயிரில் மத்தினை ஊன்றி முறுக்கக் கடைதல் வேண்டும்; கடைந்தால் அதிலிருந்து வெண்ணெயும், நெய்யும் பெறலாம். அதுபோல கடவுள் இவ்வுலகத்தில் காணமுடியாதபடி மறைந்திருக்கின்றார். அவரைக் காண்பதற்கு, பேரன்பாகிய மத்தினை ஊன்றி அறிவாகிய கயிற்றினால் மருக்கக் கடைந்தால் முடியும் இக்கருத்தை அப்பரடிகள்.

விறகில் தீயினன் பாலிற் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

என்னும் தேவாரத்தால் நன்கு விளக்கியுள்ளார்கள்.

காற்றை நம கண்ணால் காண முடிகிறதா? மின்சாரத்தைக் கண்ணால் காணமுடிகிறதா? நமது கண்களால் காணமுடியாததால் அவையில்லை என்று நாம் சொல்லமுடியுமா? அவைசெய்யும் வேலைகளைக் கொண்டு அவை உண்டென்று எப்படி நம்புகிறோமோ, அப்படியே கடவுளின் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்களைக் கண்டு அவன் உண்டென்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

29. சரீர இலக்கணம்

சரீரம் இப்படிப்பட்டது என்று தெரிந்துகொள்ளாவிட்டால் ஆன்மா இப்பேர்ப்பட்டதென்னும் ஆன்மஞானம் உண்டாக மாட்டாது. உடல் வேறு உயிர் வேறு என்பதை முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த சரீரம் இப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்வது அவசியம். ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, **பிராணன்கள்** ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கு, இந்த 24 தத்துவங்கள் கூடினவையே சரீரம். (இந்த சரீரத்தில் வசிக்கும் ஆன்மாவே 25-ஆவது தத்துவம் 26-ஆவது தத்துவமே பரப்பிரம்மம். இந்தப் பரப்பிரம்மத்தில் 25-ஆவது தத்துவமாகிய ஜீவாத்மாவைச் சேர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சேர்ப்பித்தலே மோக்ஷம் என்று சொல்லப்படும்.) இது வேதாந்த தத்துவம்.

ஞானேந்திரியங்கள்

சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, கிராணம் என ஐந்து.

சுரோத்திரம்: செவி இது ஆகாசத்தின் அம்சமானபடியால் அதன் குணமாகிய எல்லாவித சப்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும்.

தொக்கு: தோல் இதுவாயுவின் அம்சமானபடியால் அதன்குணங்களாகிய சீதளம், உஷ்ணம், மிருதுவு, கடினம், என்னும் நான்குவித ஸ்பரிசங்களை உணரும்.

சட்சு: கண்கள் இது அக்கினியின் அம்சமானபடியால் அதன் குணங்களாகிய வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம், மிஸ்ரம் (எல்லாம் கலந்த) வர்ணம். நீளம், குட்டை, தூலம், சன்னம், என்னும் பத்து விதரூபங்களைப் பார்க்கும்.

சிங்குவை: நா இது அப்புவின் அம்சமானபடியால் அதன் குணங்களாகிய உப்பு, புளிப்பு, இனிப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்னும் அறுசுவைகளின் ரசத்தை அறியும்.

கிராணம்: நாசி (மூக்கு) இது பிருதிவியின் அம்சமானபடியால், அதன் குணமாகிய சுகந்தம், துர்க்கந்தங்களை மாத்திரம் பகுத்து அறியும். இவ்வைந்து இந்திரியங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விஷயத்தை அறிவதனால் இவைகள் ஞானேந்திரியங்கள் எனப்படும்.

கன்மேந்திரியங்கள்

வாக்கு: வாய் இது ஆகாசத்தின் அம்சமாயிருப்பதனால் ஆகாசத்தின் குணங்களோடு வசனிக்கும்

பாணி: கைகள் இவை வாயுவின் அம்சமாயிருப்பதனால் கொடுத்தல், வாங்கல், பிடித்தல், விடுத்தல் முதலிய காரியங்களைச் செய்யும்.

பாதம்: கால்கள் இவை அக்கினியின் அம்சமாய் இருப்பதனால் நடப்பது, உட்காருவது, நிற்பது, எழுந்திருப்பது முதலான காரியங்களைத் தாங்கி நடக்கும்.

பாயுரு: குதம் இது பிரிதிவியின் அம்சமாய் இருப்பதனால் மல, ஜலாதிகளை வெளியில் தள்ளச்செய்யும்.

உபஸ்தம்: மர்மஸ்தானம் இது அப்புவின் அம்சமாய் இருப்பதனால் மூத்திரம், சுக்கிலம், சுரோணிதம் விடுவித்துப் போகாநந்தம் அடைவிக்கும்.

இந்த ஐந்தும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்தைச் செய்து கொண்டிருப்பதனால் கர்மேந்திரியங்கள் என்று சொல்லப்படும்

தன் மாத்திரைகள்

சப்தம்: *ஆகாசத்தின் தன்மாத்திரை:* இது செவியின் உட்புறத்திலுள்ள மெல்லிய ஜவ்வின் வழியாய் சப்தத்தைக் கேட்பிக்கும்.

ஸ்பரிசம்: *வாயுவின் தன்மாத்திரை:* இது தேகத்தில் பிராணதி சர்வ வாயுக்களுடன் வியாபித்திருப்பதால் தொட்டுக் காட்டும் குணத்தை சரீரத்தினின்று அறிவிக்கும்.

ரூபம்: *அக்கிநியின் தன்மாத்திரை:* இது நேத்திரங்களில் அக்கினி சம்பந்தப் பட்டிருப்பதால், பத்துவித ரூபங்களையும் நேத்திரத்தினின்று காட்டி வைக்கும்.

ரசம்: *ஜலத்தின் தன்மாத்திரை:* இது நாவில் ஜலசம்பந்தமிருப்பதால், அந்த நாவிலிருந்து அறு சுவையின் பேதங்களை அறிவிக்கும்.

கந்தம்: *பிருதிவி (பூமி)யின் தன்மாத்திரை:* இது நாசியில் (மூக்கில்) பிரிதிவி சம்பந்தமிருப்பதால், அந்த நாசி வழியாய் சுகந்த துர்க்கந்தங்களை அறிவிக்கும்.

மேற்சொல்லிய சர்வ இந்திரியங்களும் ஆன்மாவை அறியமாட்டா. ஆகவே இத்தேகாதி இந்திரியங்கள் யாவும் ஜடம் என்றும் ஆத்மா ஒன்றே ஞான சொருபமாய் இருப்பதால் *சித்து* (அறிவுடைய) என்றும் சொல்லப்பெறும்.

அந்தக் கரணங்கள்

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என 4

மனம்: இம்மனம் வாயுவின் அம்சமானபடியால் இதன் சொருப குணமாகிய நினைப்பு, மறப்பென்னும் சங்கல்ப விகல்பங்களையே செய்து கொண்டு. வாயுவைப் போல் அலைந்து திரியும், இதற்கு அதி தேவதை சந்திரன். இடம் நாபி.

புத்தி: அக்கினியின் அம்சம். இது பதார்த்தின் சுயரூபத்தை நிச்சயிக்கும் வடிவ விருத்தியே புத்தியாம் அன்றியும் இது நல்லது, இது கெட்டது என்பதையும் நிச்சயித்துணரும். இதற்கு அதிதேவதை பிரமன். இடம் முகம்.

சித்தம்: அப்புவின் அம்சம் பொருள்களின் நினைப்பே சித்தமாம். இது இந்திரியங்களுக்குச் சலனத்தையுண்டாக்கி அதன் வழியாய் விஷயங்களைப் பற்றியிழுத்துச் செல்லும். இதற்கு அதிதேவதை விஷ்ணு: இடம் நாபி

அகங்காரம்: பிருதிவியின் அம்சம். மாமிச பிண்டமாகிய இத்தேகத்தையே நான் என்று அபிமானிக்கும் வடிவவிருத்தியே அகங்காரமாம். இது காரியா காரியங்களை யோசிப்பதை விட்டு நான் எனது என அபிமானித்துப் புண்ணிய பாவங்களைச் செய்து கொண்டிருக்கும். இதற்கு அதிதேவதை ருத்திரன்: இருப்பிடம் இருதயம்.

இந்த நான்கும் தேகத்தில் வியாபித்துக் கொண்டு ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களை அவ்வவ் விருத்திகளில் பிரவேசிக்கச் செய்கின்றன.

30. சரீரத்திரயம்

தூலம், சூட்சுமம், காரணம் என்று சரீரம் மூன்றாகும். இது வேதாந்த கருத்து

1. ***தூல சரீரம்:*** தலை, கண்கள் மூக்கு, வாய், கைகள், கால்கள், முதலிய அவயங்களுடன் கூடிய இம்மாம்ச சரீரம், கைகளினால் பிடிப்பதற்குக் கடினமாயும், மிருதுவாயும், பார்வைக்கு நீளமாயும், குட்டையாயும், பெருத்தும், சிறுத்தும், தோன்றுவதால் இதற்கு தூலசரீரம் என்று சொல்லப்படும்.

2. ***சூட்சும சரீரம்:*** ஞானேந்திரியங்கள் 5 கர்மேந்திரியங்கள் 5 பிராணன் 5 மனம், புத்தி 2. ஆகிய இந்தப் பதினேழு அவயங்களுடன் கூடினதே சூட்சும சரீரம். அல்லது லிங்க சரீரம் என்று சொல்லப்படும். இந்த சூட்சும சரீரம் கண்களுக்குத் தோன்றாமலும், கைகளாற் பிடிப்பதற்குச் சாத்தியப் படாமலும் இந்தத் தூல சரீரத்தின் உள்ளிருப்பது.

3. ***காரண சரீரம்:*** இது தூல சூட்சும சரீரங்ககட்கு விதையாயிருந்து, உற்பத்தியொடுக்கத்தை விளைவித்துத் துன்பத்தையே சுகம் எனக் கருதச் செய்கிற அஞ்ஞானமே காரண சரீரம் எனப்படும்.

தூல சரீரம் ஜீரணித்துப் போவதால் சரீரம் என்றும் தகிக்கப் படுவதால் தேகம் என்றும் சொல்லப்படும். இந்த தேகம் அன்னமில்லாவிடில் ஜீரணித்துப்போகும். அன்றியும் வியாதியினாலும், கிழத்தனத்தினாலும் ஜீரணித்துப்போகும். அதாவது பிராணன் போய்விட்ட பின்பு இத்தேகம் அக்கினியினால் சுடப்பட்டு மண்ணாய்ப் போகும்.

சூட்சும சரீரம் விருத்தியாய்க் கொண்டேவரும் எப்படி என்றால் ராகத்துவேஷ காமக்குரோதங்கள் வளர்கின்றமையால், இந்த சூட்சும சரீரம் விருத்தியை அடைந்து வளருகின்றது. அவை குறைந்து விட்டால் பிறவிகள் குறைவுபட்டு நாளுக்கு நாள் சூட்சும சரீரம் ஜீரணித்துப்போகும்.

காரணசரீரம் அஞ்ஞானத்தினால் நான், எனது, என்னும் அபிமானம் நாளுக்கு நாள் ஒடுங்கினால் காரண சரீரம் நாளாவட்டத்தில் ஒடுங்கி ஜீரணித்து விடும். சூட்சும காரண சரீரங்கள் இரண்டும் சற்குரு கடாக்ஷத்தினாலும் ஞானாக்கினியினாலும் ரூபமில்லாமல் நசித்துப் போய்விடும். இவ்விரண்டும் நசித்தவுடன் மோட்சம் சித்திக்கும்.

ஆன்மாவுக்கு ஆதாரம்

இந்தச்சரீரத்தில் ஆன்மாவுக்கு ஆதாரமான கருவிகள்: வலதுசரம், இடதுசரம், நாபி, கண், மூக்கு, செவி, உச்சி இந்த ஏழிடங்களிலும், ஆன்மாவானது ஒன்றை விட்டு ஒன்றில் மாறி மாறி வியாபித்திருப்பதற்குத் தூலமாகிய உடம்பையே மார்க்கமாகக் கொண்டு உலாவி வருகின்றது.

31. கடவுளும் உயிர்களும்

கடவுள் ஒருவரே! உயிர்கள் எண்ணில்லாதன, உயிர்களுக்கு உருவம் கிடையாது. உருவமிலாத உயிர்கள், உருவமுள்ள, உடல்களைச் செயற்கையால் இயக்கும் சக்தியுடையன. உயிர்கள் இயற்கை அறிவுடையன அல்ல. உயிர்களுக்குப் பிறர் அறிவிக்க அறியும் செயற்கை அறிவுடையன. உயிர்கள் இல்லாத உடல்கள் வளர்வதில்லை, செயற்படுவதில்லை, உடல்களுக்குத் தனியே வளர்ச்சியும், செயற்பாடும் கிடையா, உயிர்கள் இல்லாத உடல்கள் அறிவற்ற, நாற்றமுடைய கட்டைகளே.

உருவமில்லாத உயிர்கள், உருவமுள்ள உடல்களில் தங்கியிருக்கின்றன. உயிர்கள் விரும்பியபடி உடல்களில் தங்கியிருக்க முடியவில்லை, உடல்களை உண்டாக்கவும் முடியவில்லை.

பெற்றோரும் உடல்களுக்கு உயிரைக் கொடுக்கவும், பிரிக்கவும் முடியவில்லை, அவர்கள் விரும்பியபடியே உடல்களை உண்டாக்கவும் முடியவில்லை ஆனதால் உடல்களை உண்டாக்கவும், உடல்களில் உயிர்களைப் புகுத்தவும், பிரிக்கவும் செய்கிற ஒருவர் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.


அப்படிச் செய்பவரையே கடவுள் என்று சொல்லுகிறோம். கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. கடவுள் உடல்களையே படைக்கிறார்.

உயிர்களைக் கருணையுள்ள கடவுள் படைத்திருந்தால், அவர் எல்லோரையும் ஒரே தன்மையாகப் படைத்திருக்க வேண்டும்.

உயிர்களின் தன்மைகள் பலதரப்பட்டிருப்பதை அவற்றின் செயற்பாட்டிலிருந்து உணர்கிறோம். கடவுள் உயிர்களின் தன்மைக்குத் தகுந்த உடல்களைக் கொடுக்கின்றார்.


நாம் வாழ்வதற்கு இன்றியமையாத உடல்களையும், உடல் தங்குவதற்கு (நிலம்) உலகத்தையும், சூரியன், சந்திரன் முதலான கிரகங்களையும், நட்சத்திரங்கள், காற்று, மலை, நெருப்பு, ஆகாயம் இவற்றை மனிதன் உண்டாக்கவில்லை. அவைகள் முறைப்படி செயல்படக் காண்கின்றோம். அவற்றை அந்த முறையில் இயக்குவதும் கடவுள்தான். அவருக்கு அளவற்ற ஆற்றலும் அறிவும் இருக்கிறதை இவற்றிலிருந்து உணரலாம்.

நமக்கு உடலைக் கொடுத்து நம்மைத் தாங்கிநிற்க நிலவுலகத்தையும் படைத்து, நம்முடைய அறிவையும் வளர்த்து வருகிற கடவுளுக்கு நாம் நன்றி கூற, அவரை வணங்கிப் பூசித்துப் புகழ்ந்து பாடவேண்டியது அவசியமாகிறது. அவருடைய உயர்வையும், நம்முடைய தாழ்வையும் உணர்ந்து, அவருடைய திருவருளைக் குருமூலம் அடையப் பெற்று நாம் உய்யவேண்டிய நெறியை இவ்வுடல் உள்ள போதே, இன்றே தொடங்கவேண்டும். காலங்கடத்துவது கடனன்று.



தொடுமிடங்களும் அவற்றின் அதிதெய்வங்களும்


எண்.	இடம்	அதிதெய்வம்
1.	முகம் (மோவாய்)	கங்கை
2.	வலமூக்கு	பிராணன்
3.	இடமூக்கு	
4.	வலக்கண்	சூரியன்
5.	இடக்கண்	சந்திரன்
6.	வலக்காது	அஷ்டதிக்பாலகர்
7.	இடக்காது	
8.	நாபி (தொப்புள்)	பிரமன்
9.	நெஞ்சு	உருத்திரன்
10.	வலத்தோள்	அசுவனிதேவர்கள்
11.	இடத்தோள்	
12.	சிரசு (உச்சி)	சதாசிவம்


3
7
8
4
9
10
13
14
11
12
5
6

திருச்சிற்றம்பலம்

விபூதி தரிக்கும் இடம் அளவு மந்திரம் அதிதெய்வங்கள்

எண்.	இடம்	அளவு	மந்திரம்	அதிதெய்வம்
1.	உச்சி	1 அங்குலம்	ஈசானம்	சதாசிவன்
2.	நெற்றி	6 அங்குலம்	தத்புருஷம்	மகேசன்
3.	மார்பு	6 அங்குலம்	அகோரம்	உருத்திரன்
4.	நாபி	1 அங்குலம்	வாமதேவம்	விஷ்ணு
5.	வலதுமுழந்தாள்	1 அங்குலம்	சித்தியோசாதம்	பிரமன்
6.	இடதுமுழந்தாள்	1 அங்குலம்	சித்தியோசாதம்	பிரமன்
7.	வலதுதோள்	6 அங்குலம்	சித்தியோசாதம்	வாமை
8.	இடதுதோள்	6 அங்குலம்	சித்தியோசாசம்	ஜேஷ்டை
9.	வலதுமுழங்கை	1 அங்குலம்	சித்தியோசாதம்	ரவுத்திரி
10.	இடதுமுழங்கை	1 அங்குலம்	சத்தியோசாதம்	காளி
11.	வலதுமணிக்கட்டு	1 அங்குலம்	சத்தியோசாதம்	கலவிகரணி
12.	இடதுமணிக்கட்டு	1 அங்குலம்	சத்தியோசாதம்	பலவிகரணி
13.	வலதுவிலா	1 அங்குலம்	சத்தியோசாதம்	பலப்ரதமணி
14.	இடதுவிலா	1 அங்குலம்	சத்தியோசாதம்	சர்வபூததமணி
15.	முதுகு	1 அங்குலம்	சத்தியோசாதம்	சர்வபூததமணி
16.	கழுத்து	1 அங்குலம்	சத்தியோசாதம்	மனோன்மணி


1. சிகா
2. நமஸ்காரம்
3. கோகோட்டம்
10. தேனு
11. கோமுகம்
12. உட்டணீகம்
19. அதிட்டானம்
20. சின்மயம்
21. யோகம்
22. ஆக்கிரம்
4. அங்குசம்
5. அதேமுகி
6. சோத்திகம்
13. திவ்யம்
14. நிரோத்தானம்
15. மிருகம்
24. கிடா
25. ஆத்திமலிங்கம்
26. ஆக்கிரம்
7. கோவிடாணம்
8. அதிதீட்சணம்
9. அதிதீட்சணம்
16. கும்பகம்
17. ஊர்த்துவமு
18. சான்
27. நாராசம்
28. வராகம்
29. மகாமுத்திரை

II 32. முப்பொருள் உண்மை

பதி, பசு, பாசம், பற்றிய விளக்கம்

பதி: ஆதியும், அந்தமும் இல்லாத அரும் பெரும் ஜோதியாக விளங்குபவர்; சிவபெருமான். சர்வ சிருஷ்டி காலத்திலும், சர்வ சம்ஹார காலத்திலும், எப்போதும் தாம் ஒருவரே நிலையாக இருந்து அருள் பாலித்து வருபவர்.

ஆன்மாக்கள் என்று சொல்லப்பெறும் உயிர்கள், முற்பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப சிவபெருமான் உயிர்களுக்கு உடலையும், அவ்வுடலைக் கொண்டு போகங்களை அநுபவிப்பதற்காக கருவி கரணங்களையும், பரந்த உலகையும், நுகர்பொருள்களையும் கொடுத்ததோடு அல்லாமல், உடனாகவும், வேறாகவும் இருந்து அவ்வப்போது உணர்த்தி வருகிறார். தனக்கு யாதொரு மாற்றமும் இல்லாமல் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழிலையும் செய்பவர்.

பசு: உயிர்கள் இறைவனைப்போல் ஒன்றல்ல, பல என்று கொள்ளவேண்டும். இறைவன் எப்படி அனாதியோ அதைப்போல் உயிர்களும் அனாதி. ஒவ்வொரு பிறவியிலும் அச்சு மாறிப் பிறக்கும். சிற்றிவும், சிறுதொழிலும், உடையவைகள். எதையும் தானே உணரக்கூடிய சக்தி அற்றவைகள். பிறவிதோறும் தாம் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ற உடலை இறைவன் மூலமாகப் பெறுபவைகள். உடலைப் பெற்ற பிறகு (சீவன்) மனிதன் என்ற உயர்திணைப் பெயர் பெறும்.

பாசம்: இதை மலம் என்று சொல்லப்படும். இறைவனும் உயிர்களும் எப்படி அனாதியோ, அதைப்போல பாசங்களும் அனாதி. பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை என்று மூன்று வகைப்படும். பாசங்கள் பொதுவாக உயிர்களின் அறிவை மறைக்கச் செய்பவை.

ஆணவம்: ஆணவம் பிடித்து அலையாதே என்று உலகியல் உலகியல் வழக்கச் சொல்லாக உள்ளதைக் காணலாம். தன்னையன்றி யாராலும் எந்த ஒருகாரியத்தையும் செய்ய முடியாது என்று எண்ணுதலும், அதை மற்றவர்களிடம் சொல்லி பெருமைப்படுதலும், தான் என்ற அகம்பாவம் அடைதலும், அடக்கத்திற்கு நேர்மாறாக இருப்பதுமாகும். செம்பிற்களிம்பு போல் சிவபரம்பொருளையும் மறைத்து, உலகத்தையும் மறைக்கும். களிம்பானது செம்பு உள்ளவரை இருக்கும். அதேபோல் உயிர்உள்ளவரைக்கும் ஆணவமலம் உயிரை விட்டு அகலாதிருக்கும். பிறவிதோறும் நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப கூடவும், குறையவும் செய்யும். இந்த ஆணவ மலத்தைப் அடக்குவதற்கு இறையருள் ஒன்றால்தான் முடியும். நாம் செய்யும் சிவபுண்ணியம் ஒன்றே வழியாகும்.

கன்மம்: இதுவும் அனாதியானவை. நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப மறுபிறவி அமைவதற்கு உதவியாக இருக்கும். இக்கன்மம் மூவகைப்படும். சஞ்சிதம் (பழவினை) பிராரப்தம் (நிகழ்வினை) ஆகாம்யம் (வருவினை) எனப்படும். ஒருவர் ஏதேனும் ஒரு பலனை அடைவதற்கு மனதில் சங்கல்பித்துக் கொள்வதே **ஆகாம்யம்**. இப்படிச் சங்கல்பித்துக் கொண்டவண்ணம் பலனை அனுபவிப்பதே **பிராரப்தம்**. ஆகையால் உலகத்திலுள்ள பொதுமக்கள்

அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கு காரணம் அவரவர்கள் முற்பிறவிகளிற் செய்த கர்மங்களேயாம். அதாவது ஆசைகொண்டு எண்ணிய மனோ சங்கல்ப்பங்களே கர்மமாகிக் காரியத்திற்கு வந்து அவரவர்கள் கோரியதை மறுபிறவியில் அனுபவிக்கிறார்கள்.

சஞ்சிதமென்னும் பழவினை (தொல்வினை) : ஒவ்வொரு பிறவிலும் செய்த பாவங்கள் சேர்த்து வைப்பதற்கு உரிய இடமாக நினைத்துக் கொள்வோம். நல்வினை செய்தால் களஞ்சியத்தில் உள்ள பாவங்கள் குறையும். தீவினை செய்தால் களஞ்சியம் நிரம்பும் என அறியவும்.

பிராரப்தம்மென்னும் நிகழ்வினை: இந்தப் பிறவியில் நாம் செய்யும் வினைகளின் தன்மையைக் குறிக்கும். நாம் பிறவி எடுத்தது தொல்வினையைத் தீர்ப்பதற்காகத்தான் என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்தப் பிறவியில் மனது அறிந்து எவ்வித பழி, பாதகங்களும் செய்யாமல் இருந்தபோதிலும் துன்பத்தை அனுபவிப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் பழி, பாவங்களைச் செய்துகொண்டு இருப்பவர்கள் சுகபோகத்தை அனுபவிப்பதையும் பார்க்கிறோம். சென்ற பிறவியில் செய்த புண்ணிய பாவங்கள்தான் இதற்குக் காரணம் என்று கொள்ளவேண்டும். நாம் தொல்வினையைப் பற்றிக் கவலைப்படாமல்; நிகழ் காலத்தில் நம்மால் முடிந்த அளவு நல்வினைகளைப் புரிந்து, சிவதீட்சைபெற்று இறைவழிபாடு, செய்து எல்லா உயிர்களிடத்துதிலும் அன்பு செலுத்தி வாழ்ந்து வந்தால், நிகழ்வினை நம்மை அறவே பற்றாமலும், மேல்வினையாகி ஆகாம்யம் ஏறி களஞ்சியத்தில் பாவவினை நிரம்பவிடாமல் தடுக்கலாம், நிகழ் காலத்தில் நாம் வாழும் நல்வாழ்க்கைதான் இறைவனுடைய திருவடியை அடைவதற்கு அடிப்படையாகும்.

ஆகாம்யம் என்னும் வருவினை: இப்பிறவியில் நாம் செய்யும் நல்லவினை, தீவினை அதுதான் ஆகாமிய வினைக்கு வித்தாகும். இவை சஞ்சிதமாகிய களஞ்சியத்திற்குச் சென்று, அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தும். நாம் இவைகளை எல்லாம் முறையாகத் தெரிந்து கொண்டு வாழ்ந்தால்தான் நாமும் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, நமது சந்ததிகளையும் உருவாக்கி அதன் மூலம் ஒரு நல்ல சமுதாயம் ஏற்படுவதற்கு வழிவகுக்கலாம்.

மாயை: உலகியல் இன்பங்களை அனுபவிப்பதற்கு ஆணவமலத்தோடு கூடி தொழிற்படுவது. மாயையாவன சுத்தமாயை, அசுத்தமாயை என இருவகைப்படும்.

சுத்தமாயை : ஆணவ, கன்ம மலங்களோடு கலவாது இருப்பது குடிலை எனப் பெயர் பெறுவது. குடிலையிலிருந்து நாதம் (சிவம்) விந்து (சக்தி) தோன்றும். சதாசிவம், மகேசுவரம் சுத்தவித்தை இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும். இவை ஐந்தும் சிவதத்துவம் எனப்படும்.

அசுத்தமாயை: சுத்தமாயைக்குக் கீழாயடங்கி ஆணவ, கன்ம மலங்களோடு கலந்து தொழிற்படுவது. இதிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை அராகம் என்னும் ஐந்தும் தோன்றும். மாயையும், புருடனும் சேர்ந்து ஏழு ஆகும். இந்த ஏழும் வித்யாதத்துவம் எனப்படும். சுத்தா, அசுத்த தத்துவம் எனவும் பெயர்பெறும்.

அசுத்த மாயையின் காரியமாக உள்ள பிரகிருதிமாயை தொழிற்பட்டு ஆன்ம தத்துவங்கள் 24-ம் தோன்றும்.

பஞ்சபூதங்கள்: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.

தன்மாத்திரை ஐந்து: கந்தம், ரசம், ரூபம், ஸ்பரிசம், சப்தம், இவ்வைந்தும் பஞ்சபூதங்களுக்கு முறையே மூலமாகும்.

பொறிகள் ஐந்து: மெய், நாக்கு, கண், மூக்கு, செவி.

தொழிற்கருவிகள் ஐந்து: கால், கை, வாக்கு, கருவிடுவாய், எருவிடுவாய்

அந்தக்கரணங்கள் நான்கு: மனம், புத்தி, சித்தம்; அகங்காரம், இவை. 24-ஆம் ஆன்மதத்துவங்கள் எனப்படும். அசுத்த தத்துவங்கள் எனவும் பெயர்பெறும். ஆன்மாவானது இவற்றைப் பொருந்தி கன்மம் புசிக்குமளவில் அவத்தைகளில் தோயும். காரணா அவத்தைகள் மூன்று வகைப்படும். 1. கேவலா அவத்தை 2. சகலா அவத்தை 3. சுத்த அவத்தை. மேலும் இதில்பல உட்பிரிவுகளும் உண்டு, இதை விரிக்கிற்பெருகும்.

எப்போதும் நெற்றியில் திருநீறு இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் ஒருநாளைக்கு ஒருமுறையாவது அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று, சுவாமி தரிசனம் செய்யப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். தேவாரம், திருவாசகங்களைக் கற்று உணர்ந்து பாடப்பழகுங்கள். இப்படி பக்தி செய்து ஓரளவு பக்குவமடைந்த பிறகு குருவைத் தேடிச் சென்று நம்முடைய வேட்கையை அவர்களிடம் கூறி தீட்சையைப் பெற்று, அவரையே சிவனாகப் பாவித்து, சித்தாந்த உண்மைகளைக் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.

குருநாதருடைய ஆசிஇருந்தால்தான் திருவருளை அடையக் கூடிய பிராரப்தம் நமக்குக் கிடைக்கும். குருவருள் இல்லை எனில் நிச்சயமாகத் திருவருள் கிட்டாது. குருவின் உபதேசங்களைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் கேட்கவேண்டும்.

நமது கடமைகளைச் செய்து முடிப்பதற்கே அறுபது ஆண்டுகள் ஆகிவிடுகிறது. அதன்பிறகு ஆன்மீகத்தில் ஈடுபட்டு இந்த ஆன்மாவை ஈடேற்ற வேண்டுமானால் அது சிரமமான காரியமென்றே தோன்றும். மாணவப் பருவத்திலிருந்தே ஈடுபட்டு வந்தால்தான் ஓரளவேனும் நம்முடைய முயற்சிக்கு வேண்டிய அவகாசம் கிடைக்கும். அறுபது வயதுக்குமேல் நிச்சயமாகவேறு எந்தக்காரியத்திலும் ஈடுபடாமல் (தீவிரமாக) முடிந்த அளவு ஆன்மீகத் துறையில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

நம் எண்ணமெல்லாம் இப்பிறவியிலே. முத்தி என்னும் வீடுபேற்றை அடைய வேண்டும் என்ற குறிக்கோளோடு, முயற்சி செய்ய வேண்டும், முயற்சி செய்ய வேண்டியது நமது கடமை. பலனைக் கொடுப்பது இறைவனுடைய உரிமை என்றும் கொள்ளவேண்டும்.

உலகத்திலுள்ள மனித உயிர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள். (1) சகலர், (2) பிரளயாகலர், (3) விஞ்ஞானகலர் என்பது.

சகலர்: ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலங்களும் உடையவர்கள்.

பிரளயாகலர்: ஆணவம் கன்மம் என இருமலம் உடையவர்கள். முதற்படியாக மாயையை விட்டொழித்து இந்த நிலையை அடைய முயற்சி செய்யவேண்டும்.

விஞ்ஞானகலர்: இவர்கள் ஆணவமலம் ஒன்றே உடையவர்கள். நாம்

அனுபவிக்கும் ஒவ்வொரு செயலும் நம்மால் செய்யப்பட்டவை அல்ல என்றும் இறைவனுடைய கருணையினால், கிடைக்கப் பெற்றோம் என்றும் உணர வேண்டும். நல்வினை செய்தாலும் மீண்டும் பிறப்புண்டு என்பதை அறியவேண்டும் தர்மம் செய்யும் போது இறையருளாலே நாம் செய்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததாகவே எண்ணவேண்டும். இவைகள் எல்லாம் நாம் செய்யவேண்டிய காரியங்களில் ஒருசில படிமுறைகள் ஆகும். ஞானநூல்களைக் கற்று, கேட்டு, சிந்தித்து, தெளிந்து இருப்பதையே கடமையாகக் கொண்டு இறைவனை உணர்வு பூர்வமாக மனதில் அனுதினமும் நினைக்கவேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் *இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க* என்கிறார். தள்ளும் குணமும், கொள்ளும் குணமும், தேகமும் தானும் ஒன்றென மயங்கி வீழ்ந்து, காமாதி தசவர்க்கங்களையே விருத்தி செய்து நசிக்கின்றார்கள்.

காமாதிதசவர்க்கம்: காம, குரோத, லோப, மோக, மத, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை என்பனவேயாம்.

1. ***காமமென்பது:*** தனம், தான்யம், புத்திர, பௌத்திராதிகளின் பேரில் அதிகப் பிரீதி வைத்தல்.

2. ***குரோதமென்பது:*** ஒருவருக்குக் கெடுதல் விளைவிக்கப் பிரயத்தனம் செய்ய இச்சை கொள்ளுதல்.

3. ***லோபமென்பது:*** தனது சொத்திலிருந்து ஞானிகளுக்குங்கூட சிறிதேனும் கொடுக்கக் கூடாது என்று நினைத்தல்.

4. ***மோகமென்பது:*** மனைவி மக்களின் மீது அதிகப் பிரியம் வைத்துத் தனக்கு உண்டாயிருக்கும் பொருள் போதாதென்றும், இன்னும் கொஞ்சம் அதிகமாய் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசையை விருத்தி செய்தல்.

5. ***மதமென்பது:*** திரவியங்கள் அதிகரிப்பதனால் மற்றவர்களை லக்ஷியம் வைக்காமல் பேசுதல்.

6. ***மாச்சர்யமென்பது:*** தன்னைப்போல் பிறரும் சுகமனுபவித்தலைச் சகியாமையை விளைவிக்கும் சித்த விருத்தியை உண்டாக்குதல்.

7. ***டம்பமென்பது:*** பலர் மெச்ச தர்மம், யாகம் முதலானவைகளைச் (பெருமைக்காக) செய்தல்.

8. ***தர்ப்பமென்பது:*** புத்திரமித்திர களத்திர தன தான்யாதி சம்பத்துக்களில் தனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லை என்று கர்வப்படுதல்.

9. ***ஈர்ஷை என்பது:*** தனக்கு நேர்ந்த துக்கம் பிறருக்கும் நேரிடவேண்டு மென்று எண்ணுதல்.

10. ***அசூயைஎன்பது:*** கெடுதி செய்தவனுக்குக் கெடுதி விளைவிக்க வேண்டுமென்று எண்ணுதல். இவைகள் யாவும் தள்ளத்தக்க குணங்களேயாம்.

இனிகொள்ளத்தக்க குணங்களைச் சொல்லுகின்றோம். அவைகள் இச்சை, *பக்தி, சிரத்தை* என்பன.

1. ***இச்சை என்பது:*** அன்ன பானாதிகளை உட்கொள்ளவும், மல மூத்திரங்களை வெளித்தள்ளவும் விரும்புதல். இவைகளைச் செய்யாவிடில் தேகஉபாதை உண்டாகும். இதைச் செய்வதினால் பிறருக்குக் கெடுதியாதொன்றுமில்லை.

2. *பக்தி என்பது:* குருவினிடத்திலும், சிவபெருமானிடத்திலும் மாறாத நேசம் வைத்து இடைவிடாப் பேரன்புடன் துதித்தல்.

3. *சிரத்தை என்பது:* குருவாக்கியத்திலும், தோத்திர சாத்திரங்களிலும் முழுநம்பிக்கை வைத்தல்.

தள்ளுங் குணங்களாகிய காமக்குரோதாதி பத்துக்குணங்களும் (ஜனன மரண) பிறப்பிறப்பென்னும் சமுத்திரத்தில் அழுந்தச் செய்யும். ஆதலால் அக்குணங்களை அறவே நீக்கி விட்டுப் பின்கூறிய மூன்று குணங்களையும் கடைப்பிடித்து ஒழுகினோரே முத்தி என்னும் வீடு பேற்றை அடைவார்கள் என்பது கற்றுணர்ந்த பெரியோர்கள் கருத்து.

காமாதசாவர்க்கங்களை நீக்கிவிட்டாலும், தமது மனைவி, மக்கள், மீதும் பொருள்களின் மீதும் ஆசைஇருக்கத்தான் செய்யும். இதையும் நீக்கிவிட்டால் ஒன்றுமில்லாத ஞான சொருபமாகிய ஆகாசவடிவமே நிற்கும். அதுதான் சிதம்பரரகசியம். அந்த ஆகாச வடிவந்தான் நீ அதுதான் நான் அதுதான் ஆன்மா. ஜீவாத்மாவை பரமாத்மாவில் லயப்படுத்துவதே மோக்ஷம். இப்படிப்பட்ட மோக்ஷவீட்டை அடைய வொட்டாமற் செய்வது கர்ம சொருபமேயாம். அதிலும் பட்டுத் தவித்து வெறுத்து விடுவதே விவேகம்.

33. பதியியல்

அனைத்து உலகங்களையும் மாயையிலிருந்து தோற்றுவித்தவர் சிவபெருமான் ஒருவரேஆவார். அவ்வுலகங்களில் அறிவுடையபொருள் (சித்து) அறிவில்லாதபொருள் (அசித்து) என இருவகையும் உள்ளன. எல்லா உலகங்களும் தோன்றி நின்று அழியும் காரியமாய் உள்ளது. ஆதலினால் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் செய்வதற்கு கடவுள் ஒருவர் இருக்கிறார், அவரைத்தான் **பதி** என்கிறோம் பதி என்றால் முழு முதற் கடவுள் என்பது பொருள். இம் முதல்வனைச் சிவன் என்று சைவ சமயம் கூறுகிறது. மற்றைத் தெய்வங்களைத் தேவர்கள் என்று கூறுவர்.

சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலும் செய்வது தமக்காக அல்ல. ஆன்மாக்கள் என்று சொல்லப்பெறும் உயிர்களுக்காக செய்கிறார்.

படைத்தல்: படைத்தல் என்பது ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களை முதற்கரணத்தில் தோற்றுவித்தல், இவற்றுள் தனு என்பது (உடம்பு) புல், பூண்டு முதல் தேவர் ஈறாக உள்ள உயிர்கள் எடுக்கும் சரீரங்கள். கரணம் என்பது மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும்.

புறக்காரணங்கள்: புவன போகங்கள் புவனம் என்பது உடம்புக்கு ஆதாரமாகிய உலகம். போகம் என்பது ஆன்மாக்கள் செய்யும் நல்வினை, தீவினை என்னும் இருவினைகளுக்கு ஈடாக அனுபவிக்கும் இன்ப துன்பங்கள்.

காத்தல்: காத்தல் என்பது தோற்றுவிக்கப் பெற்ற தனு, கரண, புவன, போகங்களை முதற் கரணத்தில் நிறுத்துதல்,

அழித்தல். அழித்தல் என்பது தனு, கரண, புவன போகங்களை முதற்கரணத்தில் ஒடுக்குதல்

மறைத்தல்: மறைத்தல் என்பது ஆன்மாக்களை (உயிர்) இருவினைப் பயன்களில் ஈடுபடச் செய்தல்.

அருளல்: அருளல் என்பது ஆன்மாக் (உயிர்)களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்கிப் பிறவிப் பிணியின்றி வீடு பேறு அளித்தல்.

ஒருகாரியத்திற்கு முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்றுவகைக் காரணங்கள் உள்ளன. உதாரணம் மண்குடமாகிய காரியத்திற்கு, முதற் காரணம் மண், துணைக் காரணம் திரிகை, நிமித்த காரணம் குயவன், வேறு முதற்காரணம் மூலப்பொருள், துணைக் காரணம் வடிவமைக்கும் இயந்திரங்கள், நிமித்த காரணம் தொழிலாளர்கள், இம் மூன்றும் சேர்ந்து உருவாக்கியது பொருள்களாகும், இப்படி ஒருகாரியத்திற்குப் பலகாரணங்கள்.

தனு, கரண, புவன, போகம் எனப்படும் உலகமாகிய காரியத்திற்கு முதற்காரணம் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி என மூன்றும், துணைக்காரணம் சிவசக்தி, நிமித்தகாரணம் சிவபெருமான். சிவசக்தியாவது- அக்கினியோடு சூடுபோலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

பதி எனுஞ் சிவபெருமானுக்கு உரிய வடிவம்: அருவம், அருவுருவம், உருவம் என மூன்றுவகைத் திருமேனியாம். இதில் அருவத் திருமேனியுடைய பொழுது சிவன் எனவும், அருவுருவத் திருமேனியுடைய பொழுது (சிவலிங்கம்) சதாசிவன் எனவும், உருவத் திருமேனியுடைய பொழுது மகேசுவரன் எனவும் பெயர் பெறுவர்.

சிவபெருமானுடைய உருவம், ஆன்மாக்களுடைய உருவம் போன்றதல்ல. இருவினைக்கீடாக எலும்பு, தோல் முதலிய சப்ததாதுக்களால் உண்டான உருவம். சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்கள் செய்யும் தியானம், பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசக்தியாகிய திருவருட் குணங்களுள் இன்னது இன்னஇன்ன அவயம் என்று பாவிக்கப்படும் உருவமாகும்.

சிவபெருமான் சுத்த மாயையில் ஐந்தொழில் தாமே செய்வார். அசுத்த மாயையில் ஐந்தொழிலும் அனந்தேசுவரரை அதிட்டித்து நின்று செய்வார். பிரகிருதியின் கீழ் உள்ள ஐந்தொழிலும் அவ்வனந்தேசுவரர் வாயிலாக ஸ்ரீகண்ட ருத்திரரை அதிட்டித்து நின்று செய்வார். ஸ்ரீ கண்டருத்திரர் பிரம்மாவை அதிட்டித்து நின்று படைத்தலும், விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தலும், காலருத்திரை அதிட்டித்து நின்று அழித்தலும் செய்வார். அதிட்டித்தல் என்றால் நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.

ஸ்ரீகண்டருத்திரர் சைவ ஆகமங்களை அறிவிக்கும் ஆசிரியர் மும்மூர்த்திகளுக்கும், தேவர்களுக்கும், இருஷிகளுக்கும், அறுபத்துமூவர், தொகையடியார், முதலாயினோர்களுக்கும், தண்டித்தல், ஆதரித்தல்களைச் செய்யும் கர்த்தா. இந்து மதத்தவர் சைவத்திற் சார்ந்து சைவசமய தீட்சை பெற்றவர்கள் வழிபடும் மூர்த்தி.

விசேடத்தீட்சை பெற்றவர்கள்: தங்களாலே பூசித்து வழிபடும் சதாசிவ வடிவில் பீடமும் இலிங்கமுமாகிய கன்மசாதாக்கிய வடிவமாம். பீடம் (ஆவுடையார்)=சிவசக்தி. இலிங்கம்=சிவம் இலிங்கம் என்றால் சித்தரித்தல் என்று பொருள். படைத்தல், காத்தல், முதலியவைகளினால் உலகத்தைச் சித்தரிப்பது.

பிரம்மா விஷ்ணு முதலியோரின் சக்திகளின் பெயர்களாவன பிரம்மாவினுடைய சக்தி சரசுவதி; விஷ்ணுவினுடைய சக்தி இலக்குமி; உருத்திரனுடைய சக்தி உமை; மகேசுவரனுடைய சக்தி மகேசுவரி; சதாசிவனுடைய சக்தி மனோன்மணி.

மகேசுவரவடிவங்களாவன(உருவத்திருமேனிகள்):சந்திரசேகரர், உமாமகேசர், ரிஷபாரூடர், நடராஜர், கல்யாணசுந்தரர், சோமசுந்தரர், அர்த்த நாரீஸ்வரர், தெட்சிணாமூர்த்தி, வீரபத்திரர், நீலகண்டர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மதங்காரி, ஹரியத்தர். கிராதர், கங்காளர், ஏகபாதர், சுகாசீனர், சக்கரப்பிரதர், கஜமுகானுக்கிரகர், சண்டேசானுக்கிரகர், லிங்கோத்பவர், என்னும் இருபத்தைந்து வடிவங்களாகும்.

34. பசுவியல்

உயிர்களைப் பசு என்றும் ஆன்மா என்றும் சொல்கிறோம், இவை நித்தியமாய், வியாபகமாய் (சேதனமாய்) அறிவுடையதாய், பாசத்தால் பந்தம் செய்யப்பட்டதாய், ஆணவ மலத்தின் காரணமாக அஞ்ஞானத்தில் அமிழ்ந் திருக்கும். உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாய், சரீரம்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப் பயன்களை அநுபவிப்பதாய்த், தமக்கு ஒருதலைவனை உடையதாய் இருக்கும். இத்தகைய ஆன்மாக்கள் எடுக்கும் சரீரங்கள் மூவகையாம்; அவை தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் என்பன.

தூல சரிரமாவது : சாதி, குலம், பிறப்பு முதலியவைகளினால் அபிமானம் செய்வதற்கு இடமாய்ப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதமும் கூடி உருத்தரித்த உருவவுடம்பு.

சூக்கும சரீரமாவது : சப்த, ஸ்பரிச, ரச, கந்தமென்னும் காரண தன் மாத்திரை ஐந்தும்; மனம், புத்தி, அகங்காரம், என்னும் மூன்றும், ஆக, எட்டாலும் ஆக்கப்பட்டு, ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய் அவ்வான்மாக்கள் போகம் அனுபவித்தலுக்குக் கருவியாய் ஆயுள் முடிவின் முன் உடம்பை விட்டு விட்டு மற்றொரு உடம்பு எடுத்தற்கு ஏதுவாயிருக்கும் அருவவுடம்பு.

காரண சரீரமாவது : இது தூல, சூட்சும சரீரங்கட்கு விதையாயிருந்து, துன்பத்தையே சுகம்எனக் கருதச்செய்கின்ற அஞ்ஞானமே காரண சரீரம் எனப்படும். ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், 84,00,000 யோனி பேதங்களையும் உடையனவாய்ப் பிறந்திருந்து உழலுகின்றன.

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம்

அண்டசம் = முட்டையிற் தோன்றுவன

சுவேதசம் = வேர்வையில் தோன்றுவன

உற்பிசம் = வித்து, வேர், கிழங்கு, கொடி முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன.

சராயுசம் = கருப்பையில் தோன்றுவன.

எழுவகைப் பிறப்புக்களாவன : தேவர்கள், மனிதர்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என்பவைகளாம், இதில் முதல் ஆறும் இயங்கியற் பொருள்கள், இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற் பொருள்களின் பெயர் சங்கமம், அல்லது சரம் எனப்படும் நிலையியற் பொருள்களின் பெயர் தாவரம் அல்லது அசரம் எனப்படும்.

புல், மரம் முதலான தாவரங்கள் பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள், சிப்பி சங்கு, முதலியவை பரிசத்தையும் இரசத்தையும் அறியும், ஈரறிவுயிர்கள், கரையான் எறும்பு முதலியவை பரிசம், இரசம், கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள், தும்பி, வண்டு, முதலியவை பரிசம், இரசம் கந்தம் உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள், விலங்கும் பறவையும் பரிசம், இரசம், கந்தம், உருவம், ஆகியவற்றுடன் சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள், மனிதர்களும், தேவர்களும் அவ்வைந்து அறிவோடு சித்தத்தால் அறியும் அறிவுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள் தாம் பூமியிலே செய்த நல்வினை, தீவினை என்னும் இருவினைகளுள், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும் அனுபவிக்கும். அப்படி அனுபவித்து தொலையாமல் எஞ்சிநின்ற இருவினைகளினாலே திரும்பவும் பூமியிலே வந்து பிறந்து அவைகளின் பயன்களாகிய இன்பதுன்பத்தை அனுபவிக்கும்.

இப்பூமியிலே பிறந்து நல்வினைகளைச் செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்திலே போய் அந்த நல்வினைப் பயனாகிய இன்பத்தை அனுபவிக்கும்.

தீவினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யதானா சரீரத்தை எடுத்துக்கொண்டு நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும்.

இப்படியன்றி ஒரு தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலேதானே ஒரு யோனி வாய்ப்பட்டு மற்றொரு சரீரத்தை எடுப்பதும் உண்டு.

சுவர்க்கத்திலே இன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பவும் பூமியிலே வந்து மனிதர்களாகப் பிறக்கும்.

நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியிலே வந்து தாவரங்களாயும், நீர்வாழ்வனவாயும், ஊர்வனவாயும், பறவைகளாயும், விலங்குகளாயும் வரிசையாகப் பிறந்து பின்பு முன்செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும். இதை ஆராயும்போது மனிதப்பிறவி எடுப்பது கடலை கையினாலே நீந்திக் கரையேறுதல் போலும்,என்பது புலணாகும். இத்தன்மையுடைய மனிதப்பிறப்பை எடுப்பினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது

சிறப்பு, அதனிலும் இந்து மதத்தில் பிறப்பது சிறப்பு, அதனினும் சிறப்பு சைவ சமயத்தைச் சார்ந்து மதுபானமும், மாமிசமும் புசியாது இருப்பது. சைவ ஒழுக்கங்களைப் பின்பற்றி ஒழுகுவது, அதைக்காட்டிலும் சிறப்பு. இத்தனையும் வாய்க்கப்பெற்று சாதி ஆசாரஅனுட்டானங்களை விட்டவர் நெல்லுடன் பிறந்த பதரெனப்படுவர்.

மனிதப்பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு முத்தி சித்திக்க வேண்டுமாயின், அவரவர்கள் தங்கள் தங்கள் பக்குவத்திற்கேற்ப வரிசைக்கிரமமாகப் பிறவிகள் தோறும் புறச்சமயங்களிலே பிறவிகளைப் பெற்று அவ்வச்சமயத்திற்குரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்தவர்களுக்குச் சிவபெருமான் அவர்களால் உத்தேசித்து வழிபடும் தெய்வத்தை தமது சக்தியினால் அதிட்டித்து நின்று அந்த வழிபாட்டுக்குத் தகுந்த பலனைக் கொடுப்பார். பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே சைவசமயத்தை அடைவார்கள். சைவ சமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை, கிரியை, யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானாசிரியரை அதிட்டித்து வந்து உபதேசித்து சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்தருளுவார்.

அரிது அரிது மானிடராதல் அரிது அதனினும் அரிது சைவ சமயமாகப் பிறப்பது அதனினும் அரிது அப்படிப் பிறந்தும் குலவழக்கப்படி சமயம், விசேடம், நிருவாணம், ஆகிய தீட்சைகளையும் பிராணாயாம அப்பியாசமும், ஆசாரிய அபிசேகமும் பெறுவதும் அதனை ஆயுட்காலம் முழுவதும் கடைபிடிப்பதும் முந்திய பல பிறப்புகளில் செய்த புண்ணிய மிகுதியால் இப்பிறப்பில் வந்து வாய்த்திருக்கிறது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ ? யாரறிவார்? அதலால் இந்தச் சரீரம் உள்ளபொழுதே இதனது நிலையாமையை அறிந்து உயிருக்குயிராகிய சிவபெருமானை மனம், வாக்கு,.காயங்களினால் சிவபூஜை (வழிபாடு) செய்து முத்தியின்பம் பெற்று உய்வதற்கு இதைப்படித்தவுடனே அதற்கான தீட்சைகளைப் பெற முயற்சி எடுக்கவேண்டும்.

35. பாசவியல்

பாசமென்பது ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பவைகளாம், பாசத்தைத் தளை என்றும் மலம் என்றும் சொல்வதுண்டு. (பந்தித்தல்-கட்டுதல்) இது ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும், இம்மூன்றோடு மாயேயம், திரோதாயி, என இரண்டையும் சேர்த்துப் பாசம் ஐந்து என்று கொள்வதுண்டு.

ஆணவமாவது : செம்பிற் களிம்பு போல், ஆன்மாக்களின் அனாதியே உடன் கலந்து நிற்பதாய் ஒன்றேயாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாகி அவைகளுடைய அறிவிலும் தொழிலிலும் மறைந்து நின்று தங்கள் தங்கள் கால எல்லையிலே நிற்கும் அனேக சக்திகளையுடையதாய்ச் சடமாய் நிற்பது.

கன்மமாவது: ஆன்மாக்கள் மனம், வாக்கு, காயம், என்னும் மூன்றினாலே செய்த புண்ணிய, பாவங்கள், இவை எடுத்த பிறப்பிலே செய்யப்பட்ட பொழுது ஆகாம்யம் எனப் பெயர் பெறும், பிறவிகள் தோறும் இப்படி ஈடுபட்டுப் பக்குவப்படும் வரையும், புத்தித்தத்துவம் பற்றுக்கோடாக

மாயையிலே கிடக்கும்பொழுது சஞ்சிதம் எனப் பெயர் பெறும்; இச்சஞ்சிதம் கன்மங்களுடனே பக்குவப்பட்டவை. மேல்எடுக்கும் உடம்பையும் அது கொண்டு அனுபவிக்கப்படும், இன்பதுன்பங்களையும் தந்து பயன்படும் பொழுது பிராப்தம் எனப் பெயர்பெறும்.

மாயையாவது : சுத்தமாயை, அசுத்தமாயை பிரகிருதிமாயை என மூன்று வகைப்படும். இவற்றுள் சுத்தமாயை, அசுத்தமாயை, இரண்டும் நித்தியம், பிரகிருதி மாயை அசுத்த மாயையினின்றுந் தோன்றியது. ஆதலால் அநித்தியம்.

சுத்தமாயையாவது: நித்தியமாய், வியாபகமாய் அருவமாய்ச் சடமாய் சொல்வடிவமும், சுத்தமாகிய பொருள் வடிவந்தோன்றுவதற்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்யத் தக்கதாய் இருப்பது.

அசுத்தமாயையாவது: நித்தியமாய், வியாபகமாய் அருவமாய்ச் சடமாய்ச் பிரளய காலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய் ஆன்மாக்களுக்கு சுத்தாசுத்தமும், அசுத்தமுமாகிய தனு, கரண, புவன, போகங்கள் தோன்றுவதற்கு முதற் காரணமாய் மயக்கஞ் செய்வதாய் இருப்பது.

மாயேயமாவன: மாயையால் ஆகிய தத்துவங்களும், அவைகளால் ஆகிய தனு, கரண, புவன போகங்களுமாம்.

திரோதாயியாவன: ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும், தொழிற்படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசக்தி இது. மலத்தைச் செலுத்துதலினாலே மலம் என உச்சரிக்கப்பட்டது.

மாயா காரியமாகிய தனு, கரண, புவன போகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்கு கொடுப்பது எதற்காகவென்றால், ஆன்மாக்களைப் பந்தித்து ஆணவமலமும் கன்ம மலமுமாகிய நோய்களைத் தீர்த்து சிவானந்தப் பேற்றைக் கொடுப்பதற்காகவேதான். (மலம் = அழுக்கு)

தனு, கரண முதலிய அழுக்கையும், ஆணவ மலமாகிய அழுக்கையும், மாயா மலமாகிய அழுக்கினாலே எப்படிப் போக்கமுடியும் என்று சந்தேகம் வரக்கூடும். அதற்கு வண்ணான் அழுக்கான கோடி வேட்டியை சாணியும் உவர் மண்ணும் கலந்த நீரில் நனைத்து மேலும் அழுக்காக்கி முன் அழுக்கையும் பின் அழுக்கையும் போக்கி அவ்வேட்டியை மிக வெண்மையுடையதாகச் செய்வான். அது போலவே சிவபெருமான் ஆன்மாவிடத்தே மாயா மலத்தைக் கூட்டி அநாதி பந்தமாகிய ஆணவ மலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தையும் போக்கி அவ்வான்மாவை சிவமாம் தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வார்.

சிவபெருமானிடத்து அன்பு விளைதல்: பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், தம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும், பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், எல்லாம் வல்ல சிவபெருமான், மிகச் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஓயாது என்றும் உபகரிக்கும் பெருங்கருணையை இவ்வியல்பின் பலகோடியில் ஒரு கூறாயினும் உடையவர் பிறர் ஒருவரும், நமக்கில்லாமையையும், இடையறாது சிந்திக்கச் சிந்திக்க நமக்கு அச்சிவபெருமானிடத்து அன்பு விளைகிறது.

36. வேதாகமவியல்

சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்தவை வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். வேதம் பொதுநூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் போற்றப்பெறும்.

வேதம்: இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், என நான்கு வகைப்படும், வேதத்தின் பெயர் சுருதி, நிகமம் என்பதாகும். வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது. நாதன் நாமம் நமச்சிவாயவே என்கிறது, தமிழ் வேதம்.

சதாசிவமூர்த்தியினுடைய தத்புருஷ முகத்தில் நின்று இருக்கு வேதமும், அகோரமுகத்தில் நின்று யஜுர் வேதமும், வாமதேவமுகத்தில் நின்று சாமவேதமும், சத்தியோஜாதமுகத்தில் நின்று அதர்வணவேதமும் தோன்றின.

வேதத்திற்கு பிரம்ம காண்டமும் பிரம்ம காண்டத்திற்கு நிமித்தமாகிய கரும காண்டமும் என ஒவ்வொரு வேதத்திற்கும் இரண்டு காண்டங்கள் உள்ளன. பிரம்ம காண்டத்திற்குப் பெயர் பிரபல சுருதி, வேதாந்தம், வேதசிரசு, உபநிடதம் என்பதாகும், கருமகாண்டத்திற்கு அற்பசுருதி என்று பெயர்.

வேதத்திற்கு அங்கமாகிய நூல்கள் சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம், என ஆறுமாம்.

சிக்ஷை: என்பது சுர வேறுபாட்டை உச்சரிக்கும் முறைமையை அறிவிப்பது.

கற்பம்: என்பது வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களை அனுட்டிக்கும் முறைமையை அறிவிப்பது.

வியாகரணம்: என்பது வேதங்களில் எழுத்து, சொல், பொருள், இலக்கணங்களை அறிவிப்பது.

நிருத்தம்: என்பது வேதங்களின் சொற்களின் பொருள்களை அறிவிப்பது.

சந்தோவிசிதி: என்பது வேதமந்திரங்களின் காயத்திரி, முதலிய சந்தங்களின் பெயரையும் அவ்வவைகளுக்கு எழுத்து இவ்வளவென்பதையும் அறிவிப்பது.

சோதிடம்: என்பது வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதற்கு உரிய கால விஷேடங்களை அறிவிப்பது.

வேதத்திற்கு உபாங்கமாகிய நூல்களாவன புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் நான்குமாம்.

உபவேதங்களாவன: ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம், அருத்த வேதம், என்னும் நான்குமாம்.

ஆயுர்வேதம் : என்பது எல்லாவற்றையும் அனுட்டித்தற்குச் சாதனமாகிய சரீரத்தை நோயின்றி நிலைபெறச் செய்தற்கு வேண்டியவற்றை அறிவிப்பது.

தனுர்வேதம்: என்பது பகைவர்களாலே தீங்குவராமல் உலகத்தைக் காத்தற்குத் தேவைப்படும் படைக்கலப் பயிற்சியை அறிவிப்பது.

காந்தருவவேதம்: என்பது கடவுளுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் இசை முதலியவைகளை அறிவிப்பது.

அருத்தவேதம்: என்பது இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களைச் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பது.

வேதத்தை ஓதுவதற்கு தகுதியுடையோர்: உபநயனம் பெற்றவராகிய பிராமணர், அரசகுலத்தவர். வணிககுலத்தவர் என்னும் முதன் மூன்று வருணத்தவர்கள். பிற குலத்தவர்களும் நான்கு குலத்துப் பெண்களும் இதிகாசம், புராணங்கள், ஓதலாம், வேதத்தின் பொருளைக் கேட்டற்கு மட்டுமே தகுதியுடையோர்.

ஆகமம்

ஆகமம் என்றால் ஆன்மாக்களின் பாசங்களை நீங்கஞ்செய்து முத்திப் பேற்றை அருளுவது என்னும் பொருளை உடையது. ஆகமத்தின் பெயர்களாவன தந்திரம். மந்திரம் சித்தாந்தம் என்பதாகும்.

ஆகமங்களாவன: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூட்சுமம், சகச்சிரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்சுவாசம், ஸ்வயம்புவம், ஆக்கினேயம், (அநலாய) வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகபிம்பம், புரோர்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பரமேச்சரம், கிரணம், வாதுளம் என 28 ஆகமங்களும், இவைகள் சதாசிவமூர்த்தியினுடைய உச்சி முகமாகிய ஈசான முகத்தில் நின்றுந்தோன்றின. இவ்வாகமங்கள் ஒவ்வொன்றும், ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்கு வகைப்படும். சிவாகமங்களுக்கு மிருகேந்திரம் (நரசிங்கம்) முதல் விஸ்வான் வரை உபாகமங்கள் 207-ஆம்.

சிவாகமங்களுக்கு சார்பு நூல்கள்: தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரஹம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோட்ச காரிகை, நாத காரிகை, பரமோக்ஷநிராசரிகை, இரத்தினத்திரையம் என்னும் அட்டப்பிரகரண முதலியவை.

சிவாகமத்தை ஓதுவதற்கு விஷேட தீட்சை பெற்ற நான்கு வருணத்தாருக்கும் ஞான காண்டம் ஓதுவதற்கு நிர்வாண தீட்சை பெற்ற நான்கு வருணத்தாருக்கும் அதிகாரமுண்டு.

பிராமணர் முதலிய மூன்று வருணத்தார்களுக்கும், கிரிகைகளின் விவரம்:- உபநயனம் மாத்திரம் பெற்றவர்களுக்கு வைதீக கிரியைகள் மாத்திரம் செய்யத்தக்கது. உபநயனத்தோடு சிவதீட்சையும் பெற்றவர்களான, தீட்சிதர், சிவபிராமணர் என்னும் குருக்கள், சைவர்கள் இவர்களுக்கு வைதீகக் கிரியைகளும் ஆகமக் கிரியைகளும் கலந்து செய்யலாம். இவர்களுக்கு ஆகமக் கிரியைகள் செய்யாவிட்டால் அவர்கள் பெற்ற சிவதீட்சையினால் ஒரு சிறிதும் பலனில்லை.

சிவதீட்சை பெற்ற நான்காம் வருணத்தவர்க்கும், அனுலோமருக்கும், ஆகமக்கிரியைகள் செய்யத்தக்கன. சிவதீட்சை பெறாத மற்றவர்களுக்கு பிரணவமின்றி நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக் கொண்டு கிரியைகள் செய்யலாம்.

37. தோத்திர சாத்திரவியல்

சைவசமயம், சிவபெருமான் திருவருளைப் பெறுவதற்கு கூறும் நெறிகள் இரண்டு. ஒன்று அன்பு நெறி, மற்றொன்று அறிவு நெறி. அன்பு நெறியை தோத்திர நெறி என்றும், இலக்கியநெறி என்றும் சொல்லுவோம்; அறிவுநெறியைச் சாத்திர நெறியென்றும் இலக்கண நெறியென்றும் சொல்வோம்.

தோத்திர நெறியைக் கூறியருளிய சமயாசாரியர்கள் ஒவ்வொரு இடத்திலும் வாழும் மக்களை நாடிச் சென்று பதியுண்மையை அறிவுறுத்தி நல்வழிப்படுத்தினார்கள். சாத்திர நெறியைக் கூறியருளிய சந்தானாசாரியர்கள் இருந்த இடத்திலிருந்தே, பக்குவிகளாய்த் தம்மை நாடி வந்தோர்க்கு உண்மைப்பொருள்களை உபதேசம் செய்தருளினார்கள்.

தோத்திரங்களாவன திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் ,12,3 திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம் 4,5,6 திருமுறைகளாகவும்; சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் 7ஆம் திருமுறையாகவும்; மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் 8ஆம் திருமுறையாகவும்; இன்னிசை அருளாளர்கள் 9பேர் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன 9ஆம் திருமுறையாகவும்; திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் ஞானநூல் 10ஆம் திருமுறையாகவும் இந்து சாத்திர வடிவமாய்ச் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதங்களையும் உணர்த்துகிறது.

காரைக்கால் அம்மையார் முதலிய அருட்செல்வர்களால் அருளப்பெற்றது. சிவபெருமான், மூத்தபிள்ளயைார், இளையபிள்ளையார், ஆசாரியசுவாமிகள் முதலிய 12பேர் அருளிய தோத்திரங்களும் அமைந்துள்ளது. 11ம் திருமுறை. அன்புநெறி, அறிவுநெறி, கடவுள்நெறி எனமூன்றையும் அறிவதற்கு இன்றியமையாததாயும், புராணவடிவாய் சேக்கிழார் சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்றுள்ள பெரியபுராணம் 12ஆம் திருமுறையாகும். இங்ஙனம் திருமுறை 12ஆகும். இவற்றை அருளிய ஆசிரியர்கள் 27-பேர்கள். 12 ராசிகளும் 27 நட்சத்திரங்களும் போல அமைந்திருக்கிறார்கள்.

திருமுறைகள் மெய்யன்போடு ஓதுவோர்களுக்கு நவக்கிரகங்கள் பேய், பூதம், சிறுதெய்வங்கள், வியாதி, விஷம், முதலியவற்றால் வரும் தீமைகள் நீங்கவும் மற்றும் அவர்கள் எண்ணிய பயன்களெல்லாம் வாய்க்கவும் கைகண்ட மந்திரங்களாம்.

சாத்திரம்

சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிதுவிளக்கும் தமிழில் சித்தாந்த சாத்திரங்கள் 14ஆகும். இவற்றைப் போதித்தசந்தானாசாரியர்கள் மெய்கண்டசிவம், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தசிவம், உமாபதிசிவம் என நால்வர். திருவுந்தியாரை அருளிச் செய்தவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார். திருக்களிற்றுப்படியாரை அருளிச் செய்தவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், இவர் திருவுந்தியாரை அருளிச்செய்த உய்யவந்த தேவநாயனாருடைய சீடர். சிவஞானபோதம் அருளிச்செய்ததிருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர். இவருக்கு சுவேதவனப்பெருமாள் என்பதுபிள்ளைத்திருநாமம்.

சிவஞானசித்தியார், இருபாஇருபது இரண்டையும் அருளிச் செய்தவர் சகலாகம பண்டிதர் என்னும் காரணப்பெயர் பெற்ற திருத்துறையூர் அருணநந்தி சிவாச்சாரியார். இவர் மெய்கண்ட தேவருடைய 49 சீடர்களிலே தலைமைச் சீடர். உண்மை விளக்கம் அருளிச் செய்தவர் திருவதிகை மனவாசகம் கடந்தார். இவர் மெய்கண்ட தேவருடைய சீடர்களுள் ஒருவர்.

மற்றுமுள்ள சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டையும் அருளிச் செய்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இவர் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர். இவர் அருணந்தி சிவாசாரியாருடைய சீடராகிய திருப்பெண்ணாகடம் மறைஞான சம்பந்த சிவாசாரியாருடைய சீடர். மெய்கண்ட தேவருக்கு ஆசிரியர். திருக்கயிலாய மலையிலிருந்து, தேவ விமானத்தின் மேற்கொண்டு, எழுந்தருளி வந்த பரஞ்ஜோதி மஹாமுனிவர். இவருடைய ஆசிரியர் சத்திய ஞானதரிசனிகள். இவருடைய ஆசிரியர் சனற்குமார மஹா முனிவர், இவருடைய ஆசிரியர் திரு நந்திதேவர்.இவருடைய ஆசிரியர்தான் ஸ்ரீகண்ட பரமசிவம்.

திருக்கயிலாயத்தில், எழுந்தருளியுள்ள ஸ்ரீ கண்டபரம சிவன் நந்தியெம் பெருமானுக்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரர் முதலியோருக்கு உபதேசிக்க, சனற்குமாரர் சத்தியஞான தரிசனிகளுக்கு உபதேசிக்க, அவர் பரஞ்ஜோதிமாமுனிகளுக்குஉபதேசிக்க,அவர்மெய்கண்டதேவருக்குஉபதேசிக்க, அவரது பரம்பரை பலகிளைகளாக வந்தனவே நந்திமரபு என்றும், மெய்கண்ட சந்தானம் என்றும், திருக்கயிலாய பரம்பரை என்றும் வழங்கப்பெறும் சைவ ஆதீனங்கள். நந்தி, சனற் குமாரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்ஜோதி மாமுனிகள் இவர்கள்நால்வரும் திருக்கயிலையிலேயே வாழ்பவர்களாதலின், இவர்கள் அகச் சந்தான குரவர்கள் எனப்பெறுவர். மெய்கண்டார் முதல் நால்வரும் மண்ணுலகில் வாழ்ந்து மக்கள் மாசினைப்போக்கிய இந்நால்வரும் புறச் சந்தான குரவர்கள் எனப்பெறுவர்.

சைவசமயாசாரியர் திருநட்சத்திரங்கள்

சித்திரைச் சதயத்து அப்பர், சிறந்த வைகாசி மூலத்து
அத்திரைப் பணிசம்பந்தர், ஆனிமாமகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரார் முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

சைவசந்தானாசாரியர் திருநட்சத்திரங்கள்

சித்திரை அத்தம் உமாபதி, ஆவணி திங்கள்தனில்
உத்ரம் சீர்கொள் மறை ஞானசம்மந்தர், ஓதுகன்னி
சுத்த மெய்ப்பூரம் அருணந்தி, ஐப்பசிச் சுவாதி தன்னில்
வித்தக மெய் கண்டதேவர் சிவகதி மேவினாரே.

38. சைவ பேத வியல்

சிவபெருமானைச் சிவாகம முறைப்படி வழிபடுதற்குத் தகுதியைக் கொடுப்பது சிவதீட்சையாகும். சிவதீட்சை பெற்றபின் அவசியமாக அநுட்டிக்க வேண்டுவன இயமம், நியமம், சந்தியாவந்தனம், தேவாரத் திருவாசகப் பாராயணம், சிவாலயத் தொண்டு, சிவாலய தரிசனம். குருவாக்கிய பரிபாலனம், இயன்ற மட்டும் மகேசுவர பூசை முதலியவைகளாம்.

இயமம் : எந்த உயிரையும் கொல்லாமை, எதற்கும் பொய் சொல்லாமை, உண்மை பேசுதல், கள்ளாமை (திருடாமலிருப்பது), அன்னியரின் பொருளை மோசம் செய்யாமலிருப்பது, பிறர் மனைவியரையும், பொதுமகளிரையும் விரும்பாமை, உயிர்களுக்கு இரக்கம் காட்டல், வஞ்சனை இல்லாமலிருப்பது, பொறுமையாக இருப்பது, மனம் கலங்காமலிருப்பது, சுசி யுடைமை, சொற்ப ஆகாரம், சொற்ப நித்திரையுடனிருப்பது, இந்திரியங்களை வசப்படுத்துவது இவைபத்தும் இயமமாகும். இது மனத்தை நிர்மலமாகச் செய்யும். இம்சை என்றால் ஒரு ஜீவனை வதைப்பது மாத்திரமேயல்ல தம்மைவிடத் தாழ்ந்தவர்களை மனம் நோகப் பேசுதலும் இம்சையேயாகும்.

நியமம் : செபம், தவம்செய்தல் மனமுவந்திருத்தல், கடவுள் உண்டென்று பேசுதல், பாவத்திற்குப் பயந்து தேடிய பொருளை நல்லவர்களுக்கும், புண்ணிய காரியங்களுக்கும், தருமத்திற்கும் கொடுத்தல், தன்னின் மூத்தோரை வழிபடுதல், உயிருக்கும் உறுதிபயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலம், செல்வம், அதிகாரம் முதலியவைகளினாலே செருக்கின்றி அடங்கியொழுகுதல், தக்கதெனவும், தகாததெனவும் பகுத்தல், விரதம் மேற்கொள்ளல், இவை பத்தும் நியமமாகும்.

சைவர்கள் சாதிபேதத்தினால் ஆறுவகைப்படுவார்கள்: 1 ஆதிசைவர், சைவர், 2. மாகா சைவர் 3. அநுசைவர் 4. அவாந்திர சைவர் 5. பிரவர சைவர் 6. அந்திய சைவர் என்பதாகும்.

ஆதிசைவர்: அநாதி சைவராகிய சதாசிவமூர்த்தியினுடைய ஐந்து திருமுகங்களிலும் உபதேசம் பெற்ற இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவராகிய சிவப்பிராமணர். குருக்கள், பட்டர், சைவர் என்றும் சொல்லப்பெறுவர்.

மகாசைவர்: பிரம்மாவினுடைய முகங்களில் தோன்றிய இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவராகிய வைதீகப்பிராமணர்களில் சிவதீட்சை பெற்று அநுட்டித்து வருபவர் (சிதம்பரத்திலுள்ள தீட்சிதர்கள்)

அநுசைவர்: சிவதீட்சை பெற்ற அரச குலத்தவரும் வணிக குலத்தவரும் (செட்டியார்) ஆவர். மேலும் வேளார், ஒச்சப்பட்டர், முதலியோர்.

அவாந்தர சைவர்: சிவதீட்சை பெற்ற வேளாளர்

பிரவர சைவர்: சிவதீட்சை பெற்ற அநுலோமர்

அந்திய சைவர்: சிவதீட்சை பெற்ற பிரதிலோமர் மற்றைய சாதியர்.

சைவர்களில் தீட்சா பேதங்களாவன

முதலாவது சைவசமய தீட்சை 7 வயது முதல், இரண்டாவது

விசேடதீட்சை 19 வயது முதல் மூன்றாவது நிர்வாண தீட்சை 31 வயது முதல் இப்படி மூன்று தீட்சைகளும் பெற்றுக்கொண்டு சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை, பிராணாயாமம், இவற்றினோடு ஞானபூசையும் அநுட்டிப்பர், ஞானபூசை என்பது ஞானநூல்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களை விதிப்படி ஓதல், ஓதுவித்தல், அவைகளின் பொருள்களைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னும் ஐந்துமாம்.

ஆசாரியராதற்கு: சிவப்பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்களுள்ளும் மனக்குற்றங்களும், உடற்குற்றங்களும், இல்லாதவராய், இலக்கண இலக்கியமும், தருக்கமும், நீதி நூல்களும், சிவபுராணங்களும் படித்து அறிந்தவராய் தேவார திருவாசகங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவ ஆகமங்களை ஓதி அறிந்தவராய் சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையும், சைவசமயத்தையும் போதிக்கும் திறமை உடையவராய் ஆசாரிய அபிடேகம் பெற்றவராய் இருப்பவரே ஆசாரியராவார்.

இன்ன இன்ன வருணத்தாருக்கு:

இன்ன இன்ன வருணத்தார் ஆசாரியராகலாம் என்பது:

சிவப்பிராமணர் - சிவப்பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும்

அரசகுலத்தவர் - அரசகுலம் முதலிய மூன்றும் வருணத்தாருக்கும்

வைசியர் - வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும்

வேளாளர் - வேளாளருக்கும், சங்கர சாதியாருக்கும் ஆசாரியராகலாம்.

சிவஞானத்தை அடையவிரும்பிய சீடன் தான்அடைந்த ஆசாரியரிடத்தே சிவஞானமில்லையாயின், வண்டானது தான்அடைந்த பூவினிடத்தே தேன் இல்லையாயின், அதனைவிட்டுத் தேன்உள்ள பூவைத் தேடி அடைவது போலச் சீடன் தான் அடைந்த ஆசாரியரை விட்டுச் சிவஞானமுள்ள ஆசாரியரை அடையலாம். அவ்வாறு அடையினும், முன் சமயதீட்சை உபதேசித்த ஆசாரியரைத் தியானஞ் செய்துகொண்டே ஞானம் உபதேசித்த பிந்திய ஆசாரியரைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

ஔத்திர தீட்சைக்கு அங்கமாகிய நயன தீட்சை பரிசதீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை, சாத்திர தீட்சை, யோகதீட்சை என்னும் ஆறினுள்ளும், தத்தம் சாதிக்கும், பரிபக்குவத்திற்கும் ஏற்ற தீட்சை பெறுவதற்குத் தகுதியுடையோர். ஆசாரியர் தமது பாதோதகத்தைக் கொடுத்தலும் ஒருவகை தீட்சையாம். சீடர் அதனைச் சிரத்தையோடு ஏற்றுச் சிரத்தின்மீது புரோட்சித்து ஆசனஞ் செய்யக்கடவர். ஔத்திரி தீட்சை என்றால் ஓமத்தோடுகூடச் செய்யப்படும் தீட்சை. இது ஞானவாதி, கிரியாவாதி என இரண்டு வகைப்படும். அவ்விருவருக்கும் பொதுவான சமய, விஷேட, நிருவாணமென மூன்று தீட்சைகள்.

ஞானவாதி: குண்டம், மண்டலம், அக்கினி, நெய், சிருக்கு, சிருவம் முதலியவைகள் எல்லாம் மனதிற்கற்பித்துக்கொண்டு, விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து சீடனது பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்கும் தீட்சையாம், இது சத்திய தீட்சை எனப்படும்.

கிரியாவாதி: குண்டங்களைப் புறத்தேயிட்டு விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்து சீடனது பாசத்தை கெடுக்கும் தீட்சையாம் மாந்திரீக தீட்சை எனப்பெயர். சாதாரண சமயதீட்சைக்கு சுவாமிமுன்னிலையில் செய்யும்போது அக்கினி காரியம் அவசியமானதல்ல.

39. திருநீறு

சைவசமயிகளே அவசியம் தரிக்கத் தக்கது திருநீறும், உருத்திராக்கமாகிய சிவச்சின்னங்கள்

திருநீறாவது: புல்வெளியில் மேய்ந்து பால்கொடுக்கும் பசுவின் சாணத்தை பிசைந்து உருட்டி வெய்யிலில் நன்றாக உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு, நெல்பதரை தரையில் 3அங்குல உயரத்திற்கு வட்டமாகப் பரப்பி, அதன்மீது சாண உருண்டைகளை நெருக்கமாக பரப்பி நெற்பதர்போட்டு, மீண்டும் உருண்டைகளைப் பரப்பி, நெற்பதர் போட்டு, மீண்டும், மீண்டும் முன்போல செய்து, கோபுரம்போல் ஒடுக்கி அடுக்கி வைத்து நெருப்பிட்டு தீப்பற்றச் செய்க மேலிருந்து கீழாக நெருப்புப் பற்றும், புகையாகவே வரும். மறுநாளும் தேவைப்பட்டால் மேலே பதர்போடுக. பிறகு நன்றாக ஆறியபின் பதர்தள்ளி மேலிருந்து திருநீற்று முட்டங்களை ஒருதாம்பாளத்தில் சுத்த வெண்மை நிறமானதை மட்டும் எடுத்து வைத்துக்கொள்க.

இதில் கவனிக்கவேண்டியது: 1 தரையில் ஈரம் இருந்தாலோ பதர் பரப்பிய உயரம் 3அங்குலத்திற்கு குறைவாக இருந்தாலோ, அடிவரிசையிலுள்ள முட்டகங்கள் கருப்பு நிறமாகிவிடும். 2 முட்டகம், நெற்பதருமாக மாறிமாறி அடுக்கவும். இப்படியிருந்தால் தீப்பற்றி உயரமாக எரியாது. 3 தீப்பற்றி எரிந்தால் காற்றுப்பட்டு எருமுட்டகம் கருத்து விடும். 4சுமார் **30To36** மணி நேரத்திற்கு மேல் தீச்சார்ந்தால் திருநீறு செந்நிறமாகிவிடும். 5. சூரிய வெளிச்சத்தில் சாண உருண்டை நன்றாகக் காயாவிட்டால் உட்புறம் கருப்பு நிறமாகவும், காய்ந்த மேற்பரப்பு வெண்மை நிறமாகவும் இருக்கும் இவ்வாறு எடுத்த வெண்மைநிறத் திருநீற்றை மட்டும் புதுத்துணியினாலே வடிகட்டி எடுத்துப் புதுப்பானையிலே நிரப்பி வைத்துப் பானையின் வாயைத் துணியால் மூடிக் கட்டி வைக்கவும். திருநீற்று மடலிலும், சம்புடங்களிலும், பைகளிலும் எடுத்து வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம்.

திருநீற்றின் பெயர்களாவன: விபூதி, பற்பம், பசிதம், பசுமம், இரக்ஷை, க்ஷாரம், வி=மேலான, பூதி=ஐஸ்வர்யம்,

திருநீறு அவசியமாகத் தரிக்குங்காலங்களாவன: குளித்தவுடனும், சந்தியாகாலங்களிலும், குளித்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், தீட்சையில்லாதவர் தீண்டினபோதும், பூனை, எலி, முதலியன தீண்டினபோதும், திருநீறு அவசியமாகத் தரித்தல் வேண்டும்.

கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாக வேனும் இருந்து கொண்டு நிலத்திலே சிந்தாத வண்ணம் அண்ணாந்து *சிவ சிவ* என்று சொல்லி விபூதியை நெற்றியில் வலது கை நடு மூன்று விரல்களால் பூசிக்கொள்ள வேண்டும். அவ்வாறு பூசும்போது தோள்களிலே விழும் படியும், நிலத்திலே விழாதபடியும் பூசுக. திருநீறு நிலத்திலே சிந்தியதை எடுத்து விட்டு அவ்விடத்தைச் சுத்தி செய்யவேண்டும்.

தரிக்கலாகாத திருநீறுகளாவன: கருநிற, செந்நிற, புகைநிறத் திருநீறுகளும், பாவிகள் முன்னும், ஒருகையால் வாங்கிய திருநீறும், விலைக்கு வாங்கிய திருநீறும், சிவதீட்சையில்லாதவர் தந்த திருநீறும், அசுத்த நிலத்திலும், கிடக்கும் போதும், வழிநடக்கும் போதும் திருநீறு தரிக்கலாகாது.

ஆசாரியராயினும் சிவனடியாராயினும் திருநீறு தந்தால் அவரை மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் வீழ்ந்து வணங்கி எழுந்து கும்பிட்டு இடது உள்ளங்கையின் மீது வலது புறங்கையை வைத்து நீட்டி வாங்கித் தரித்துக் கொண்டு மீண்டும் முன்போல வணங்கவேண்டும்.

சுவாமியின் முன்னும், சிவாக்கினி முன்னும், குருமுன்னும் சிவனடியார் முன்னும், பூச வேண்டின் முகத்தைத் திருப்பி நின்று திருநீறு தரித்தல் வேண்டும். சுவாமிக்குச் சாத்தப்பட்ட திருநீறு பிரசாதம் கொண்டுவந்தவர் தீட்சை முதலியவற்றிலே தம்மினும் உயர்ந்தவராயின் அவரை வணங்கி, வாங்கித் தரித்தல் வேண்டும். அப்படிப்பட்டவரல்லாராயின் அத்திருநீறு பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அதனைப் பத்திரப்புட்பங்களால் அருச்சித்து வணங்கி எடுத்து தரித்தல் வேண்டும்.

திருநீறு தாரணம் உத்தூளனம் திரிபுண்டரம் என இருவகைப்படும் **உத்தூளனமாவது** தண்ணீர் கலவாமல் சாதாரணமாகப் பூசுவது. **திரிபுண்டரமாவது** நீரில் குழைத்து நடுமூன்று விரல்களால் மூன்று கோடுகளாக வளையாமலும், இடையறாமலும், ஒன்றை ஒன்று தொடாமலும், மிக அகலமில்லாமலும் இடைவெளியுள்ளதாகவும் பூசவேண்டும், உச்சி, நெற்றி, நெஞ்சு, தொப்புள் (நாபி) வலது இடது முழந்தாள், வலது இடது புயங்கள், வலது இடது முழங்கைகள், வலது இடது மணிக்கட்டுகள், வலது இடது விலாக்கள், முதுகெலும்பு, பிடரியிலிருந்து கழுத்துவரை. ஆகப்பதினாறு இடங்கள் முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கி பன்னிரண்டு இடங்களாகக்கொள்வதுமுண்டு. சுருக்கமாகப் பூசுவதற்கு எட்டு இடங்கள் அவை: உச்சி, நெற்றி, நெஞ்சு, நாபி வலது இடது முழந்தாள் வலது இடது தோள்கள் ஆக 8இடங்கள்.

பூசும் நியமங்களாவன: உச்சியில் ஆறு புள்ளிகளாகவும், நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், நெஞ்சிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்ற இடங்களில் ஒவ்வொரங்குல நீளமுமாகப் பூசவேண்டும். இந்த அளவு அவரவர் கைவிரல் அங்குலிக்கணக்கு, விரலுக்கு அங்குலி என்று ஒருபெயர். தீட்சை பெற்றவர்கள் சந்தியாகாலங்களில் நீரில் குழைத்துப் பூசலாம், மற்றகாலங்களில் நீர் கலவாமல் பூசுக. தீட்சையில்லாதவர்கள் நீரில் கலவாமல் பூசவேண்டும்.

40. உருத்திராக்ஷம்

உருத்திராக்ஷமாவது ஒரு மரத்தின்வித்து எந்த ஒரு தாவர வித்திலுமில்லாத சிறப்பு இதிலிருக்கிறது. அதுதான் நடுவிலே துளையிருப்பது, கோர்த்து அணிவதற்கென்றே இறைவனால் படைக்கப்பெற்றது. உருத்திராக்கம் அணிந்திருப்பவர் மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய், இருத்தல் வேண்டும், தப்பிநடந்தால் நரகத்தில் விழுந்து துன்பத்தை அனுபவிப்பர்.

உருத்திராக்க மணியை முகத்தோடுமுகம் அடியோடுஅடியும் பொருந்தக் கோர்க்கவேண்டும். அவ்வாறு கோர்க்கும் போது ஒவ்வொன்றுக்கும் இடையிலே தங்கவில்லையாவது, வெள்ளிவில்லையாவது சேர்க்கவேண்டும். அல்லது பவளம், ஸ்படிகம், பளிங்கு, ஆகியவற்றையும் கோர்த்து அணியலாம்.

உருத்திராக்கத்தின் பெயர்களாவன: அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணி, என்பதாகும். உருத்திராக்கம், ஒரு முகம் முதல் பதினாறுமுகம் வரையிருக்கிறது. அதற்கு மேலும் அபூர்வமாக இருக்கிறதாம் 5, 6, முகங்கள் அதிகமாகக் கிடைக்கும் 1, 5, 11, 14, முகமணிகள் பூசித்தற்கு மிகச் சிறந்தனவாம்.

உருத்திராக்கம் அணியும் காலங்களாவன: சந்தியாவந்தனம் சிவமந்திர செபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம், தேவாரம் படித்தல், கேட்டல், சிரார்த்தம் முதலியவை செய்யும்போது அவசியம் அணிந்திருக்கவேண்டும்.

உருத்திராக்கம் அணியும் நியமங்களாவன: குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும் தலையிலே 22 மணியும், கழுத்திலே 32மணியும், புயங்களிலே 16மணி வீதம், கைகளிலே 12 மணி வீதம், மார்பிலே 108 மணியும் அணியவேண்டும் காதுகளிலே 1 மணி வீதம் அல்லது 6மணி வீதம் அணிய வேண்டும் குடுமியிலும், பூணூலிலும் தவிர மற்ற இடங்களில் கொண்ட அளவு மணிகள் அணியலாம். குடுமியிலும், பூணூலிலும், காதுகளிலும் எப்போதும் அணிந்திருக்கலாம். மற்ற இடங்களில் சயனத்திலும், மலசலமோசனத்திலும், நோயினும், சனன மரணா செளசங்களிலும் அணிந்து கொள்ளலாகாது. உருத்திராக்கம் அணிந்திருப்பது சிவபெருமானினுடைய திருவருட் பேற்றிற்கு அறிகுறி.

உருத்திராக்கம் சிறுமணியாக இருந்தால் தங்கம் வெள்ளிக் கம்பியினால் 108, 54,36,27, ஆகிய எண்ணிக்கை கொண்ட செபமாலையில் நாயக மணியும் சேர்த்துச் செய்து அணிந்து கொள்ளலாம். சம்புடத்தில் வைத்துக்கொள்ளவும் வசதியாக இருக்கும். செபமாலைக்கு எல்லா உருத்திராக்க மணியும் ஒரேவிதமான முகங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பலமுகங்கொண்டதும் 2,3,12,13 முகமணிகளும் செபமாலைக்குச் சேர்க்கலாகாது.

கௌரிசங்கமம் விளக்கம்: கௌரிசங்கமம் என்பது இரண்டு உருத்திராக்கமணி ஒன்றாகச் சேர்ந்த அபூர்வப் பிறவி உருத்திராக்க மணியாகும். இதற்குத் தங்கக் கவசம் அழகாகச் செய்திருக்கும். இதை நாயக மணியாகக் கொண்டு இத்துடன் 32, உருத்திராக்கங்களை முகத்தோடு முகமும், அடியோடு அடியுமாக ஒவ்வொன்றுக்கும் இடையே தங்க வில்லை 33 சேர்த்துக் கோர்த்திருக்கும். நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் சேர்ந்தது சிவசக்தி ஐக்கியம் என்பதைக் குறிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இதை ஆசாரிய அபிடேகம் பெற்ற குருமகா சன்னிதானங்களும், சைவாசாரியர்களும், சிவாசாரியர்களும் அணிந்துகொள்வது கௌரி சங்கமம் என்பதாகும்

41. ஸ்ரீ பஞ்சாட்சரம்

சைவர்களாக பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருபவர்களாலே செபிக்கத்தக்க சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரம் (திருஐந்தெழுத்து) இம்மந்திரம் செபம் செய்பவர் மதுபானமும், மாமிச போஜமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய் சிவதீட்சை பெற்றவராய் உள்ளவர்.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை தத்தம் வருணத்திற்கும், ஆசிரமத்திற்கும், தீட்சைக்கும் ஏற்பக் குருமுகமாகவே பெற்றுக் கொள்ளல் வேண்டும். மந்திர உபதேசம் பெற்றவர்கள் தம் குருவை வழிபட்டு அவருக்கு வருடந்தோறும் இயன்ற காணிக்கை கொடுத்துக் கொண்டு வருவது சீடர் கடமை. இத்திருவைந்தெழுத்தை அமைதியாகவும் ஆறுதலாகவும் நியமமாகவும் 108 உருவாயினும் செபித்தல் வேண்டும். இதற்கு உருத்திராக்க மணிமாலை மிகவும் ஏற்றது.

மந்திர செபம், மானசம், உபாஞ்சு, வாசகம் என மூன்று வகைப்படும். **மானசம்** என்றால் நாக்கு நுனி உதட்டைத் தீண்டாமல் ஒருமை பொருந்திய மனசினால் செபித்தல் (நாஅசைவில் சொல்வெளியில் வராவண்ணம்)

உபாஞ்சு என்றால் (மந்தம்) தன்செவிக்கு மாத்திரம் கேட்கும்படி நாக்கு நுனி உதட்டைத் தீண்ட மெல்ல மெல்ல செபித்தல்.

வாசகம் என்றால் (பாஷ்யம்) அருகிலிருக்கும் குரு சீடர் செவிக்கு மட்டும் கேட்கும்படியும் மற்றுமுள்ளவர் காதில் விழாவண்ணம் மணிஓசை எழுப்பி, உபதேசிப்பது வாசகதீட்சை. வாசகம் 100 பங்கு பலனும், உபாஞ்சு 10 ஆயிரம் பங்கு பலனும் மானசம் கோடி மடங்கு பலனும் தரக்கூடியவை.

மந்திரம் செபிக்கும் விவரம்: தனி இடமாக இருப்பதே சிறப்பு. ஒருமரப்பலகையில் மான்தோல், புலித்தோல், இரத்தனக் கம்பளம், தருப்பை, வெள்ளைத்துணி இவற்றுள் இயன்றதை விரித்து அதன்மீது கிழக்கு நோக்கி அல்லது வடக்கு நோக்கி சுகாசனத்தில் (கால்களை முடக்கி சம்மணம் கூட்டி) யிருந்து, கண்கள் மூக்குநுனியைப் பார்த்துக் கொண்டும், நிமிர்ந்தபடியே யிருந்துகொண்டு செபிக்க வேண்டும். அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, கிரகணம், சிவராத்திரி, மாதப்பிறப்பு பன்னிரண்டும் குளித்து தியானம், செபம், சிறப்பாகச் செய்ய வேண்டும்.

ஜெபம்: இறைவனின் திருநாமத்தைந்தெழுத்தை ஜெபம் செய்வதன் மூலம், ஜெபத்தின் பொருளைச் சிந்திப்பதன் மூலம் நம் உணர்வின் மிக நுட்பமான நிலைக்குச் சென்று மிக உயர்ந்த ஆன்மீக அநுபவங்களைப் பெற முடியும். ஜெபம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் எல்லா மந்திரங்களுக்கும் இந்த உள்ளார்ந்த தெய்வீக சக்தி உண்டு. ஆன்மீக சாதனையில் முதிர்ந்த நிலையில் இருக்கும் ஒருவர் மந்திரத்தை உச்சரிக்கும் போது; அது உயிர் பெற்று, அதற்குரிய ஆன்மீக சக்தியுடன் விளங்குகிறது. இத்தகையவர் இன்னொருவருக்கு மந்திர உபதேசம் செய்யும்போது இந்த ஆன்மீக சக்தியும் மந்திரஉபதேசம் பெறுபவருக்கு அளிக்கப்படுகிறது. மேலும் அவர் மனத்தை உயர்த்தி ஒருமுகப்படுத்துவதற்கு உதவுகிறது.

ஒவ்வொருமந்திரத்திலும் அந்தந்த தெய்வத்தின் சக்தியை நம்முன் தோற்றுவிக்கும். இதுவே ஜெபத்தின் தத்துவமாகும். **நமச்சிவாய** இது எல்லோருக்கும் தெரிந்த சிவமூல மந்திரமாகும். இதுவே நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே! **ஓம்** என்ற பிரணவ மந்திரத்தை மட்டும் ஜெபம் செய்தால் எல்லா ஆன்மீகத் தடைகளும் நீங்கி ஆன்மா விழிப்படையும் என்று பதஞ்சலி தமது யோக சூத்திரத்தில் கூறியுள்ளார்.

ஒவ்வொரு தெய்வங்களின் பெயரும் அந்தந்த தெய்வத்தின் மந்திரமாகும். எண்ணற்ற மகான்களின் வாழ்க்கையிலும், அனுபவத்திலும் தொடர்புள்ள மந்திரங்களாகும். முதலில் ஓம் என்பதையும் பிறகு அத்தெய்வத்தின் பெயரையும் சேர்த்து உச்சரித்தோ, சிந்தித்துக் கொண்டு வந்தாலோ, சிறிது காலத்தில் மனம் புலன்கள் வழியே செல்லாமல் கட்டுப்படும்.

திருஐந்தெழுத்தைச் செபிக்கலாகாத விவரம்: சட்டை போட்டுக்கொண்டும் குடுமியை விரித்துக் கொண்டும், போர்திக்கொண்டும் கௌபீனம், வேஷ்டி தரியாமலும், விரலிலே பவித்திரம் தரிக்காமலும், பேசிக்கொண்டும், விளக்கில்லாமல் இருட்டிலிருந்து கொண்டும், நாய், கழுதை, பன்றி முதலியவற்றையும், புலையர் முதலானோரையும், பார்த்துக் கொண்டும் செபிக்கலாகாது. செபம் செய்யும்போது கோபம், சிரிப்பு, தும்மல், கொட்டாவி, நித்திரை, சோம்பல், பேசுதல், முதலானது கூடாதென்பர்.

42. சிவலிங்கவியல்

சிவபெருமானை ஆன்மாக்கள் வழிபடுமிடங்கள் புறத்தே சிவலிங்கம் மற்றும் உருவத்திருமேனிகள், குரு, சிவனடியார் முதலியவற்றை ஆதாரமாக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றருளுவார். ஆதலால் ஆன்மாக்கள் அவரை வழிபடுமிடங்கள் அகமும் புறமும் ஆகும். சிவத்திற்குப் பெயராகிய சிவலிங்கம் என்னும் பதம் உபசாரத்தால் அச்சிவம் விளங்கப்பெறும் சிலைகளுக்கும் பொருந்தும்.

சிவபெருமானுக்கு உரிய நிலைகளாவன: சிவபெருமான் சூரியனைப் போல எல்லாம் கடந்து நிற்கும் நிலை. அச்சூரிய ஒளி எல்லாப் பெருள்களிலும் எல்லா இடங்களிலும் கலந்திருப்பதைப்போல சிவபெருமான் எங்கும் வியாபகமாகய் நிற்பினும், இவ்விடங்களில் மட்டும் தயிரில் நெய்போல விளங்கிநிற்பார். மற்ற இடங்களில் எல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பார்.

சிவலிங்கம் பரார்த்தலிங்கம், ஆன்மார்த்த (இட்ட) லிங்கம் என இருவகைப்படும். பரார்த்த லிங்கத்தில் சிவபெருமான் எப்போதும் விளங்கித் தோன்றி இருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கும் பெரும் இலிங்கமாம். இது ஸ்திரலிங்கம் எனவும் பெயர் பெறும்.

பரார்த்தலிங்கமாவது: சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகைப்படும். சுயம்புலிங்கமாவது தானே தோன்றியது. காணலிங்கமாவது விநாயகர், சுப்பிரமணியர், முதலிய

கணங்களாலும், தைவிகலிங்கம் ஆவது விஷ்ணு முதலிய தேவர்களாலும் ஆரிடலிங்கமாவது இருடிகளாலும், மானுடலிங்கமாவது மனிதர்களாலும் தாபிக்கப்பெற்றது. இதில் மானுடலிங்கமுதல் ஒன்றுக்கொன்று உயர்வுடையது.

பரார்த்தலிங்கபூசை, திருவிழா, பிரதிட்டை செய்யும் தகுதி ஆதி சைவர்களுக்குள்ளே சமயதீட்சை முதல் ஆசாரிய அபிடேகம் வரைப் பெற்றவராய் சைவ ஆகமங்களை நன்கு கற்றவராய் உள்ளவர்கள்.

ஆன்மார்த்தலிங்கமாவது: ஆச்சாரியர் விசேட தீட்சை செய்வித்துச் சீடனைப் பார்த்து, நீ உள்ளளவுங்கைவிடாது. சிவலிங்கத்தை இயன்ற வரை நாள்தோறும் பூசித்துவா என்று அனுமதி செய்ய அதற்குச்சீடன், அடியேன் இச்சரீரம் உள்ளவரையும் சிவபூசை செய்தாலன்றி ஒன்றும் உட்கொள்ளேன் என்று உறுதி செய்வித்துக் கொண்டு கொடுக்க அவன் வாங்கிப் பூசிக்கும் லிங்கமாம். இது ஆன்மார்த்தலிங்கம் என்றும் இட்டலிங்கம் என்றும் சலலிங்கம் எனவும் பெயர்பெறும். வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், உலோகஜலிங்கம், சைலலிங்கம், க்ஷணிகலிங்கம், என பல வகைப்படும்.

ஆன்மார்த்த பூசைக்கு தகுதி உடையவர்கள் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும். அநுலோமர் அறுவருமாகிய பத்துச்சாதியார்களும் அங்கவீனர் அல்லாதவர் பிணியில்லாதவர் இடம் பொருள் ஏவல்கள் உடையவராய்ச் சிவபூசாவிதி, பிராயச்சித்தவிதி, பவித்திரவிதி, முதலியவைகளை நன்றாக அறிந்தவராய், அறிந்தபடியே அநுட்டிக்க வல்லவராய் உள்ளவர் மாத்திரமே வாணலிங்கம் முதலிய சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக் கொண்டு பூசைசெய்யலாம் இது **உடையவர்பூசை** என்று சொல்லப்பெறும் (நிர்வாணதிட்சை பெற்றோர்க்குரியது) விசேடதீட்சை பெற்றவரெல்லாரும் க்ஷணிகலிங்க பூசையே செய்யக்கடவர். அவர் குளிக்கப்புகுந்து சேறு பூசிக்கொள்வது போலச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொள்ளப்புகுந்து பாவந்தேடிக் கொள்வது புத்தியன்று. சிவாகமவிதிகளை ஆராய்ந்து சிவலிங்கங்களை பரீட்சை செய்து யாதொரு குற்றமும் இல்லாதததாய் நல்லிலக்கணங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவலிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக்கொள்ளல் வேண்டும். க்ஷணிகலிங்கம் என்பது பூசித்தவுடன் விடப்படும்லிங்கமாகும். அவை ,மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா, எனப்பன்னிரண்டு வகைப்படும்.

ஆன்மார்த்த சிவபூஜை செய்யத் தங்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப ஆசாரியர் தீட்சையைப் பெற்றத் தூலலிங்கமாகிய தூபியையேனும், திருக்கோபுரத்தையேனும் பத்திரபுட்பங்களால் அருச்சித்துத் தோத்திரம் செய்து வணங்குவதே அவர்களுக்குச் சிவபூசை, சூரியபிம்பத்தின் நடுவே சதா சிவமூர்த்தி எப்போதும் எழுந்தருளியிருப்பார் என்று நினைந்து அவருக்கு எதிராகப் புட்பங்களைத் தூவித் தோத்திரங்கள் செய்து வணங்குவது அவர்களுக்குச் சிவபூசை. ஆன்மார்த்த சிவபூசை எழுந்தருளச்செய்து கொண்டவர்கள் பூசை பண்ணாது அன்னம் புசிப்பது புழுவுக்கும், பிணத்திற்க்கும் சமம். சில சமயங்களில் பூசைசெய்யாமல் புசித்தவன் ஆசாரியரை அடைந்து அதற்குப்பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். ஞான நிட்டையுடைய சிவபூசைக்காரர் கூட சிவ பூசை செய்ய வேண்டும், நித்திரை செய்வோர் கைப்பொருள் அவர்அறியாமல் தானே நீங்குவது போல ஞான நிட்டையுடைய வருக்குச் சிவபூசை முதலிய நியமங்கள் தாமே நீங்கிற்குற்றமில்லை, அவ்வாறின்றி அவர்தாமே அவைகளை நீக்கினால் நரகத்தில் வீழ்தல் தப்பாது.

சிவபூசை எழுந்தருளச் செய்து கொண்டவர், பிறப்பு இறப்புத்தீண்டல் ஏற்பட்டால், திடபுத்தியுடையவர் குளித்து ஈரவேஷ்டியுடனிருந்து தாமே சிவபூசை செய்யலாம், குளித்தது முதல் பூசை முடியும் வரை தாமரையிலையில் தண்ணீர் போல அவரை தீண்டல் சாராது. திடபுத்தியில்லாதவர் தீண்டல் நீங்கும் வரையும், தம்முடைய ஆசாரியரைக்கொண்டாயினும் தம்மோடொத்தவரை கொண்டாயினும் தம்முடைய பூசையை செய்வித்துத்தாம் பூத சுத்தி அந்தர்யாகம் செய்து கொண்டு அகப்பூசை முடிவிலே புறமண்டபத்தினின்று புட்பாஞ்சலி மூன்று செய்து வணங்கவேண்டும். வியாதியினாலே தம் கை கால் தன்வசமாகாதிருப்பின் தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும் தம்மோடொத்தவரைக் கொண்டாயினும், தம்பூசையை செய்வித்துத் தாம் அந்தர்யாகம் செய்தல் வேண்டும். சிவபூசை எடுத்துகொண்ட பெண்கள் பூப்பு வந்தால் மூன்று நாளும் பிறர் தண்ணீர் தரத்தர -தாம்வாங்கிக் குளித்து அந்தரியாகம் செய்தல் வேண்டும். நான்காம் நாள் குளித்து பஞ்சகவ்ய மேனும் பாலேனும் உட்கொண்டு மீண்டும் குளித்துச் சிவபூசை செய்யலாம் அம்மூன்றும் நாளும் அந்தரியாகம் செய்யாவிட்டால் குற்றம். அக்குற்றம் போகும்படி அகோர மந்திரத்தை ஆயிரம் உரு செபிக்கவும்.

பெண்கள் பிரசவித்த சூதகம், தமக்குரியர் இறந்த தீட்டு, வியாதிகள் வந்தால், சாதியாலும், தீட்சையாலும் தம்மோடு ஒத்தவரைக் கொண்டு பூசை செய்வித்தல் வேண்டும். அவை நீங்கியபின் பிராயச்சித்தத்தின் பொருட்டு அகோர மந்திரத்தை 300உரு செபித்துத் தாம் பூசை வேண்டும்.

தாம் பூசை செய்து வந்த சிவலிங்கம் காணாமல் போய்விட்டால் அந்தர்யாக பூசை செய்து பால், பழம் முதலியவற்றை உண்டு 40நாள் இருத்தல் வேண்டும். அவ்விலிங்கம் கிடைக்காவிடின் வேறோர் லிங்கத்தை ஆசாரியர் பிரதிட்டை செய்து தர வாங்கிப் பூசை செய்தல் வேண்டும். அதன்பிறகு வந்ததாயின், அவ்விலிங்கத்தையும் விடாது பூசை செய்தல் வேண்டும்.

சிவபெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நாட்களிலும், ஜென்ம நட்சத்திரத் திரையங்கள், மார்கழி மாதம் முழுவதும் நாள்தோறும், நித்திய பூசையன்றி அதற்குமுன் உஷகால பூசையும் செய்யவேண்டும். மகா சிவராத்திரி தினத்திலே நித்தியபூசையேயன்றி இரவில் நான்கு ஜாமத்திலும் பூசை செய்ய வேண்டும். சென்ம நட்சத்திர திரையங்கள் என்பது பிறந்த நட்சத்திரத்திற்குப் பத்தாம் நட்சத்திரமும் அதற்கு பத்தாம் நட்சத்திரமும் உதாரணம் கார்த்திகை-உத்திரம், உத்திராடம்.

சென்ம நட்சத்திரத்திரவியங்கள்தோறும், சிவலிங்கப்பெருமானுக்குப் பத மந்திரங்கொண்டு பாலும்,சர்க்கரையினாலும் விசேஷமாக அபிஷேகம் செய்து சுகந்தத் திரவியங்கள் கலந்த சந்தனக் குழம்பு சாத்திப் பாயச முதலிய நிவேதனம் செய்துகொண்டுவரின் உற்பாதங்களும், பயங்கரமாகிய கிரகப் பீடைகளும், சகல வியாதிகளும் நீங்கிச் சுகம் பெறுவர் நிச்சயம்.

43. நித்திய கருமவியல்

சூரிய உதயத்திற்கு முன்னே நித்திரைவிட்டெழுந்து **மஹாகணபதியே நமஹ** என்று குட்டிக் கொண்டு கும்பிடுக, **குரவே நமஹ**-என்று கும்பிடுக, பிறகு புறத்தே போய் மலசல மோசனஞ் செய்து, தந்த சுத்தி செய்து, நீராட வேண்டும்.

தந்தசுத்தி: தந்தசுத்திக்கு ஆலம் விழுதும், கருவேலம் குச்சியும், கருவேலப்பட்டைத்தூள், பற்பொடிகள், மிகவும் ஏற்றது. பற்களை உள்ளும் புறமும் நன்றாக அழுக்குப் போகத் தேய்த்து, நாக்கை வழிக்கவும். டூத்பேஸ்ட்டும், பிரஷும், உபயோகிப்பதால் பல் எளிறு உயரம் குறைந்து, பற்களுக்கு இடையே இடையே

இடைவெளியை உண்டுபண்ணுகிறது. பற்பொடியால் விரலைப் பயன்படுத்தி பல் துலக்குவதே நல்லது. மணல், செங்கல்பொடி போன்றவைகளால் பல்துலக்கினால் பல் எனாமல் போய், பல்லும் தேய்ந்து விடுகிறது. இதனால் பற்கூச்சம் உண்டாகிறது.

நீராடல்: குளிப்பதற்கு ஏற்ற நீர்நிலைகளாவன: நதி, நதிசங்கமம், ஓடை, குளம், கேணி, கடல், இரண்டு ஆறுகள் சந்திக்குமிடங்கள், ஆறும் கடலும் கூடின இடம். குளிக்கும் நீரைக் கங்கை, யமுனை முதலிய புண்ணிய நதிகளாகவும் நினைந்து நீராடுக! கடல்நீர், குளிர்ந்தநீர், வெந்நீர், அருவிநீராடல், எண்ணெய்க் குளியல் என நீராடல் ஐந்து வகைப்படும். கோவணமும், ஆடையும் இல்லாமல் நீராடுதல் கூடாது. வாரம் ஒருமுறை நல்லெண்ணெய் தேய்த்து எண்ணெய்போக பாசிப்பாயறுப்பொடி, இலுப்ப அரப்பு, சீயக்காய்த்தூள், இவற்றுள் ஏதாவது தேய்த்துக் குளிக்கவும்.

குளிர்ந்த நீரில் குளிக்கமாட்டாதவர்களும், பிணியாளர்களும், குளித்தவர்கள் சுத்தமான இடத்திலே, சுத்திசெய்யப்பட்டபாத்திரத்தில் வைத்த வெந்நீரை அவரவர் ஒரு பாத்திரத்தில் விட விட அதை எடுத்து தன் சரீரத்தில் ஊற்றிக் குளிக்கவும், தோய்த்து உலர்ந்த துண்டால் ஈர்ந்துவட்டி, தோய்த்துலர்ந்த தூய ஆடைகளை அணிந்துகொண்டு அநுட்டானம் செய்து, வழிபாடு செய்க.

உரிய காலத்திலன்றி அவசியம் குளிக்கும் காலங்களாவன: புறச்சமயிகள், இழிந்த சாதியார், சண்டாளர், வியாதியாளர், சனன மரண சௌசமுடையவரும், நாய், கழுதை, பன்றி கோழி முதலியவை தீண்டினாலும் எலும்பை மிதிக்கினும், சௌரம் செய்து கொள்ளினும், சுற்றத்தார் இறக்கக் கேட்கினும், பிணப்புகைப் படினும், சுடுகாட்டுக்குப் போகினும், துர்ச்சொப்பனம் காணினும், அணிந்திருக்கும் ஆடைகளுடன் குளித்தல் அவசியம். யாகம், சந்திர கிரஹணம், சிவராத்திரி, மாசப்பிறப்பு, மகப்பேறு இவற்றிற்கு மாத்திரம் இரவிலே குளிக்கலாம்.

குளியல் பலன்: குளிப்பதால் சரீரம் சுத்தம் அடைவது மட்டுமின்றிச் சரீரத்திற்கு ஆரோக்கியமும், உற்சாகமும், ஏற்படுகிறது. மனம் பரிசுத்தமாவதற்கும், ஒருமைப்படுவதற்கும், புலனடக்கத்திற்கும் உதவுகிறது. அதிகாலைக் குளியலினால் பல நோய்கள் நீங்குகின்றன.

தீண்டலினால் குற்றமில்லாக் காலங்களாவன: திருவிழாவிலும், யாகத்திலும், கும்பாபிஷேகத்திலும், விவாகத்திலும், தீர்த்த யாத்திரையிலும், சிவதரிசனத்திலும், வீடு தீப்பற்றிஎரியுங் காலத்திலும், தேசக் கலகத்திலும், ஜனநெருக்கடித் தீண்டலினால் குற்றமில்லை.

சந்தியா வந்தனம்

சந்தியா வந்தனம் என்றால் சந்தியா காலங்களில் வணங்குதல் என்பதாகும். பிராதகால சந்தி (சூரிய உதயத்தில்) மத்தியான சந்தி (சூரியன் உச்சியிலிருக்கும்போது) சாயங்கால சந்தி (சூரியன் அத்தமனத்தில்) அர்த்தயாம சந்தி (இரவில்) ஆசாரியருக்கு இந்த நான்கு சந்திகளும் உரியன. நிர்வாண தீட்சைக்கு, பிராதகால சந்தி, மத்தியான சந்தி, சாயங்கால சந்தி என்னும் மூன்று சந்திகளும் உரியன. விஷேட தீட்சைக்கு பிராதகால சந்தி, சாயங்கால சந்தி என்னும் இரண்டு சந்திகளும் உரியன. சமயதீட்சை பெற்றவருக்கு பிராதகால சந்தி ஒன்றே உரியது. என்றாலும், மாலையில் (அநுட்டானஞ்செய்து) ஜெபம் செய்யவேண்டும்.

எமது தந்தையாராகிய தீட்சாகுரு எமக்களித்த சலுகைகள், சமயதீட்சையின்போது, காலை குளித்தவுடன் ஒருநேரம் அநுட்டானம் செய்தால் போதும் என்றும், விசேட தீட்சைக்கு இரண்டு கால அநுட்டானமும், நிர்வாண தீட்சை செய்தபின், காலை பூசைக்குமுன் ஒரு அநுட்டானம், சூரியபூசை முடிவில் அர்க்கியத்தை ஆசமனம் செய்து, அதரசுத்தி செய்து, தொடுமிடம், அங்கநியாசம், கரநியாசம், பிராணாயாமம்வரை செய்து, நெற்றியில் திருநீற்றை சிவ சிவ என்று பூசிக்கொள்வதோடு, இரண்டு அநுட்டானமாகிறது. சிவபூசையின் முடிவில் அர்க்யங்களை சேர்த்து, ஆசமனம் முதல் பிராணாயாமம் வரை செய்து, திருநீறு அணிந்துகொள்வதோடு, மூன்று சந்திகள் முடிவடைகிறது. பிறகு மாலை பூசை செய்யுமுன் அநுட்டானம் செய்வதோடு, நான்கு முறை அநுட்டானம் செய்ததாகிறது.

சந்தியாவந்தனம் முதலிய கிரியைகளுக்கு ஆகாத நீர்களாவன: நுரைகுமிழ்உள்ள நீர், புழுஉள்ள நீர், பாசி நீர், கலங்கல் நீர், வடித்தெடுக்காத நீர், இழிகுலத்தோர் தீண்டின நீர், பழைய நீர், வெந்நீர், உவர் நீர் ஆகியன.

போஜனம்

போஜனம் என்றால் உண்ணல், உணவு உட்கொள்ளல்.

போஜனப்பந்திக்கு தகுதியுடையவர்கள்: சமசாதியராயும், சிவதீட்சை பெற்றவராயும், நியம ஆசாரம் உடையவராயும் உள்ளவர்.

போஜனம் செய்வதற்கு ஏற்ற இடம்: கோமயத்தால் மெழுகப்பட்ட இடமாகவும், வெளிச்சம் உடையதாகவும், பந்திக்கு உரியரல்லாதவர் புகப்பெறாததாய் உள்ள இடம். சாப்பாட்டிற்கு வாழை இலை தண்டுரியாதது அதனுடைய அடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடல் வேண்டும். தாமரையிலை, மாவிலை, பாலா இலை, தென்னை மடல், மலைப்பூவரசுயிலை, ஆலயிலை, ஆகியனவாகும்.

இலை போட்டபின் அதிலே நெய்யினாலே தெளித்து, உப்பு, காய்கறி, அன்னம், நெய், பருப்பு, இவைகளைப் படைத்தல் வேண்டும். இரண்டு கால்களையும் முடக்கி சுகாசனத்திலிருந்து, இடது முழந்தாளின் மேலே இடது கையை ஊன்றிக் கொண்டிருந்து அன்னம் முதலியவற்றில் அஸ்திரத்தால் தண்ணீர் தெளித்து சுத்தி செய்து, சிவபெருமானுக்கும், குருவுக்கும், நிவேதனம் செய்து, அன்னத்தை வலது கையினால் வலப்புறத்திலே வேறாகப் பிரித்து பருப்பு நெய்யோடு பிசைந்து சிந்தாமல், புசித்தல் வேண்டும். அதன் பின் சிறிது அன்னத்தை முன்போல் பிரித்து ரசத்தோடு பிசைந்து புசித்துப் பிறகு, சாம்பாரோடு பிசைந்து புசித்து, அதன்பின் மோரோடு பிசைந்து புசித்தல் வேண்டும். காய்கறிகளை இடையிடையே சேர்த்துக் கொள்ளவேண்டும். இலையிலும், கையிலும் பற்றுத் துடைத்துப் புசித்தபின் தண்ணீர் அருந்தவும். உமிழத்தக்கதை இலையின் முற்பக்கத்தில் உமிழ்க. பாத்திரத்தில் சாப்பிடும்போது உச்சிட்டமாக்கலாகாது. உச்சிட்டமாக்கலாகாது என்றால் எச்சிலாக்கக்கூடாது என்று பொருள்.

அநாதி சைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களினுந் தீட்சிக்கப்பெற்ற இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவர் ஆதிசைவர் என்னும் சிவப்பிராமணர்; இவர்களுக்குப்போல சைவர்களுக்கு இருஷிகளின் கோத்திரப் பெயரில்லாமல் இருக்கிறது. ஆகையால் ஆதிசைவர்களாலே ஆதியிலே தீட்சிக்கப் பெற்றவர்களின் பெயராலேயோ அவர்களுக்கு வழங்கிய தீட்சா நாமத்தாலோ உண்டான வம்சாவழியினர், **இதுவே எங்கள் கோத்திரத்தின் பெயர்** என்று சொல்லி வந்திருக்கலாம் என்று கருதுகிறோம்.

சைவசமயமே சமயம் என்றும், சைவத்தின் மேற்சமயம் வேறில்லை என்றும், சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது என்றெல்லாம் சிறப்பாகப்போற்றப் படுவதற்கு காரணம் என்னவென்று நாம் சிந்திக்கவே இல்லை! சைவ சமயத்தினரின் உலகியல் ஒழுக்கத்தில் தலைசிறந்தது மது, மாமிசம், உண்ணாமை, மாமிசம் உண்பவரை அசைவன் என்றும், மாமிசம் உண்ணாதவரை சைவன் என்றும், தொன்று தொட்டு உலகம் கூறுவதால் அறியலாம். இதை நாம் சிவிலா? கிரிமினலா? என்று கேட்போம். பறவைகள், விலங்குகள் போல உண்ணாமல் அண்ணாக்கச் சாப்பிடுங்கள். மனிதனும், தேவனும் உயர்திணையாளர்கள், பகுத்தறிவு உள்ளவர்கள். எப்படி உணவு உண்ணவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி அனைவரும் அண்ணாக்கச் சாப்பிடப் பழகிக்கொள்ளுங்கள்.

இன்றுமுதல் தண்ணீர், டீ, காபி போன்ற பானங்களைத் தம்ளர்களில் (உலோகப் பாத்திரங்களில்) வாயில் வைத்து எச்சில் ஆக்கிக்குடிக்காமல் நாகரீகமாக ஆதாவது அண்ணாக்கக் குடித்துப்பழகுங்கள். கண்ணாடிப்பாத்திரங்களில் விளிம்பு இல்லை ஆதலால் அண்ணாக்க குடிக்கமுடியாது. உலோகத் தம்ளர்களில் விளிம்பு வைத்திருப்பது அண்ணாக்கக் குடிப்பதற்காகத்தான். 2ஆவது இட்லி தோசை போன்றவற்றை புட்டு சட்னியைத் தொட்டு வாயில் அண்ணாக்கப் போட்டுச் சாப்பிடுங்கள், இது சரியாக வந்துவிடும். 3ஆவதாக சாதம் சாப்பிடுவதையும் கெட்டியாகச் சாப்பிட்டுப் பழகுங்கள். 4ஆவது பாத்திரத்தில், தட்டில் பாயசம் சாப்பிடுவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். கெட்டியாக உள்ளவரை சாப்பிட்டு விட்டு அதில் வடை, அப்பளம் அல்லது சாதம் சேர்த்துப் பிசைந்து, அண்ணாக்கச் சாப்பிடலாம். கொஞ்சம் காலதாமதமாகும். இவையாவும் பாத்திரங்களில் சாப்பிடுவதற்கேயாகும். இலைகளில் எச்சிலாக்கிச் சாப்பிடலாம். என்னைப் போன்றவர்கள் இலைகளிலுமே அண்ணாக்கவேதான் சாப்பிடுவோம். அதற்குக் காரணம் பழக்கமேதான்.

சாப்பிடும்போது செய்யக்கூடாதவை: சாப்பாட்டிற்கு உபயோகமாகாத வார்த்தைகளைப் பேசுதல், சிரித்தல், அபானவாயுக்கழித்தல், உண்ணும்போது இடையிடையே உப்பு, நெய் போன்றவைற்றைத் தானே படைத்துக்கொள்ளல், நாய், பன்றி, பருந்து, கழுகு, கோழி, காகம் மற்றும் பூப்புடையவள், புலையர், ஈனர் தீட்சையில்லாதவர் என்பர்களைப் பார்த்தல் கூடாது.

புசிக்கும்போது அன்னத்திலே மயிர், ஈ, எறும்பு, கொசு, முதலியன காணப்பட்டால், சிறிதன்னத்துடன் புறத்தே நீக்கிவிட்டு, கை கழுவிச் சுத்திசெய்து, புசித்தல் வேண்டும். சாப்பாடு முடிந்ததும் எழுந்து வீட்டுக்குப் புறத்தேபோய்க் கைகழுவி விட்டு வாய்கொப்பளித்து, கை, கால்களையும் கழுவி ஆசமனம் செய்து திருநீறணிக!

உச்சிட்டத்தை அகற்றல், சாப்பிட்ட இலையை எடுத்தெறிந்து விட்டுக் கைகழுவிக் கொண்டு, உச்சிட்டத்தானத்தைக் கோமயம் சேர்ந்த தண்ணீர் தெளித்து இடையே கையை எடாமலும், முன் தீண்டியவிடத்தைப் பின்பு தீண்டாமலும் புள்ளியில்லாமலும், மெழுகிப் புறத்தே போய்க் கைகழுவி விட்டுப் பின்னும், அந்த தானத்திலே தண்ணீர் தெளித்து விடல்வேண்டும்.

சாப்பிட்ட, வாக்குசுத்தியின் பொருட்டு இல்வாழ்வோர் தாம்பூலம் ஒருதரம் மாத்திரம் புசிக்கலாம், துறவிகள் கிராம்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, வால்மிளகு இவற்றுள் ஏதாவது ஒன்றைப் புசிக்கவேண்டும்.

சாப்பிடும்போது விளக்கவியின் சாப்பிடாதிருந்து அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை மானசமாகச் செபித்துக் கொண்டிருக்கவும். காலை, மதியம், இரவு ஆகிய காலங்களில் குறிப்பிட்ட நேரத்தில் சாப்பிடுவது நல்லது. நோய் அணுகாது. அவ்வாறு சாப்பிடும்போது அரைவயிறு அன்னமும், காய்கறிகளும், கால்வயிறு தண்ணீர், கால்வயிறு காற்றுத்தங்க இடம் வைக்கவும். யோகி ஒருவேளையும், போகி இரண்டு வேளையும், ரோகி மூன்று வேளையும் சாப்பிடுவார்கள் என்று கூறுவதுண்டு.

சயனம்

சயனம் என்றால் தூங்குவது; கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று திசையிலும் தலை வைத்து சிவபெருமானை சிந்தித்துக் கொண்டு, வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைக்கலாகாது. இரவு 9-00 மணிக்கெல்லாம் தூங்க ஆரம்பித்து அதிகாலை 3-30 மணிக்கெல்லாம் எழுந்திருத்து மலசலமோசனஞ்செய்து, குளித்து, அநுட்டானஞ்செய்து, 4-00 மணிமுதல் பிராமி முகூர்த்தம், பிராணாயாமம் செய்ய ஏற்ற காலம். மற்றவர்கள் சிவத் தியானத்திற்கும், மனத்தெளிவிற்கும் ஏற்ற நேரம். மந்திரக்கிரியையோடு ஸ்நானவிதி, சந்தியாவந்தனவிதி, பூஜாவிதி, போஜனவிதி ஆகியவற்றை குருமுகமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஆதீனப் பணிகள்

1. ஆன்மார்த்த சிவபூஜை மூர்த்தி அருள்மிகு மங்களாம்பிகை சமேத வாஞ்சீச்சுவர சுவாமிக்கு காலையும், மாலையும் சுவாமிகளே பூஜை செய்தல்.
2. நாட்டுக்கோட்டை நகரத்தார், உறுதிக்கோட்டை வட்டகை நகரத்தார், முறையூர் வட்டகை நகரத்தார், ஏம்பல் அண்டக்குடி நகரத்தார் இவர்களின் பெண்களுக்கு சைவசமய தீட்சை செய்வித்தல்.
3. சைவர்கள் மற்றும் இதரவகுப்பு மெய்யன்பர்களுக்கும், ஆண், பெண் வேற்றுமை இன்றி சிவதீட்சை செய்து வைத்தல்.
4. நித்திய பூஜை நிதித்திட்ட உபயதாரர்களின் நலன்வேண்டி பூஜை, அருச்சனை செய்து, பிரசாதம் வழங்கல், அல்லது அனுப்புதல்.
5. ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை திதியில் மஹா குரு பூஜை நடத்துதல்.
6. மாதாந்திர பிரதமைத் திதியில் குருமுதல்வர் சிலைக்கு சிறப்பு வழிபாடு செய்தல்
7. ஸ்ரீ வரம் தரும் விநாயகர் மற்றும் ஸ்ரீ வடக்கு வாசல் செல்வி மங்களாம்பிகை அம்மன் கோவில்களுக்கு தினசரி பூஜை நடத்துதல்.

நன்றே செய்மின் இன்றே செய்மின்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சமயிகளே கேளுங்கள்!

பிறப்பதும், சிறிது காலம் இருப்பதும், பிறகு இறப்பதும், மனித வாழ்க்கை. பிறந்தவர் அனைவரும் இறப்பதும் நிச்சயம் என்றாலும் அக்கூட்டத்தில் ஒருவனல்ல நீ. உனக்கு வாழ்க்கையின் குறிக்கோள் ஒன்றுண்டு. அதுதான் சிவபெருமான் திருவடிப் பேற்றைப் பெறுவது. அதற்குத் தடையாவன யாவும் உணக்குப் பகைப்பொருளே. பகைப்பொருளை விட்டு நீங்குவதே புத்தியுடையான் செயல்.

உனக்கு உறவானது எதுவோ? அதனைப் பற்றிக்கொள். அவ்வுறவே உன்னை நன்னெறிப்படுத்தி உய்விக்கும். உனக்கு உறவானவை திருநீறு, உருத்திராக்கம், ஸ்ரீ பஞ்சாக்கரம் ஆகியன. இச்சாதனம் பற்றி நிற்பதால் எம்பிரான் தமராகிய அடியார் உறவுகிட்டும். அவரால் சிவபெருமான் கிடைப்பான். குருவால் சிவனருள் கிடைக்கும். சிவபெருமான் குருவடிவில் வந்து பாசநீக்கம் செய்து சிவப்பேற்றை உனக்கு வழங்குவான். உண்மையான விடுதலையை அப்பொழுது நீ பெருவாய். அதைத்தான் வீடு பேறு என்பது. வேதம், சிவாகமம், தோத்திரம், சாத்திரம் ஆகியன சிவவாக்கு என்று கூறப்பட்டுள்ளது. சிவவாக்கைப் புறக்கணிப்பதும், பழிப்பதும் சிவத்துரோகமல்லவா? அச்சிவத்துரோகத்தைச் செய்யத் தூண்டுவோர் யாவராயினும், அவர் எவ்வளவு பெரியவராயிருந்தாலும் அவரை நஞ்செனக் கருதி ஒதுக்கு. அதுவே மும்மையிலும் உனக்கு நன்மையைத் தரும்.

மேன்மைக்கொள் சைவநீதி

விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

அன்பர்களுக்கு அரிய செய்தி

துலாவூர் ஆதீனம் ஒரு வர்த்த நிறுவனமன்று தலைசிறந்த சைவசமயக் கொள்கையைப் பரப்பும் தொண்டையே தம் குறிக்கோளாகக் கொண்ட நிறுவனம்.

குருமுதல்வர் சகலாகம சாரங்க கிரஹத்தையும், பின் 12-ஆவது ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளை சிவஞானசித்தியார், திருவருட்பயன் உண்மை நெறி விளக்கம். ஆகிய சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை செய்தருளியும்; பாண்டியநாட்டிற்கு வந்து பின், 19-ஆவது சுவாமிகள் சேதுபுராணம், திருப்பரங்கிரி புராணம் சிவபுண்ணியத் தெளிவு, ஆகிய செய்யுள் நூல்களையும் அருளிச் செய்து சைவமும் தமிழும் தழைக்கச் செய்தார்கள்.

இறைவனை வணங்கும் பண்பினை இளைஞர்களிடம் வளர்க்கும் கல்விதான் அவசியம் இதை அரசு செய்யவில்லை எனவே பெற்றோர்கள்தான் செய்யவேண்டும் திருநீறு, உருத்திராக்கம், அனுட்டானம், பஞ்சாட்சரம் ஜெபம், குரு, லிங்கசங்கம வழிபாடு ஆகியவற்றை முறைப்படி செய்யமுடியாவிட்டாலும், முடிந்தவரை செய்ய இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சைவசமயத்தைச் சார்ந்த நமக்கு சைவசமய அடிப்படை ஒழுக்கங்கள் நம்மிடம் இருக்கிறதா? என்று எண்ணிப்பாருங்கள், இல்லையேல் அதனை அறிந்துகொள்ள முயற்ச்சி செய்யுங்கள். பிறகு அதன்படி நடந்து நம் வீட்டையும், நமது உறவினர்களையும் நண்பர்களையும், நாட்டையும் நல்வழிப்படுத்துங்கள். கடவுள் வழிபாடு நம்மை நல்வழிப்படுத்தும்.